MAHOMMEDAN LAW.

மகமதியன் லா.

இஃது

லா பப்ளிஷர்

ஆர் - சுப்பிரமணிய அய்யர் அவர்களால்

இங்கிலிஷ்சட்டங்களிலிருந்து

தமிழில் மொழிபெயர்த்துப் பிரசுரஞ்செய்யப்பட்டது.

புதுப்பதிப்பு.

MADRAS:

PRINTED AT THE PRESIDENCY PRESS.

1903.

Allrights Recerved.]

[Price Rs. 2.

86

லா ரிப்போர்ட்டுகளின் குறிப்புகள்.

லா=லா அல்லது சட்டம்.

ரி=ரிப்போர்ட்.

ப=பக்கம்.

கல்=கல்கத்தா.

பெ=பெங்கால்.

பெம்=பெம்பாய்.

ம=மதராஸ்.

அ=அலகாபாத்.

இ. அ=இந்தியன் அப்பீல்.

செல். ரி=செல்ஸ் ரிப்போர்ட்.

8-மூ-இ-அ=மூர்ஸ் இண்டியன் அப்பீல் 8 வது.

வீ=வீக்கிலி.

நோ=நோட்ஸ்.

பெ. ஹை=பெம்பாய் ஹைகோர்ட்.

விஷய சூசிகை.

I. வார்சு பாத்தியங்கள்.

விஷயங்கள்.	பக்கம்.
A. பொதுவிஷயங்கள்	1
B. ஹுனுவிகளுடைய வார்சுகள்	10
(1) வார்சுகளின் வகுப்புகள்	10
(2) தகப்பன்வழி பந்துக்கள்	17
(3) தாய்வழி பந்துக்கள் அல்லது பெண் வார்சுகள் ...	21
(4) இருவித பாத்தியஸ்தர்கள்	27
(5) பாகபின்னபூரணம்	29
(6) பிதாவிறந்தபிறகு பிறந்தபிள்ளைகள்	30
C. ஷியாக்களுடைய வார்சுகள்...	31
D. வார்சுபாத்தியமடைய யோக்கியதையில்லாதவர்கள் ...	40

II. சம்பந்தங்கள்.

A. சொந்தபார்த்திய நிலைமைகள்	41
(1) பொதுவிஷயங்கள்	41
(2) பிதாபுத்திர சம்பந்தங்கள்	46
B. தகப்பனின் அதிகாரம்	49
C. மைனர் சம்ரக்ஷணம்	51
D. விவாகம்	54
(1) விவாகஞ்செய்கிறவிதம்...	54
(2) விவாகநிஷித்தங்கள்	56
(3) விவாகஞ் செய்யவேண்டியவிதிகள்	58
(4) விவாக ருசு	59
(5) உறுதியில்லாத சட்டவிரோதமான விவாகங்கள் ...	,,
(6) மதப்பிரஷ்டர்களைப்பற்றிய விஷயங்கள்	63
E. விவாகபந்தத்தை நீக்கிவிடுதல்	65
(1) பொதுவிஷயங்கள்	,,
(2) தாலக்	66
(3) தாலக்செல்லும் விதம்...	68
(4) கூலாவும், முபாரத்தும்	70

விஷயங்கள். பக்கம்.

F. ஸ்திரிதனம் 71
(1) பொதுவிஷயங்கள் ... ... ,,
(2) பலமாதிரியான ஸ்திரிதனங்கள் ... ... ,,
G. மைனர்கள் 74
(1) மேஜராகவேண்டிய வயது ... ... ,,
(2) கார்டியன்கள் 75
(3) மைனர்களை சம்ரட்சிப்பது 78

III. சோத்துக்கள்.

A. தானங்கள் 79
(1) பொதுவிஷயங்கள் ... ... ,,
(2) ஹீபா ... ... ,,
(3) மௌஹீப் (தானசொத்து) 81
(4) செல்லக்கூடியதானத்தின் முக்கியநிபந்தனைகள் ... 83
(5) நிபந்தனையின்பேரில் தானங்கள் 84
(6) தானத்தைத்திருப்பி எடுத்துக்கொள்வது 86
B. வாக்ஃப்களைப்பற்றிய சட்டங்கள் 88
(1) பொதுவிஷயங்கள் ... ... ,,
(2) வாக்ஃப்களின் பிரிவுகள் 90
(3) மட்வாலி 94
(4) தாவாசெய்ய சுதந்தரம் 97
(5) தர்மஞ்செய்தவனுடைய கட்டளைகள் 98
C. உயில்கள் 98
(1) பொதுவிஷயங்கள் ... ... ,,
(2) உயிலெழுதிவைத்தவனுடைய ஹோதா ... ... 99.
(3) மரணசாதனப்பொருளைத் திருப்பி எடுத்துக்கொள்வது 102
(4) எக்ஸிக்யூட்டர்கள் 103
(5) எக்ஸிக்யூட்டர்களின் அதிகாரம் 105
D. கிரயத்துக்குவர்ங்க முதற்பாத்தியம் 106
(1) பொதுவிஷயங்கள் ... ... ,,
(2) முதற்பாத்தியங்கொண்டாட யோக்கியதையுள்ளவர்கள் 107
(3) முதற்பாத்தியத்தின் நிபந்தனைகள் ... ... ,,
E. விற்பனை 108
(1) பொதுவிஷயங்கள் ... ... ,,
(2) விற்பனையில் சம்பந்தப்பட்டவர்களின் இஷ்டம் ... 110
அனுபந்தம் 113

☞ தயவுசெய்து இதை உங்கள் சினேகிதர்களுக்குக் காட்ட வேண்டும்.

மதராஸ் - வேப்பேரி - எம். வி. புக் டிபோவிலுள்ள

உபயோகமான

சட்டபுஸ்தகங்கள்.

1.—ஹிந்து லா—தபால்சிலவுள்பட அணா 13.

இதில் ஹிந்துக்கள் செய்கிற விவாகத்தின் பிரிவுகள், விவாகஞ் செய்ய அதிகாரம், விவாகத்தை எப்படியிருந்தால் நிறுத்துவது, விவாகத்தை ரத்துசெய்தல், செய்யக்கூடாத விவாகங்கள், பெண் சாதியை நீக்குவது, தன்சுவாதீனப்படுத்துவது, ஜீவனும்சம் கொடுப்பது, புனர்விவாகம், ஸ்வீகாரமெடுத்துக்கொள்வது, ஸ்வீகாரயோக்கியமுள்ள பிள்ளைகள், ஸ்வீகாரத்துக்குப் பிறகுபிள்ளை பிறந்தால் ஸ்வீகாரப்பிள்ளையின் பாகம், மைனர்கள் விதவைகள் ஸ்வீகாரமெடுத்துக்கொள்வது, ஸ்வீகாரமெடுக்க பெண்சாதிக்கதிகாரங்கொடுப்பது, தீட்டில் சுவீகாரஞ் செல்லாதென்பது, மைனர்களை சம்ரட்சிப்பது, விபசாரியான தாயிடமிருந்து குழந்தையைப் பிரிப்பது, பொதுக்குடும்பம், பிதுரார்ஜித சுவபார்ஜிதசொத்து, பொதுக்கடன், பொதுச்சிலவு, பொதுவரும்படி இவைகள் குடும்பத்தைச்சேர்ந்தஎல்லாருக்கும் பாத்தியமென்பது, துர்வியாபாரக் கடன்கள்பொதுக் குடும்பத்தைச் சேராதென்பது, உயில்கள், ஜீவனும்சம், வைப்பாட்டி, விதவை இவர்களுக்கு ஜீவனும்சம், விபசாரியான விதவைக்கு ஜீவனும்சங் கிடையாதென்பது, பாகம், ஜமீன்சொத்தை பாகிக்கக்கூடாதென்பது, ஊமை, செவிடு, குருடு, குஷ்டரோகி இவர்களுக்கு ஜீவனும்சந்தவிற பாகங்கிடைக்காதென்பது, ஸ்திரிதனம், ஸ்திரிதனபாத்தியஸ்தர்கள், வார்சுகளின் வரிசைக்கிரமங்கள், ஜாதிபிரஷ்டர்களுக்கு வார்சு பாத்தியமில்லையென்பது, பெண்கள் வார்சாவது முதலிய அனேகவிஷயங்களும், அனேக ஹைகோர்ட்டுகளின் தீர்ப்பை யனுசரித்தும் எழுதப்பட்டிருக்கின்றன.

2.—பெரியவிவகார சிந்தாமணி—விலை ரூ. 2—4—0.

இதில் ஸ்டாம்புவிஷயங்கள், ரெஜிஸ்ட்ரேஷன், கோர்ட்டுக் கட்டணம், காலநிர்ணயம், இன்கம்டாக்ஸ், விவசாயத்திற்கு சர்க்காரில் கடன் வாங்குவது, தபால், தந்தி, தந்திமணியார்டர், வட்டிக் கணக்கு, சம்பளக்கணக்கு, வருஷக்கணக்கு இவைகளை சீக்கிறம் கண்டுபிடிக்கிற விதம், பத்திரங்களின்மாதிரி, பத்திரங்கள் எழு வேண்டியவிதம், அதன்ஷரத்துகள், அதற்கு ஸ்டாம்பு விஷயங்கள், கடன்பத்திரம், நொட்டேபாண்டு, அடமானப்பத்திரம், ஒத்திப் பத்திரம், ஈடு, தானசாசனம், மோட்டோபர்பத்திரம் வாடகைப்பத்திரம், போக்கியம், உடன்படிக்கை, ஜாமீன், பாகம், பரிவர்த்தனை, ஸ்வீகாரம், ஸ்வீகாராதிகாரம், முச்சிலிக்கா, அதிகாரப்பத்திரம், வக்காலத்து, பவர் ஆவ் அட்டர்ணி, விடுதலைப்பத்திரம், குத்தகைப் பத்திரம், பொறுப்புப்பத்திரம், விற்பனை, முதலிய அனேகவிதபத்திரங்கள் எழுதும்விதமும், சிவில் கோர்ட்டில் நடத்தவேண்டிய சகலவிஷயங்களும் இதிலடங்கி யிருக்கின்றன.

3.—ரெவினியூ சட்டம்—விலை ரூ. 1—4—0.

ரயத்துவாரி நிலங்களுக்கு தீர்வை போடுவது, சொந்த ஏரி, சர்க்கார்ஏரி, இருபோக சாகுபடி, ஒருபோகசாகுபடி, ஹக்குசாசனம், பட்டாவை மாற்றுவது, நிலங்களை உட்பிரிவுசெய்வது, தர்க்காஸ்து, புரம்போக்கு நிலங்கள், குஸ்திவசூல், கிஸ்திவசூலை நிறுத்தி வைப்பது, ஜமீன்களின் அதிகாரம், வீடுகட்ட சர்க்காரில் நிலம் கொடுப்பது ஐப்தி, எலம், நில விருத்திக்காகவும், உழவுமாடு விதைவாங்குவதற்கும் சர்க்காரில் கடன்வாங்குவது, தண்ணீர்தீர்வை, இனும் நிலங்களுக்குத் தண்ணீர்த்தீர்வை, கிராமக்கணக்குகள், கிராமக்கர்ணம் மணியகாரர்செய்கிற அக்கிரமங்களைத் தெரிவித்தவனுக்குசர்க்காரில் இனும் கொடுப்பது, கலெக்டர் ரெவினியூ போர்ட் முதலானவர்களுக்கு அப்பீல்செய்வது, தீர்வைவஜா, சர்வேவிஷயங்கள், 1865 ஞூத்து 8 வது ஆக்ட்டின்படி நடவடிக்கைகள் முதலிய ரெவினியூ சம்பந்தமான அநேகவிஷயங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

4.—சீவில் லா—விலை ரூ. 2—0—0.

இதில் சிவில் கோர்ட்டுகளிலும், வியாச்சியங்களிலும் நடத்த வேண்டிய சிவில் சம்பந்தமான சகலவிஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

5.—மகமதியன் லா—விலை ரூ. 2—0—0.

இதில் மகமதியர்கள் ஆசரிக்கவேண்டிய கல்யாணம், வார்சு பாத்தியம், வார்சுகளின் பிரிவுகள், வார்சுகளின் வரிசைகள், புருஷன் பெண்சாதிக்குள்ள சம்பந்தங்கள், அவர்கள் ஒருவரை ஒருவர் விலக்குவது, ஸ்திரிதனங்கள், தர்மத்துக்கு சொத்துக்களை விடுவது, விற்பனைகள், பக்கபாத்தியங்கள், உயில்கள், தர்மத்துக்கு விட்ட சொத்துக்களை திருப்பி எடுத்துக்கொள்வது, மைனர்களை ரெட்சிப்பது, மைனர் சொத்துக்களை காப்பாற்றுவது, கார்டியன்கள், அடிமைகள், அடிமைகளை சிறைநீக்கியவர்கள், வேறுமதங்களை யனுசரித்தால் சொத்துச் சேராதென்பது, முதலிய மகமதிய சட்டசம்பந்தமான சகலவிஷயங்களும் அடங்கி யிருக்கின்றன.

6.—கிரிமினல் லா—விலை ரூ. 2—8—0.

இதில், மாஜிஸ்ட்ரேட்டுகள், டிப்டிகலெக்டர்கள், கலெக்டர்கள், செஷன்ஜட்ஜிகள், ஹைகோர்ட்டார் இவர்கள் கிரிமினல் கேசுவிஷயமாய் இன்னின்ன அதிகாரங்களைச் செலுத்தலாமென்றும், போலீசார்கள் இன்னகேசைமட்டும் பிடிக்கலாம் இன்னகேசை விசாரிக்கக்கூடாதென்பது, அப்படிப்பிடித்தாலும் இன்னின்னகேசுகளில் உடனே ஜமீன்வாங்கிக்கொண்டு விடவேண்டுமென்பது, சோதனைபோடுவது, ஜூரி, அசெசர் இவர்களுடைய அதிகாரங்கள், ஹைகோர்ட்டு, பிரிவிகவுன்சில் முதலான விடங்களுக்கு அப்பீல்கள், வக்கீல்கள், குற்றவாளிகள் இவர்களுக்குள்ள சுதர்திரங்கள், சம்மன் கேசு, வாரண்டுகேசு, ஜாமீன்கேசுகள், ராஜியாகிற கேசுகள், குற்றங்களின் தன்மையும், அவைகளுக்கு சிட்சையின் காலங்களும், ஒரு கோர்ட்டிலிருந்து மற்றொருகோர்ட்டுக்கு கேசுகளை மாற்றிக்கொள்வது முதலான கிரிமினல் சம்மந்தமான சகலவிஷயங்களும் அடங்கியிருக்கின்றன.

7.—பக்தசரித்திரம்—விலை அணா 12.

இதில் தெய்வபக்தி, நற்குணம், ஈகை, பச்சாதாபம், பூதத்தயை, நன்றியறிவு, பெரியோர்வணக்கம், அண்டினவரை ஆதரித்தல், உதார குணம், தர்மசிந்தை, முதலான உத்தம குணங்களைக் கொடுக்கக் கூடிய கதைகளோடு சேர்ந்த 18 பக்தர்களின் திவ்யசரித்திரங் களில் அடங்கியிருக்கின்றன.

தினுசுக்கு ஒரேதடவையில் 4 புஸ்தகம் வாங்குகிறவர்களுக்கு ஒருபுஸ்தகம் இனாமாகக் கொடுக்கப்படும்.

☞ இப்புத்தகத்தின் கடைசியில் பார்க்கவேண்டும்.

MAHOMMEDAN LAW.

மகமதியன் லா.

I.—வார்சு பாத்தியங்கள்.

(a) பொது விஷயங்கள்.

1. மகமதியர்கள் ஸுனிகள் (Sunnis) ஷியாக்கள் (Shiahs) என்று இருபிரிவா யிருக்கிறார்கள். அவர்களுக்குள்ள முக்கிய வித்தியாசம் "இமாம்" (Imam) என்பவனைப் பற்றியது தான். "இமாம் என்பவர்" இஸலாம் மதத்தைச் சேர்ந்த இகலோக பர லோக குரு. ஸுனிகள், பலரால் தெரிந்து ஏற்படுத்தப்பட்ட தலைமை யானவருக்கு யோசனை சொல்லுகிறவர்க ளென்றும், ஷியாக்கள், நியமிக்கப்பட்டும் வரிசைக்கிரமமாகவும் வந்த அபோஸ் தர்களுடைய வம்சத்தில் பிறந்தவர்களென்றும் சொல்லுகிறார் கள். மேற்சொன்ன வித்தியாசமான அபிப்பிராயத்தினால் தான் இரண்டுவிதமான வகுப்புகள் ஏற்பட்டு அவர்களுக்குள் வித்தியாச மான சட்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விரண்டு சட்டங் களும் கோரானில் சொல்லப்பட்டிருக்கிற விதிகளுக்கு ஒத்திருந்த போதிலும், பிராபெட்டினாலும், அவருக்கடுத்த சந்ததிகளாலும் சிஷ்ர்களாலும் பின்னால் சொன்ன கட்டளைகளினால் அற்ப வித்தியா சங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

2. ஷியாக்கள், கோரானையும், பிராபெட்டினுடைய வாக் கென்று அவருடைய சந்ததிகளால் பரம்பரையாய் சொல்லிக் கொண்டு வருகிற ஐதீகங்களையும் தங்கள் சட்டமாக ஒத்துக்கொண் டிருக்கிறார்கள். ஆனால் தங்களுடைய சொந்த குருக்களாலாவது இமாம்களாலாவது செய்யப்படாமல் மற்றவர்களால் செய்யப்பட்ட தீர்மானங்களை செல்லாதென்று தள்ளிவிடுகிறார்கள்.

3. அடியில் கண்டவைகளை ஸுனிகள் தங்கள் சட்டமாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

(1) கோரான் (Koran), (2) ஹாடிஸ் அல்லது சன்னத் (Hadis or Sunnat). (3) இஜ்மா - உல் - உம்மட். (Ijmaa-ul - Ummat) (4) கியாஸ் (Kyas).

(1) "கொரான்" என்பது மகமதியர்களின் வேதம். (2) "ஹாடிஸ்" அல்லது சன்னத் என்பது, பிராபெட்டினுடைய வாக்கென்று கர்ணபரம்பரையாய் அவரை நேரில் பார்த்த அல்லது கேட்டவர்களால் சொல்லிக்கொண்டு வருகிற சட்டங்கள். (3) "இஜ்மா - உல் - உம்மட்" என்பது பிரதான சீஷர்களாலும், முக்கியமாய் முதல் நான்கு காலிப் (Caliphs) களாலும் ஏற்படுத்தப்பட்ட வியாக்கியானங்கள், விவரணங்கள், தீர்மானங்கள். (4) "கியாஸ்" என்பது மேற்கண்டவர்க ளல்லாத மற்றவர்களால் முன்குறித்த மூன்றுவித சட்டங்களுக்கு ஒத்ததாகச் செய்யப்பட்ட நியாயங்கள்.

4. ஷியாக்களுடைய சட்டங்கள் "ஜாபர் - ஆஸ் - ஸாடிக்" (Jaafar-as-Sadik) என்ற அபோஸ்த இமாமால் ஹிஜ்ரி இரண்டாவது நூற்றாண்டில் ஏற்படுத்தப்பட்டது. ஸுனிகளுடைய சட்டங்கள் பொருக்கி ஒன்றாய்ச் சேர்க்கப்படாமலும், வரிசைக்கிரமமாய் விவரிக்கப்படாமலும் கொஞ்சநாளிருந்தன.

5. ஷியாக்களுடைய வார்சுபாத்திய விதிகள், அரேபியர்களுக்காக அரேபிய பிராபெட்டுகள் செய்திருக்கிற சட்டங்களை ஒத்திருக்கின்றன. ஸுனிகளுடைய சட்டங்கள் விசேஷமாய் பழைய காலத்து அரேபியர்களுடைய சாஸ்திரங்களை விடாது ஒத்திருக்கின்றன; அதினால் பெண்வழி பந்துக்களைக் காட்டிலும் (Cognates) ஆண்வழி பந்துக்களுக்கு (Agnates) அதிக பாத்திய முண்டு. வெகுநாள் வரையில் பெண்வழி பந்துக்களுக்கு பாகங்கிடைக்காமல் "காலிப்" அரசனுக்கு சொத்துக்கள் சேர்ந்து வந்தன. கடைசியில் "முடாசிட்" (Mutazid) என்ற காலிப் அந்தவழக்கத்தை நீக்கி, ஒருசொத்துக்கு காணியாட்சிக் காரர்களாவது, அதற்கடுத்த பாத்தியஸ்தர்களாவது இல்லாமற் போனால் அந்த சொத்து, அதை

முன் அனுபவித்தவனுடைய பெண்வழி பந்துக்களைச் சேரவேண்டு மென்று ஏற்படுத்திவிட்டார்.

6. ஸுனிகள் நான்கு உட்பிரிவாகப் பிரிந்திருக்கிறார்கள். ஹனவிகள் (Hanafis), ஷாவிகள் (Shafeis), மாலிகிகள் (Malikis) ஹன்பாலிகள் (Hanbalis) என்பவர்களாம். இவர்கள் மதக்கோட்பாடு, ஆசாரம், நடவடிக்கை, விவகாரம் இவைகளில் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருப்பதால், அவர்களுக்கு வெவ்வேறு சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

(*a*) ஹனவிகள், "இமாம் ஜாபர் - ஆஸ் - ஸாடிக்" என்பவரிடத்தில் நியாய சாஸ்திரங்களைக் கற்றறிந்த "இமாம் - ஆபு - ஹனிவா" என்பவருடைய சாஸ்திரத்தை அனுசரிக்கிறவர்களா யிருந்தபோதிலும், நடவடிக்கையில் அவருடையதைக் காட்டிலும், அவருடைய சிஷர்கள் ஆபு-யுஸுப், மகமது, இவர்களால் செய்த சட்டங்களை அதிகமாக அனுஷ்டிக்கிறார்கள். "ஆபு-யுஸுப்" என்பவர், "ஹாரன்-ஆர்-ராஷித்" (Harun-ar-Rashid) என்ற காலிப் காலத்தில் பாக்டாடில் பிரதான காஜியாயும், விவகார ஞானமுள்ளவராயு மிருந்ததால், சொத்துக்களை வினியோகஞ் செய்வதில் அவர் ஏற்படுத்திய சட்ட திட்டங்கள் நியாயமானதாய் ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றன. இந்தியாவிலுள்ள ஸுனி மகமதியர்க ளெல்லாம் முக்கியமாய் ஹனவிவகுப்பைச்சேர்ந்தவர்கள். ஷாவிகளும் சிலவருஷங்களாக விருத்தியடைந்து வருகிறார்கள்.

(*b*) ஷாவிகள், இமாம் ஷாவி என்பவருடைய மதத்தை அனுஷ்டிப்பவர்கள்; அவர்கள் சாதாரணமாய் அரேபியா, ஈஜிப்ட், வட ஆப்பிரிகா இந்த தேசங்களிலும், பம்பாய் இராச்சியத்திலுள்ள "போராக்கள்" என்கிற ஜாதிகளிலும், மலேயர்களிலும் காணப் படுகிறார்கள்.

(*c*) மாலிக் ஜாதியார் இமாம்மாலிக் என்பவருடைய மதத்தை யனுசரிக்கிறவர்கள்; அவர்கள் அரேபியாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் வசிக்கிறார்கள்.

(*d*) ஹன்பாலிகள் இமாம் மாலிக் பின் ஹன்பால் என்பவருடைய மதத்தை ஆசரிப்பவர்கள்; இவர்களின் தொகை மிகச் சொற்பந்தான்; இவர்கள் முக்கியமாய் ஹாத்ராமாமாத், ஓமன் என்கிற பிரதேசங்களில் வசிக்கிறார்கள்.

7. ஷியாக்கள் பல உட்பிரிவுகளாகப் பிரிந்திருந்தாலும், இக்காலத்தில் ஷியா வென்கிற பெயர், ஆன்சா ஆஷாரிகள் அல்லது பிரதான பன்னிரண்டு இமாம்களுடைய கோட்பாட்டை யனுசரிக்கிறவர்களுக்கு மட்டுந்தான் உபயோகப் படுகிறது. ஆன்சா-ஆஷாரிகளும் உசுலிகள் ஆக்பாரிகள் என்றிரண்டு கிளையாகப்பிரிந்து வித்தியாசமான இரண்டு சட்டங்களை யனுஷ்டிக்கிறார்கள். உசுலிகள், அதிநுட்பமான வியாக்கினங்களின்பேரில் உண்மைதானென்றுதோன்றுகிற கர்ண பரம்பரையான ஐதீகங்களை மட்டும் ஒத்துக்கொண்டு, விவகாரவிஷயத்தில் சாதாரண ஜனங்கள் செய்த தீர்மானங்களை முழுவதும் அங்கீகரிக்கிறார்கள். ஆக்பாரிகள், தங்களுடைய சாஸ்திர கர்த்தாக்களினால் செய்யப்பட்ட சட்ட வியாக்கியானங்களை முழுவது மனுசரிக்கிறார்கள்.

8. "முடாசாலா" (Mutazalas) என்ற முக்கியமான ஜாதியார் ஒருவர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற சட்டப்படி சில ஆசாரங்கள் மற்ற ஜாதியாரைக் காட்டிலும் பூராய் வித்தியாசப் படுகின்றன. இவர்களுடைய சாஸ்திரத்தை வாசில்-பின்-ஆடா (Wasil-bin-Aata) என்பவர் கிறிஸ்து பிறந்த 8-ம், நூற்றாண்டில் ஏற்படுத்தினார்.

9. பம்பாய் இராச்சியங்களில் காணப்படுகிற கோஜாக்கள், போராக்களைப்போல ஷியாமதசம்பந்தமான இஸ்மெய்லிகள். அவர்கள் வார்சுபாத்திய விஷயத்தில் ஹிந்துக்களுடைய வழக்கத்தை அனுசரிக்கிறார்கள்.

10. போரா (Borahs) க்களைச்சேர்ந்த அனேகர் இஸ்மெய்லிகள் (Ismailias); அவர்கள் கோஜாக்களுடைய (Khojahs) இமாம் மதத்தை அனுசரிக்கிற தில்லை; அவர்களுடைய குருவுக்கு யீமேன் (Yemen) என்றுபெயர். அவர்கள் ஸுலேமானி (Sulaimani)

டாடி (Daudi) என்றிரண்டு வகுப்பாய்ப் பிரிந்து, மகமதியர்களு டைய பொது விதிகளின்படி நடக்கிறார்கள்.

11. இஸ்லாம் மதத்தில் வெவ்வேறு சட்டங்களும் உபசாஸ் திரங்களும் ஏற்பட்டு அதற்குத் தகுந்தபடி ஆசாரங்களும், ஜாதிகளு முண்டாயிருந்த போதிலும், ஒரு ஜாதி அல்லது கூட்டத்தைச்சேர் ந்த ஒருவன், மற்றொருஜாதி அல்லது கூட்டத்தைச் சேர்ந்தால், அவன்தான் சேர்ந்த ஜாதிக் குறிய வழக்கத்தை அனுசரிக்க வேண் டும். ஸுனிஜாதியான் ஷியாமதத்தைச் சேர்ந்தால், ஷியாசட்ட த்தை அனுசரிக்க வேண்டும். அதுபோலவே, ஒரு ஹனுவி ஷாவி யானுலும், ஒரு ஆக்பாரி உஸுலியானுலும் அவர்கள் ஷாவி உஸுலி ஆசாரணைகளை முறையே அனுசரிக்க வேண்டும். மேற்சொன்ன வைகளிலிருந்து மகமதிய சட்டம் முழுவதும், அதை அனுசரிக் கிற மனிதனைப் பொருத்ததா யிருக்கிறது.

12. ஸுனிகளுக்கும் ஷியாக்களுக்கும் வெளிப்பார்வையான வித்தியாச மென்னவென்றால், ஸுனிகள் தொழும்போது தங்க ளிரு கைகளையும் முன்புறம் கட்டிக்கொள்ளுகிறார்கள்; ஷியாக்கள் தங்களிரு கைகளை இரண்டுபக்கத்திலுங் கீழே தொங்கவிடுகிறார்கள். ஹனுவிகள், "ஆமென்" என்கிற வார்த்தையை தொழும்போது மெதுவாய் உச்சரிப்பதும், ஷாவிகள் அதை உறக்கச் சொல்லுவதி லிருந்துதான் இவர்களுக்குள்ள வெளிப்பார்வையான வித்தியாசம் கண்டுபிடிக்கப் படுகிறது.

13. மகமதியர்களின் சட்டப்படி பிதுரார்ஜித சொத்துக்கும் சொந்தமாய் சம்பாதித்த சொத்துக்கும் வித்தியாசங் கிடையாது. பிதுரார்ஜித சொத்தா யிருந்தாலும் சுவயார்ஜித சொத்தாயிருந்தா லும் தற்காலம் சொத்தை யனுபவிக்கிறவன், அதை விற்பனை, ஒத்தி, ஈடு முதலியவை வைக்கவும், விற்பனை முதலிய பராதீனம் செய்ய வும் பாத்திய முண்டு. ஆனால் அந்தப் பராதீனங்கள் அவன் உயி ருடனிருக்கும்போது அமுலுக்கு வரவேண்டும். ஒருவன் தானி றந்தபிறகு தன் சொத்தை இன்னார் அடையவேண்டு மென்று எழு திவைத்தால் அது செல்லாது. அவனிறந்த பிறகு அவனுடைய வார்சுகளின் பாத்தியம் அதிகமாகிறது.

14. ஆண் வார்சுகளுடன் சொத்து பாத்தியமடைய யோக்கியதையுள்ள பெண் வார்சுகளிருந்தால், அவர்களுக்குப் புருஷர்களைக் காட்டிலும் குறைந்தபாகங் கிடைக்கும்; ஆனல் அப்படி வந்த பாகத்தை ஆண்களைப் போலவே அவர்கள் அனுபவிக்கவும், விற்கவும், வரி வசூல் செய்யவும், பராதீனஞ் செய்யவும் பாத்தியமுள்ளவர்க ளாவார்கள். அதுபோலவே இறந்துபோன தன் புருஷன் சொத்தில் பாகத்தை யடைந்த விதவை அவளுக்குக் கிடைத்த பாகத்தை அவளிஷ்டப்படி ஈடு ஒத்தி விற்பனைமுதலியவை செய்யலாம். ஆனல் ஷியாக்களுடைய சட்டப்படி ஸ்தாவர சொத்துக்களில் பாகங்கிடையாதென்று மேலே சொல்லப்பட்டிருக்கிறது.

மகமதியஜாதியில் பொதுக்குடும்ப மென்கிற விஷயமே கிடையாது. (10 கல்-லா-ரி. பக்கம்-603), (10 மூர்-இ-அ-ப. 511). ஆனல், இந்தியாவின் சில பாகத்திலுள்ள மகமதியர்கள் ஹிந்துக்களுடைய அனுஷ்டானப்படி சேர்ந்த பொதுக்குடும்ப வழக்கத்தை யனுசரிக்கிருர்கள். அனேகமாய் பூர்வீகம் ஹிந்துக்களாக விருந்து மகமது மதத்தை யனுஷ்டித்த வர்களான தற்காலம் லெப்பைகளென்றும், மரக்காயர்களென்றும், ராவுத்தன்களென்றும், மாப்பிளைகளென்றும், அம்பலமென்றும், கோஜாக்களென்றும், கட்ச்சி மேமன்களென்றும் சொல்லப்படுகிற வர்களும், மற்ற மகமதியர் பெயர்களை வைத்துக்கொண் டிருக்கிறவர்களும் தங்கள் பூர்வஹிந்து ஆசாரத்தை விடாமல் பொதுக்குடும்ப வழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிருர்கள். (11. வீ. ரி. ப. 45).

ஆனல் ஹிந்து ஆசார அனுஷ்டான மில்லாதவர்கள் சேர்ந்திருந்து பொதுவாய் சொத்தை யனுபவித்தாலும் அப்படிப்பட்டவர்களுடைய குடும்பம் சேர்ந்த குடும்பமாக மாட்டாது. (இ. ல-கல் 10. பக்கம். 562).

ஒரு மகமதியப் பொதுக்குடும்பத்தார் பொதுவான ஒரு முன்னேரிடமிருந்து சொத்தை யெல்லாரும் பொதுவாகவே யடைந்து அனுபவித்துக்கொண்டு வந்தால், அந்தக்குடும்பத்தில் எஜமானகைக் காரியங்களை நடத்துகிறவன் சொத்தைக் கைவசப்படுத்திக்கொண்டு மற்றவர்கள் பாகங்கேட்க காலாவதியாய் விட்டதென்று சொல்ல பாத்தியமில்லை. (வீ. ரி. 11. ப. 45).

15. கோஜாக்கள், கட்ச்சிமேமன்கள் இவர்கள் ஹிந்துக்கள் ஆசாரத்தை யனுசரிக்கிற தில்லையென்று திருப்திகரமான சாட்சிகளால் ருசுச்செய்யாவிடில் ஹிந்துக்கள் வழக்கப்படி தான் வார்சு பாத்தியதையையும், சொத்துபாத்தியதையையும் அடையவேண்டுமென்று பம்பாய் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள், (Perries-o-cases பக்கம். 110), (12. பெ. 11. C. R. ப. 294) (இ. ல. ரி. பெ. 3. ப. 34.), (இ. ல. ரி. 13. பெ. ப். 280),

அநாசாரயானதும், மகமதிய சட்டத்தினால் விலக்கப்பட்டதுமான வழக்கத்தின்பேரில் வார்சுபாத்திய உரிமைபாராட்டுதல் செல்லாததாகும். (இ. ல. ரி. கல். ப. 149.)

16. ஒருவனிறந்து போகும்போது, அவனுக்கடுத்த வார்சுகளும், அந்த வார்சுனால் சம்பந்தப்பட்ட பந்துக்களுமிருந்தால், அப்படிப்பட்ட பந்துக்கள், அடுத்த வார்சுகளிருக்கும் போது இறந்தவன் சொத்தை யடையமாட்டார்கள். உதாரணமாக:—ஒருவனிறக்கும்போது ஒரு பிள்ளையும், ஒருபேரனு மிருந்தால், அந்தப்பேரன் தகப்பனிருக்கும்போது பாட்டன் சொத்தையடைய பாத்தியமடைய மாட்டான். ஆனால், ஸுனிகள் வழக்கப்படி தாயாருடன், சகோதரர் சகோதரிகள் ஏககாலத்தில் ஒருவன் சொத்துக்கு வார்சாகிறார்கள்.

17. எல்லா மகமதியர்களிலும் வார்சுபாத்தியம் சமீபவார்சுகளுக்குத்தான் முதலில் கிடைக்கும். ஆனால் சிலவிஷயங்களில் அந்தந்த வகுப்பார் அற்பவித்தியாசம் கொண்டாடுகிறார்கள். அந்த வித்தியாசம் அவரவர்களுக்குள் ஏற்பட்டிருக்கிறவார்சு பாத்திய வரிசைக்கிரம வித்தியாசத்தினால் ஏற்பட்டிருக்கிறது. உதாரணமாக:—ஸுனிகளில் சமீபவார்சுகள், பந்துசகள் (பெண்வம்சத்தைச் சேர்ந்தவர்கள்) என்று இரண்டுவித பாத்தியஸ்தர்கள் ஏற்பட்டிருக்கிறார்கள். அந்தபாத்தியஸ்தர் ஒவ்வொருவரும் பின்வம்சஸ்தர்கள், முன்வம்சஸ்தர்கள், இரக்த உறவினர்களென்று மூன்று உட்பிரிவாயிருக்கிறார்கள். இந்தப்பிரிவுகள் வார்சுகளின் வரிசைக்கிரமத்தைக் காட்டுவதற்காகவே ஏற்பட்டிருக்கின்றன. ஏற்பட்டிருக்கிற விதிகளும் வார்சுகளின் அந்தந்த வகுப்பைக் குறிக்குமேயொழிய, வெவ்வேறான வகுப்பிலுள்ள வார்சுகளைப்பற்றிச்சொல்ல

மாட்டாது. அதாவது:—ஒருவனிறந்து போகும்போது அவனுக்கு ஒரு புத்திரனும், ஒரு பேரனுமி (பிள்ளையின் பிள்ளை) ருந்தால், இருவரும் ஒரேவகுப்பைச் சேர்ந்த பாத்தியஸ்தர்களாயிருந்தபோதிலும் பிள்ளைக்குப் பேரனைக் காட்டிலும் அதிக பாத்தியமுண்டு.

பாகிக்கக்கூடிய சொத்தை (ஒருவனுக்கு பிள்ளை யிறந்துபோயிருந்தால்) பேரன் அவன் சொத்தையடைவானே யொழிய அவன் தகப்பனுக்குக் கிடைக்கமாட்டாது. ஏனென்றால் தகப்பன் முன் வம்சஸ்தனானதால் இரண்டாவது வகுப்பு பாத்தியதையை யடைகிறான்.

18. ஷியாக்களும் மூன்றுவகுப்பு வார்சுகளாகப் பிரிந்திருக்கிறார்கள். ஆனால் அவர்களில் சமீபவார்சுகள் (பிள்ளைபேரன்முதலியவர்கள்) பந்துக்களென்கிற வித்தியாசங் கிடையாது. மேற்கண்ட மூன்று வகுப்பு வார்சுகளும் தனித்தனியே இரண்டுபிரிவாகப் பிரிந்திருக்கிறார்கள். ஒரு மனிதனுடைய பெற்றோர்களும், பின்சந்ததியார்களும் முதல் வகுப்பைசசேர்ந்த பாத்தியஸ்தர்களாக இரு உட்பிரிவில் அடங்கியிருக்கிறார்கள். அதுபோலவே ஒருவனிறந்துபோகும்போது அவனுக்குக்கொள் பேரனும், பாட்டனும், சகோதரனு முயிருடனிருந்தால், பாட்டன் சகோதரன் இவர்களைக் காட்டிலும் கொள்பேரன் சொத்தையடைவான். ஆனால் அவனுக்குத்தகப்பனிருந்தால் கொள்பேரனைக் காட்டிலும் தகப்பனுக்கு அதிகபாத்தியமுண்டு. ஒருவன் சொத்துக்கு, அவன் சகோதரர்களின் பேரன்களும், பாட்டனு மிருந்தால் இவர்கள் சமபாகஸ்தர்கள். பொதுவாய் ஸுன்னிகள் புருஷவார்சுகளில் சமீபமான வார்சுகளுக்குச் சொத்து முந்திச்சேருமென்றும், ஷியாக்களில் ஆண் பெண் வித்தியாசமின்றி யார் சுவான் தாரனுக்கு அதிசமீப சந்ததியாயிருக்கிறார்களோ அவர்களுக்குத் தான் சொத்து பாத்தியம் முன்னுகக் கிடைக்கு மென்கிறார்கள். உதாரணமாக, ஸுன்னிகள் மதப்படி A. என்பவன் இறந்து போகும்போது அவனுக்கு சகோதரன் பிள்ளையும், சகோதரன் பேரனும், பெண் வயிற்றுப் பேரனுமிருக்கிறார்கள். சகோதரன் பிள்ளை ஆண் சந்ததியைச் சேர்ந்த சமீப வார்சாயிருப்பதால் அவனுக்கு சொத்துக் கிடைக்கும். ஷியாக்க

னுடைய மதப்படி பெண்வயிற்றுப் பேரன் இரத்தக் கலப்பான சமீபவார்சா யிருப்பதால் அவனுக்குத்தான் அவன் சொத்துச் சேரும்.

19. பொதுவாக ஸுனிகளும் ஷியாக்களும் ஒரு வார்சுக்கு பிரதி நிதியாக நிற்கிறவர்களை ஒப்புக்கொள்ளுகிற தில்லை. உதாரணமாக:—A. என்பவனுக்கு B. C. என்ற இருகுமாரர்களிருந்தார்கள். அவர்களில் B. என்பவன் இரண்டுபிள்ளைகளை வைத்துவிட்டு இறந்து போகிறான். அதன் பிறகு A. இறந்து போனால் B. யின் பிள்ளைகள் தகப்பனுக்குப் பிரதி நிதிகளாயிருந்து சொத்தையடைய பாத்திய மில்லை.

A. என்பவனுக்கு B. C. என்கிற பிள்ளைகள் இருக்கிறார்கள் B. க்கு இரண்டு பிள்ளைகளும், C. க்கு மூன்று பிள்ளைகளும் இருக்கிறார்கள். A. சாகுங்காலத்தில் B. C. உயிருடனிருக்க வில்லை. ஷை ஐந்துபேரன்களும் பாட்டன் சொத்தை சமபாகமாகப் பிரித்துக்கொள்ள வேண்டுமேயொழிய தகப்பன் பாகத்தையொட்டிப் பிரிக்கக்கூடாது. ஆனால் ஒருவனுக்குப் பதிலாக பிரதி நிதியாக நிற்கும் பாத்தியம் சில சந்தர்ப்பங்களில் பந்துக்கள் வார்சாக ஏற்படுங் காலத்தில் கொண்டாடப் படுகிறது. தாய்வழியைச் சேர்ந்த மாற்றாஞ் சகோதரிகள் அவர்களுடைய தாய்க்குப் பிரதிநிதியாக நின்று அவர்களுக்குக் கிடைக்கவேண்டிய சொத்தை யடைகிறார்கள்.

20. ஷியாக்கள், ஷாவிகள், மாலிகிகள், இவர்கள் ஜேஷ்ட குமாரனுக்கு ஜேஷ்டபாகம் கொடுப்பதை ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது தகப்பன் சொந்தமாக உபயோகித்து வந்த கொரான், குதிரை, ஆயுதங்கள், வஸ்திரங்கள் முதலிய சாமான்களை ஜேஷ்டகுமாரனுக்கு பாகத்துடன் சேர்த்து அதிகமாகக் கொடுக்கிறார்கள். ஹனாவிகள் ஜேஷ்டபாகம் கொடுக்கிற தில்லை. இந்தியாவில் சில மகமதியக் குடும்பங்களில் சொத்து முழுவதும் ஜேஷ்டகுமாரன் அடைவது வழக்கமா யிருக்கிறது. இஸ்மெய்லிகள் ஜேஷ்டபாகத்தை ஒத்துக்கொண்டு அதன்படி கொடுக்கிறார்கள்.

21. ஒரு குழந்தையின் தாய்தகப்பன்களில் யாராவதொருவர் மகமதியராயிருந்து மற்றவர் வேறுமதத்தைச் சேர்ந்தவராயிருந்

2

தாலும், அக்குழந்தை மேஜராகிறவரையில் மகமதியஜாதியென்றே எண்ணப்படும். அதன்பிறகு அவனிஷ்டப்படி எந்த மதத்தையே னும் அனுஷ்டிக்கலாம். ஆனல் சொத்துபாத்தியம் அந்த மைனர் அனுசரிக்கிற மதத்திலிருந்து ஏற்படுகிறது.

22. ஒரு மகமதியன் இறந்துபோனல் அவன்வார்சுகள் அடி யில்கண்ட விஷயங்களுக்காக சிலவுசெய்ததுபோக பாக்கிசொத்தை பங்கிட்டுக் கொள்ள வேண்டும். அதாவது:—முதலில் இறந்தவ னுடைய உத்தரகிரியைகளுக்காகச் செய்யவேண்டிய சிலவுகளுக்காக வும், அதன்பிறகு கடன்களையும், சாகும்போது தன்னிஷ்டமாய் கொடுத்த தானங்களையும் இறந்தவர் சொத்தில் கழித்து மீதியை வார்சுகள் எதாபாகமாக பங்கிட்டுக் கொள்ளவேண்டும். கடனை கொடாமல் பிரித்துக்கொண்டால் அவர்களுடைய பாகத்தின் வீதா சாரப்படி கடனை அவரவர்கள் கொடுக்க கடமைப் பட்டவர்கள்.

23. வார்சுபாத்திய மடைய சட்டப்படி யோக்கியதையுள்ள வர்கள் சொத்துவேண்டியதில்லையென்று சொல்லக்கூடாது; ஆனல் ஒருவன் அப்படித்தனக்கு சொத்துவேண்டிய தில்லையென்று நிரா கரித்தாலும், அவனிறந்த பிறகு அவனுடைய வார்சுகள் காலா வதி தோஷம் வருவதற்குள், வேண்டாமென்று நீக்கின சொத்தைக் கேட்க பாத்தியமுண்டு.

24. மகமதியசட்டப்படி சொத்து ஒருவன் வசத்திலிருக்கும் போது அவனுடைய வார்சுகள் அவனிருக்கிறவரையில் அந்தசொத் தின் பலனையடைய பாத்தியமில்லை; ஒருவன் தன் சொத்தை தான் இறந்த பிறகு தன் வார்சுகளாவது, வேறு யாராவது அடையலா மென்று ஏற்பாடு செய்தாலும் செல்லும். அதை மகமதிய சட்டம் கண்டிக்காது.

(B) ஹனுவிகளுடைய வார்சுகள்.

1-வார்சுகளுடைய வகுப்புகள்.

25. ஸூனிகள் மூன்று வகுப்பு வார்சுகளை ஒத்துக்கொண் டிருக்கிருர்கள். அதாவது:—(1) ஸாவில்-புருஸ் (Zav - il - Fu

ruz) கொரானில் பாகயோக்கியர்க ளென்று குறிப்பிட்டிருக்கிற பங்காளிகள். (2) அஸாபா (Asabah) தகப்பன்வழி பந்துக்கள் அதாவது:— பிள்ளை, பேரன் முதலியவர்கள். (3) ஸாவில்அர் ஹாம் (Zav - il - Arham) பெண்வழியைச் சேர்ந்த பந்துக்கள்.

26. கொரானில் சொல்லப்பட்ட பாகஸ்தர்கள், ஒரு மக மதிய னிறந்தவுடன் தங்கள் பாகத்தை யெடுத்துக்கொண்ட பிறகு தான் அவன் பிள்ளைகள் மீதிசொத்தை பாகித்துக்கொள்ள வேண் டும். பிள்ளைகள், பேரன்கள் முதலியவர்களில்லா திருந்தால் அந்த சொத்தை கொரான் பாகஸ்தர்களே யடைவார்கள். கொரான் பாக ஸ்தர்களாவது, பிள்ளை பேரன்களாவ தில்லாதிருந்தால் இறந்த வன் சொத்துக்கள் பெண்வழி பந்துக்களுக்குச் சேர்ந்துவிடும்.

27. கொரானில் சொல்லப்பட்ட பாகஸ்தர்கள் 12-பேர்கள். அவர்களில் ஆண்கள் நான்கு, பெண்கள் எட்டு. அவர்களாவன: இறந்தவனுடைய (1) தகப்பன், (2) பாட்டன் (தகப்பனின் தகப் பன்), (3) ஒரே தாய் வயிற்றிற்பிறந்த சகோதரன் (4) இறந்தவர் பெண்ணுயிருந்தால் புருஷன் இந்த நான்கு புருஷர்களாம். எட்டு பெண் வார்சுகளாவன (1) பெண்சாதி, (2) பெண், (3) பிள்ளை வயிற்றுப் பேத்தி, அல்லது பிள்ளைவழியாய்ப் பிறந்த பெண்கள், (4) தாய், (5) சரியானபாட்டி (தகப்பனுடைய தாய்) (6) சொந்த சகோதரி, (7) தகப்பனுக்கு வேறொருத்தியால் பிறந்த சகோதரி, (8) தாயாருக்கு வேறு தகப்பனால் பிறந்த சகோதரி.

28. ஸுனிகளுடைய ஆசாரப்படி ஒருவனிறந்த பிறகு அவ னுடைய தகப்பனுக்கு மூன்றுவிதத்தில் சொத்துச் சேருகிறது. எப்படியெனில்:—(1) இறந்தவனுக்கு பிள்ளை பேரன் முதலிய ஆண் வார்சுகளிருந்தால், கொரான் பாகத்தை யடைகிறவனாயும், (2) கொரான் பாகத்துக்கு யோக்கியமுள்ள வர்கள்மட்டு மிருந்து பிள்ளை பேரன்க ளில்லாதிருக்கும் போது, ஆண்வழியைச் சேர்ந்த பந்துவாக கோரான் பாகம்போக மீதி சொத்துக்கு வார்சாகவும், (3) இறந்தவனுக்குப் பெண்ணாவது, பிள்ளைவயிற்று பேத்தியா வதுமட்டு மிருந்தால் கொரான் பாகமும், மீதிசொத்தில் சரியான பாகமும் அடைகிறவனாயு மிருக்கிறான்.

29. (*a*) இறந்தவனுக்கு பிள்ளையாவது, பேரனாவது, கொள் பேரனாவது அல்லது வேறே ஆண் சந்ததியாவ திருக்கும்போது அவன் தகப்பனுக்கு அவன் சொத்தில் ஆறில் ஒருபாகங்கிடைக்கும்.

(*b*) அதுபோலவே இறந்தவனுக்கு தகப்பன் அல்லது வேறே ஆண் முன்னோர்களில்லாதிருந்தால் அவனுடைய சொந்தபாட்டனுக்கு அவன் சொத்தில் ஆறிலொருபங்கு கிடைக்கும். வார்சு பாத்தியத்திற்காக, ஹனவிகள் முன் வம்சஸ்தர்களை சொந்தமென்றும், அயல் என்றும் பிரித்திருக்கிறார்கள். தகப்பனுடைய தகப்பனுக்கு சொந்தப்பாட்டனென்றும், தாயின் தகப்பன் அயல் பாட்டனென்றும் பிரிக்கப்பட்டிருக்கிறது. சொந்தமென்றேறபட்டால் நடுவில் பெண்கள் வரக்கூடாது. தகப்பனைப்பெற்றதாய், தாயைப் பெற்றதாய், தகப்பனைப்பெற்ற தகப்பனுடையதாய் இவர்கள் சொந்தப்பாட்டிகளென்றும், தாயைப்பெற்ற தகப்பனுடையதாயை அயல் பாட்டியென்றும் சொல்லப்படுகிறது. ஷியாக்களில் இந்தவித்தியாசங்கள் காணப்படுவதில்லை.

(*c*) இறந்தவனுக்கு குழந்தைகளாவது, பிள்ளைக்கு பிறந்த சந்ததிகளாவது சொந்த தகப்பன் பாட்டன் முதலிய முன்னோர்களாவதில்லாதிருந்தால், அவன் சொத்தில் ஆறிலொருபங்கு அவன் சகோதரனுக்குக் கிடைக்கும். தன்னுடைய அல்லது தன் பிள்ளையினுடைய சந்ததியாவது, தகப்பன் முதலிய முன் வம்சஸ்தர்களாவதில்லாதிருந்து, ஒன்றுக்கு மேற்பட்ட சகோதரரிருந்தால், அந்த சொத்தில் மூன்றில் ஒரு பங்குதான் அப்படிப்பட்ட சகோதரர்களுக்குக் கிடைக்கும்.

(*d*) தனக்காவது தன் பிள்ளைக்காவது வார்சில்லாமல ஒருவளிறந்தால் அவள் புருஷனுக்கு அவள்சொத்தில் இரண்டிலொரு பங்கு கிடைக்கும்; அவர்களிருந்தால் நாலிலொன்றுதான் கிடைக்கும்.

(*e*) தனக்காவது தன் பிள்ளைக்காவது சந்ததியில்லாமல் ஒருவனிறந்துபோனல் அவன் பெண்சாதிக்கு அவன் சொத்தில் நாலிலொரு பங்கு கிடைக்கும்.

(*f*) பெண் வயிற்றுப் பேத்திமட்டுமிருக்கும்போது ஸ்திரி புருஷர்களில் யாராவதிறந்தால் பிழைத்திருப்பவர் அந்த பேத்திக்கு சொத்தைக்கொடாமல் எல்லா சொத்தையும் அடையலாம்.

ஆனால் அவர்களுக்குக் குழந்தைகளாவது, அவர்கள் பிள்ளைக்குப் பிறந்த குழந்தைகளாவதிருந்தால் இறந்தவர் சொத்தில் எட்டிலொரு பாகந்தான் கிடைக்கும்.

சிலசமயங்களில் ஒருவனிறண்டு பெண்சாதிகளை விட்டுவிட்டிறந்தால் அவர்கள் சந்தர்ப்பத்திற்குத்தகுந்தபடி நாலிலொருபங்கு அல்லது எட்டிலொருபங்கு பாகத்தை யடையவேண்டும்.

(*g*) இறந்தவனுக்கு ஒரே ஒரு பெண்ணைத் தவிற வேறு பிள்ளையில்லாதிருந்தால் அந்தப் பெண்ணுக்கு அவன் சொத்தில் பாதி கிடைக்கும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களிருந்தால் மூன்றி லிறண்டு பாகத்தை அவர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

(*h*) இறந்தவருக்குக் குழந்தையாவது அல்லது அவர்பிள்ளையின் ஆண் சந்ததியாவதில்லா திருக்கும்போது, பிள்ளைவயிற்று பேத்தி அல்லது கொள்பேத்திக்கு அவன் சொத்தில் பாதி கிடைக்கும். அவர்கள் இரண்டல்லது அதற்கு மேற்பட்டவர்களிருந்தால், மூன்றிலிரண்டு பாகம் அவர்களுக்குக் கிடைக்கும்.

ஆனால் ஒரே ஒரு பெண் இறந்தவனுக்கிருந்து ஆண்சந்ததிகளில்லாமலிருந்தால், அந்தப்பேத்திக்கு அவன்சொத்தில் ஆறிலொரு பாகங் கிடைக்கும். இரண்டு குமாரிகளிருந்தால் பிள்ளைவயிற்றுப் பேத்திகளுக்கு பாகங்கிடைக்கமாட்டாது.

(*i*) இறந்தவருக்கு சமீப வார்சாவது, பிள்ளைவயிற்றுப் பிறந்த வார்சுகளாவது, தகப்பன் தாய் வழியைச் சேர்ந்த சகோதரர்களாவது சகோதரிகளாவதிருந்தால், அவன் தாய்க்கு அவன் சொத்தில் ஆறிலொரு பங்குதான் கிடைக்கும். அவர்களில்லாதிருந்தால் மூன்றிலொரு பாகங் கிடைக்கும்.

(*j*) வேறு பெண் பாத்தியஸ்தர்களில்லாதிருந்தால் சொந்தப் பாட்டிக்கு ஆறிலொரு பங்கு கிடைக்கும்.

(*k*) சகோதரியின் (தன் சொந்ததகப்பன் தாய்க்குப் பிறந்தவள்) பாகம், ஒருவளாயிருந்து, இறந்தவருக்கு பிள்ளை, பேரன், தகப்பன், சொந்தபாட்டன், பெண், பிள்ளைவயிற்று பேத்தி, சகோதரன் இவர்களொருவருமில்லாதிருந்தால் பாதி பாகம் கிடைக்கும். இரண்டல்லது அதற்கு மேற்பட்ட சகோதரிகளிருந்தால் மூன்றில் இரண்டுபாகங் கிடைக்கும்.

(*l*) தகப்பனுக்கு தன் தாயல்லாத வேறொருத்தியால் பிறந்த ஏக சகோதரிக்கு, மேற்சொன்னவர்களும் சொந்த சகோதரியுமில்லாதிருந்தால் பாதிபாகமும், சொந்த சகோதரியுடனிருந்தால் ஆறிலொருபாகமும், வேறே சமீப வார்சுகளில்லாமல், தன்னுடன் பிறந்த சகோதரிகள் இரண்டல்லது அதற்கு மேற்பட்டவர்களிருந்தால் மூன்றிலிரண்டுபாகமும் அடைகிறார்கள். சொந்தசகோதரிகள் இரண்டல்லது அதற்கு மேற்பட்டவர்களிருந்தால், தகப்பனுக்கு வேறு தாயால் பிறந்த சகோதரிகளுக்கு பாகமே கிடையாது. ஆனல் அவளுக்குச் சகோதரனிருந்தால் கொஞ்சம் பரிகாரமுண்டு.

(*m*) ஒரே தாய் வயிற்றில் வேறு தகப்பனுல் பிறந்த சகோதரிகள் தங்கள் சகோதரனுக்குக் கிடைக்கிற பாகத்தைப்போல் அடைகிறார்கள்.

மேற் கண்டவர்கள் தான் கொரானில் சொல்லப்பட்டிருக்கிற பாகஸ்தர்கள்.

இதனடியில் மேற்கண்டவைகளை விவரமாய் பத்தியாகக்காட்டுகிறோம்.

ஹனுவி ஒருவர் (ஸ்திரீ அல்லது புருஷர்) இறந்துபோனல் அவர் சோத்து அவர் வார்சுகளுக்கு அடியில்கண்ட அம்சமாகச்சேரும்.

வார்சுகளின் பெயர்.	கிடைக்கவேண்டிய பாகம்.
(*a*) **தகப்பன் பாகம்:—**	
இறந்தவருக்கு பிள்ளை பேரன் அல்லது வேறே ஆண் சந்ததியிருந்தால்.	இறந்தவன் சொத்தில் ஆறிலொன்று
(*b*) **பாட்டன் பாகம்:—** (பாட்டன் - தகப்பனின் தகப்பன்).	
இறந்தவனுக்கு தகப்பன் அல்லது வேறே சமீப முன் சந்ததிக ளில்லா திருந்தால்.	ஷை
(*c*) **ஒரே தாய்வயிற்று சகோதரன் பாகம்:—**தகப்பன் வேறிருக்கலாம்.)	
இறந்தவனுக்கு ஒரே ஒரு சகோதரனிருந்து, தனக்காவது தன்புத்திரனுக்காவது சந்ததி யில்லாதிருந் தாலும், தகப்பன் அல்லது பாட்டன் இல்லாமலிருந்தால்.	ஷை
இரண்டல்லது அதற்கு மேற்பட்ட சகோதரரிருந்தால்.	மூன்றிலொன்று.
(*d*) **புருஷன் பாகம்:—**இறந்தவருக்கு பிள்ளை பேரன் முதலிய வார்சுகளிருந்தால்.	நாலிலொன்று.
பிள்ளை பேரன் முதலியவர்களில்லாமலிருந்தால்.	பாதிபாகம்.
(*e*) **பெண்சாதியின் பாகம்:—**இறந்தவருக்காவது அவள்புத்திரனுக்காவது சந்ததியில்லாதிருந்தால்.	நாலிலொன்று.
பெண்சாதி புருஷர்களில் யாராவதொருவர் இறந்துபோய் மற்றவர் பிழைத்திருந்து, இறந்தவருடைய பெண்ணுக்குப் பிறந்த ஒரு குழந்தைமட்டு மிருந்தால் சொத்து முழுவதும் பிழைத் திருப்பவ ருக்குச் சேரும்.	எல்லாசொத்து.

வார்சுகளின் பெயர்.	கிடைக்கவேண்டிய பாகம்.
இறந்த வருக்கு சந்ததியாவது அல்லது அவர் புத்திரனுக்கு சந்ததியாவ திருந்தால்.	எட்டிலொன்று.
(*f*) **பெண்ணின் பாகம் :**—ஏக புத்திரியா யிருந்து வேர ஆண் சந்ததி யில்லாதிருந்தால்.	பாதிபாகம்.
இரண்டல்லது அதற்கு மேற்பட்ட பெண்களிருந்து ஆண்சந்ததி யில்லாதிருந்தால்.	மூன்றிலொன்று.
(*g*) **பேத்தி** (பிள்ளையின் பெண்), **கோள்பேத்தி** (பிள்ளையின் பேத்தி) இவர்களின் பாகம்.	
ஏக பேத்தியாயிருந்து ஆண் சந்ததியில்லாதிருந்தால்.	பாதிபாகம்.
இரண்டல்லது அதற்கு மேற்பட்ட பேத்திகளிருந்து ஆண்சந்ததி யில்லாதிருந்தால்.	மூன்றிலிரண்டு.
ஏக புத்திரியோடு ஏக பேத்திக்கு.	ஆறிலொன்று.
இரண்டு புத்திரிகளோடு இருக்கிற ஏக பேத்திக்கு.	பாகம் கிடையாது.
(*h*) **தாயாரின் பாகம் :**—இறந்தவருக்கு சந்ததியாவது அல்லது பிள்ளையின் சந்ததியாவது இரண்டல்லது அதற்குமேற்பட்ட சகோதரர்களாவது சகோதரிகளாவ திருக்கும்போது.	ஆறிலொன்று.
மேற்கண்டவர் ஒருவரு மில்லாதிருந்தால்.	மூன்றிலொன்று.
(*i*) **பாட்டியின்** (தகப்பனின் தாய்) அல்லது **கோள்பாட்டியின்** பாகம்.	
சமீப வேறு பெண் வார்சுகளில்லாம லிருந்தால்.	ஆறிலொன்று.

வார்சுகளின் பெயர்.	கிடைக்க வேண்டிய பாகம்.
(*j*) **சொந்த சகோதரியின்** (சொந்ததாய் தகப்பனுக்குப் பிறந்தவள்) பாகம் :—ஏகசகோதரியாயும், இறந்தவருக்கு பிள்ளை பேரன் முதலிய வார்சாவது, தகப்பன், பாட்டன், பெண், பிள்ளையின் பெண்(பேத்தி) சகோதரன் இவர்களொருவரு மில்லாதிருந்தால்.	பாதிபாகம்.
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சகோதரிகளுக்கு வேறுவார்சில்லா திருந்தால்.	மூன்றிலிரண்டு.
(*k*) **தகப்பன் வழி சகோதரி** (வேறு தாயால் ஒரே தகப்பனுக்குப் பிறந்தவள்) யின்பாகம் :—ஏக சகோதரியாயும், வேறுசொந்த சகோதரியாவது, முந்தின பாராவில் சொல்லப்பட்ட மற்ற வார்சுகளாவதில்லா திருந்தால்.	பாதிபாகம்.
சொந்த சகோதரியுட னிருந்தால்.	ஆறிலொன்று.
சொந்த சகோதரி இரண்டுபேரிருந்தால்.	பாகங்கிடையாது.
தகப்பன்வழி சகோதரி இரண்டல்லது அதற்கு மேற்பட்டவர்களிருந்து வேறு சமீப வார்சில்லாதிருந்தால்.	மூன்றிலிரண்டு.
(*l*) **ஒரேதாய்க்குப் பிறந்த சகோதரியின் பாகம்** :—(தகப்பன் வேறு இருக்கலாம்.)	இதற்கு முன் பாரா (*c*) யில் சொல்லி யிருக்கிற சகோதர னுக்குக் கிடைக்கிறபடி

2.—சொரான் பாகஸ்தர்களுக்கு போக பாக்கி சொத்தின் வார்சுகளான தகப்பன்வழி பந்துக்கள்.

30. தகப்பன்வழி பந்துக்கள் (1) சொந்த பாத்தியஸ்தர்கள் (2) அன்னியரின் பாத்தியதையால் சொத்து அடைகிறவர்கள், (3) அன்னியருடைய பாத்தியதையோடு தங்கள் பாத்தியத்தை யடைகிறவர்கள் என்று மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(1) சொந்த பாத்தியஸ்தர்கள் மூன்றுவிதம். (*a*) கிரகஸ்தனின் சொந்த சந்ததிகள். அதாவது:—பிள்ளை பேரன் முதலிய ஆண் சந்ததிகள்.

(*b*) கிரகஸ்தனுடைய ஆதிவம்சஸ்தர் அதாவது:—தகப்பன், பாட்டன் முதலிய முன்வம்சஸ்தர்கள்.

(*c*) தகப்பனின் சந்ததிகள். அதாவது:—சொந்த சகோதரர், இரத்தசம்பந்தமான மற்ற சகோதரர்களும் அவர்களுடைய சந்ததிகளும்.

(*d*) சொந்த பாட்டனின் (தகப்பனின் தகப்பன்) ஆண்சந்ததிகள். இவர்கள் எவ்வளவு எட்டின பந்துக்களா யிருந்தாலும் சொத்து பாத்திய முண்டு.

தகப்பன்வழி பந்துக்கள் வார்சுபாத்திய விஷயத்தில் ஒரே வகுப்பு உறவினரா யிருந்தால் அதிக சமீப இரத்த பந்துவுக்கு அதிக பாத்தியமுண்டு. அதாவது:—இறந்தவருக்கு சொந்த சகோதரனும், வேறு தாய்வயிற்றிற் பிறந்த சகோதரனுமிருந்தால், அவன் சொத்தை யடைய சொந்த சகோதரனுக்கு அதிக பாத்தியமுண்டு. இறந்தவருக்கு சகோதரனும் பிள்ளையுமிருந்தால் பிள்ளைக்குச்சொத்துச் சேருமே யொழிய சகோதரருக்குச் சேரமாட்டாது. பொதுவாக முன்னோர்கள் அவர்கள் சந்ததிகள் இவர்களைக்காட்டிலும் ஒருவனுடைய சொந்த சந்ததிகளுக்கு அதிக பாத்தியமுண்டு.

(2) அன்னியரால் பாத்தியதை யடைந்த வர்கள் :—ஒரே வகுப்பில் ஆண் சந்ததிகளோடு இருக்கிற பெண்களை, அன்னியரால் பாத்திய மடைந்தவர்க ளென்றெண்ணப்படும். அவர்கள் நான்கு விதம். அவர்களாவன:—

(*a*) புத்திரருடன் பிறந்த பெண்கள்.

(*b*) பேரன் (புத்திரனுடைய பிள்ளை) அல்லது அந்தவம்சத்தில் பிறந்த ஆண் சந்ததியோடு பிறந்த பிள்ளைவயிற்று பேத்திகள்.

ஒருவனுக்கு பேத்தியும், கொள்பேத்தியு மிருந்தால், பேத்தி பாதிபாகமும், கொள்பேத்திக்கு ஆறிலொன்றும் அவன் சொத்தில்

கிடைக்கும். இரண்டு பேத்திகளிருந்தால் கொள்பேத்திக்கு சொத்து கிடைக்க மாட்டாது.

(c) ஒரே தாய் தகப்பன் வயிற்றிற் பிறந்த சகோதரருடனிருக்கிற சகோதரிகள்.

(d) தங்களுடைய சகோதரருடன் கூடிய ஒரே தகப்பனுக்கு வேறு தாய்வயிற்றிற் பிறந்த சகோதரி.

31. ஒரே அந்தஸ்தில் ஸ்திரீகளும், புருஷர்களு மிருந்தால் புருஷர்களுக்குக் கிடைக்கிற பாகத்தில்பாதி ஸ்திரீகளுக்குக் கிடைக்கும். எப்படியெனில்:—ஒருவருக்கு இரண்டு குமாரர்கள், மூன்று குமாரிகளும், அல்லது இரண்டு சகோதரர்கள், மூன்று சகோதரிகளுமிருந்தால், ஒவ்வொருகுமாரி அல்லது சகோதரிக்கு ஏழில் ஒரு பாகமும், ஒவ்வொருகுமாரன் அல்லதுசகோதரருக்கு ஏழிலிரண்டு பாகமும் அவர் சொத்தில் கிடைக்கும்.

32. சிலசமயங்களில் புருஷர்கள் சொத்துக்கு பாத்தியஸ்தர்களாக வரும்போது அவர்களுடனிருக்கிற சகோதரிகள் சொத்துக்கு பாத்தியமாகிறதில்லை. எப்படியெனில:—ஒருவனிறந்து போகும் போது அவனுக்கு பெண்சாதி, தகப்பனுடன் பிறந்தசகோதரன் ஒருவனும், சகோதரி ஒருவளுமிருந்தால் அவன் சொத்தில் அவன் பெண்சாதிக்குக்கொடுத்ததுபோக மீதியை அவனுடையதகப்பனின் சகோதரன் அடைவான். அத்தைக்கு சொத்துக்கிடைக்காது. எந்த ஸ்திரிகளுக்கு கொரானில்பாகம் ஏற்பட்டிருக்கிறதோ அவர்கள் பாகபோக்கியமுள்ள புருஷர்களுடன் ஒரே அந்தஸ்திலிருந்தால் அவர்களுடன், அந்தஸ்திரீகளுக்கும் பாகங்கிடைக்கும். இங்கு அத்தைக்குக்கொரானில் பாகமேற்படவில்லை யாதலால் எந்தஸ்திதியிலும் அவளுக்கு பாகங்கிடையாது.

33. அன்னியரோடு பாத்தியதை யடைந்தவர்களாவன:—

(a) சொந்தப் பெண்ணாவது, பேத்தியாவது (பிள்ளையின் பெண்) இருக்கும்போதிருக்கிற சொந்தசகோதரிகள்.

(b) சொந்த சகோதரி (சொந்ததாய் தகப்பனுக்கு ப்பிறந்த வர்) களுடனிருக்கிற இரத்தசம்பந்தமான சகோதரி கள். (ஒரே தகப்பனுக்கு வேறொரு தாயால் பிறந்தவர் கள்.)

இறந்தவருக்கு சொந்தசகோதரி (தன்சொந்த தாய் தகப்பனுக் குப் பிறந்தவள்) ஒருவரும், வேறு தாய்வயற்றில்பிறந்த சகோதர ரும், சகோதரிகளு மிருந்தால், சொந்தசகோதரி அவர் சொத்தில் பாதியும், மற்றவர்கள் மீதியை புருஷன் இரண்டுபாகமும், பெண் ஒருபாகமுமாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். இரண்டல்லது அத ற்கு மேற்பட்ட சொந்தசகோதரிக ளிருந்தால் அவர்கள் இறந்தவர் சொத்தில் மூன்றிலிரண்டு பாகத்தை யெடுத்துக் கொள்வார்கள். மீதியை மற்றவர்கள் மேலே கண்டபடி பாகித்துக்கொள்ள வேண் டும். சொந்தசகோதரி ஒருத்தியும், வேறுதாய்க்கும் தன்சொந்த தகப் பனுக்கும் பிறந்தசகோதரி ஒருவளுமிருந்தால் இறந்தவன் சொத்தில் பாதியை சொந்த சகோதரியும், ஆறில் ஒருபாகத்தை மற்ற சகோ தரியும் முதலில் எடுத்துக்கொண்டு பிறகு மிகுந்த சொத்தை சரி பாதியாக அவர்கள் எடுத்துக்கொள் வார்கள். இரண்டல்லது அத ற்கு மேற்பட்ட சொந்தசகோதரிகளும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேறு சகோதரிகளு மிருந்தால், இறந்தவன் சொத்தில் மூன்றிலிரண்டு பாகத்தை சொந்த சகோதரிகளும், மற்ற பாகத்தை மற்ற சகோதரிகளும் சமமாய்ப் பிரித்துக்கொள்ள வேண்டும்.

34. ஒருவனிறக்கும்போது கொரான் பாகம்போக் அவன் பாக்கி சொத்தையடைய அவனுக்கு அனேக பாத்தியஸ்தர்களிருந் தால், அவனுடைய சமீப இரக்த சப்பந்தப்பட்ட வார்சு சொத்தை முதலில் அடைவான். எப்படியெனில்:—ஒருவன், இறந்துபோகும் போது அவனுக்கு ஒரு பெண்ணும், தன் சொந்த தாய் தகப்பனுக்கு ப்பிறந்த வொருசகோதரியும், தன்சொந்த தகப்பனுக்கும் வேறொரு தாய்க்கும் பிறந்த சகோதரனின் மகன் ஒருவனுமிருந்தால், அவன் சொத்தில் சரிபாதி அவன் பெண்ணுக்கும், மற்றொருபாதி அவன் சொந்த சகோதரிக்கும் சேர்ந்துவிடும். ஒன்றுவிட்ட சகோ தரன் மகன் இறந்தவனுக்கு சமீப இரக்தசம்பந்தப்பட்டவனல்லாத தால், அவனுக்கு சொத்துகிடைக்க மாட்டாது. அது போலவே,

இறந்தவனுக்கு சொந்த பெண் ஒருத்தியும், தன் சொந்த தகப்பனுக்கும் தாய்க்கும் பிறந்த சகோதரி ஒருவளும், தன் தகப்பனுக்கு வேறொரு தாயால் பிறந்த சகோதரனொருவனுமிருந்தால், அவன் சொத்தில் பாதியை பெண்ணும், மீதிசொத்தை சொந்தசகோதரியும் அடைவார்கள். சகோதரனுக்கு சொத்துகிடைக்காது.

3. தாய்வழி பந்துக்கள் அல்லது பெண் வார்சுகள்.

35. கொரான் பாகஸ்தர்களாவது, தகப்பன்வழி பந்துக்களாவது, இறந்தவொருவனுடைய சொத்தையடைய வில்லாவிட்டால், தாய்வழிபந்துக்கள் அவரவர்கள்பாத்தியத்திற்குத்தக்கபடி வரிசைக் கிரமமாக அப்படிப்பட்டவன் சொத்தையடைய பாத்தியப்பட்டிருக்கிறார்கள். இறந்தவருடைய, பெண்சாதி அல்லது புருஷனாவது, அவர்சொத்தில் கொரான் பாகத்தை யடைய பாத்தியப்பட்டிருந்தாலும், இறந்தவனுடைய தாய்வழி பந்துக்களுக்கு சொத்தைக் கொடாமலிருக்க முடியாது.

36. தாய்வழி அல்லது பெண்வழி பந்துக்கள் நான்கு வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களாவன :—

(1) பெண்ணின் குழந்தைகளும் அவர்களின் வார்சுகளும், அல்லது பிள்ளையின்பெண்களும் (பேத்திகள்) அவர்களின் வார்சுகளும்.

(2) தாயைப்பெற்ற பாட்டன் அல்லது தாயைப்பெற்ற தாய் முதலிய முன்னோர்கள். (இறந்தவருடைய முன்னோர்களைக் கணக்கிடும்போது நடுவில் பெண்கள் வந்தால் அதற்கடுத்தாற்போல் வருகிற புருஷன் இந்த வகுப்பைச்சேருவான்.)

(3) தன் சொந்த தாய் தகப்பனுக்குப் பிறந்த சகோதரர்களுடைய பெண்கள், சொந்த தகப்பனுக்கு வேறு தாயால் பிறந்த சகோதரர்களுடைய பெண்கள், வேறு தகப்பனால் தன் சொந்த தாய்க்குப் பிறந்த குழந்தைகள், சொந்த சகோதரிகளின் குழந்தைகளும் அவர்களின் வார்சுகளும்.

(4) (ஒரே தாய் வயிற்றில் வேறு தகப்பனுல் பிறந்த) தன் சொந்த தகப்பனின் சகோதரர்கள், சகோதரிகள், அவர்களின் குழந்தைகளும் வார்சுகளும்; இறந்தவனுடைய அத்தைகளும், அவர்கள் குழந்தைகளும், வார்சுகளும்; சொந்த மாமனுடைய பெண்கள், அவர்கள் வார்சுகளும், ஒரே தகப்பனுக்குப் பிறந்த தாயின் சகோதரனு (தாய் வேறிருக்கலாம்) டைய பெண்களும், அவர்களுடைய குழந்தைகளும், வார்சுகளும்.

வார்சு பாத்திய விஷயத்தில் மேற்சொன்ன முதல் வகுப்பார் முதலிலும், அதற்கடுத்தவர்கள் வரிசைக் கிரமமாக ஒருவருக்குப் பின் ஒருவராக சொத்தை யடைய பாத்தியப்படுவார்கள். அந்தந்த வகுப்பிலும் எவன் இறந்தவருக்கு சமீப இரக்தசம்பந்தப்பட்டவரோ அவரே சொத்தை முதலில் அடைவார்.

37. வார்சு பாத்தியமடைய வேண்டியவர்கள் தகப்பன் அல்லது தாய்வழியிலும், வரிசைக்கிரமத்திலும் சமமானவர்களாயிருந்தால், கொரான் பாகத்தையாவது, கொரான்பாகம்போக மீதிசொத்தையாவது அடைய யோக்கியதையுள்ளவர்கள் வம்சத்தில் பிறந்த வார்சு முதல் பாத்தியஸ்தனுவான். தகப்பன்வழி தாய்வழி வித்தியாசப்பட்டால், தாய்வழி பந்துவைக்காட்டிலும் தகப்பன் வழிபந்து இரண்டுமடங்கு சொத்தை யடையவேண்டும்.

38. 36 வது பாரா 1 வது வகுப்பில் சொல்லப்பட்ட வார்சுகளில் எவர் இறந்தவருக்கு அதிசமீபபந்துவோ அவருக்குத்தான் சொத்து முதலில் கிடைக்கும். அதாவது:—A என்பவன் இறந்துபோகும்போது, பெண் வயிற்று பேத்தி ஒருவளும், பிள்ளையின் பெண்வயிற்றுப் பேத்தியுமிருந்தால், பெண்வயிற்றுப் பேத்திக்குத்தான் சொத்து முதலில் கிடைக்கும்.

39. 36 வது பாரா 2, 3, 4, இந்த வகுப்புகளில் சொல்லப்பட்டவர்கள் 37 வது பாராவில் சொல்லியபடி சமமான பாத்தியதையுள்ளவர்களாயிருந்தால் அந்தப் பாராவில் எவருக்கு முதல் பாத்தியம் ஏற்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறதோ அவரே இந்த வகுப்

புகளிலும் முதல் பாத்தியஸ்தராவார். அதாவது:—பெண் வயிற்று பேத்தியின் குமாரனைக்காட்டிலும், பிள்ளைவயிற்று பேத்தியின் குமாரிக்கு அதிக பாத்தியமுண்டு. ஏனென்றால், பிள்ளை கொரான்பாகம் போக பாக்கிசொத்தை யடைய பாத்தியப்பட்டவனானதால் அவன் வம்சஸ்தர்கள் அதிக பாத்தியமுடையவர்கள்.

தகப்பன்வழி தாய்வழி வித்தியாசப்பட்டால், தகப்பன் வழியைச் சேர்ந்தவர் மூன்றிலிரண்டுபாகமும், தாய் வழியைச் சேர்ந்தவர் மூன்றிலொருபாகமும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

40. வார்சுகள் வரிசை அந்தஸ்து எல்லா விஷயத்திலும் சமமானபாத்தியதையுள்ளவர்களா யிருந்தால், அவர்களுக்கு சொத்து அவர்களுடைய எண்ணிக்கையின்பேரிலும், பாலின் (ஆண்பால், பெண்பால்) பேரிலும் கிடைக்கும்.

உதாரணம் (1) இறந்தவன்.

(1) பெண்.	(2) பெண்.	(3) பெண்.
பெண். (இறந்தவன் பேத்தி.)	பெண் (பேத்தி.)	குமாரன்
பெண். (ஷியான்கொள்பேத்தி)	குமாரன் (பேத்தியின் குமாரன்.)	பெண்
இரண்டு குமாரர்கள் (ஷியான் கொள்பேத்தி பிள்ளைகள்.)	பெண். (பேத்தியின் பேத்தி.)	2. குமாரிகள்.

ஒருவன் இறந்துபோகும்போது கொள்பேத்தி வயற்றில் இரண்டு பிள்ளைகளும், இரண்டாவது பெண்ணின் வம்சத்தில் பிறந்த கொள்பேரன் வயற்றிற் பிறந்த ஒரு பெண்ணும், மூன்றாவது பெண் வம்சத்தில் பிறந்த கொள்போத்தியின் வயற்றிற் பிறந்த இரண்டு பெண்களு மிருந்தால், "ஆபுயூஸஃவ்" (Abuyusuf) என்றவர் அபிப்பிராயப்படி அப்படிப்பட்டவன்சொத்தை ஏழுபாகமாகப் பிரித்து ஒவ்வொரு பிள்ளைக்கு இரண்டு பாகங்களும், ஒவ்வொரு பெண்ணுக்கு ஒரு பாகமுமாகப் பிரித்துக் கொடுக்கவேண்டும்.

"ஆபுஹனிவா" (Abuhanifa) என்பவருடைய வேறொரு சிஷ்ய ருடைய அபிப்பிராயப்படி, சொத்தை இருபத்தெட்டு பாகங்களாகப் பிரித்து மூன்றாவது பெண் வம்சத்தில் பிறந்த ஒவ்வொரு பெண்ணுக்கும் எட்டுபாகங்களும், இரண்டாவது பெண் வம்சத்தில் பிறந்த ஒவ்வொரு பெண்ணுக்கு 6 பாகமும், முதலாவது பெண் வம்சத்தில் பிறந்த பிள்ளைகளுக்கு தலைக்கு 3 பாகங்களும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. இவ்விதம் பிரிப்பதற்குக் காரணம் அடியில் காட்டப்பட்டிருக்கிறது, அதாவது:— இறந்தவனுக்கு முதலாவது பெண்வயிற்றுப்பேத்தி ஒருத்தியும், இரண்டாவது பெண் வயிற்றுப் பேத்தி ஒருவளும், மூன்றாவது பெண்வயிற்றுப் பேரன் ஒருவனுமிருந்தால், பேரன் ஏழில் நாலு பாகமும், பற்ற இரண்டுபேத்திகளும் பாக்கி ஏழில் மூன்று பாகத்தை சரியாகப் பகிர்ந்துகொள்ள வேண்டிருக்கும். அதுபோலவே அவர்களின் வார்சுகளும் தங்களுடைய பாட்டன் பாட்டிகளுடைய பாகத்தை யடைவார்கள்.

உதாரணம் (2)



ஆபுயூஸுப் என்றவருடைய அபிப்பிராயப்படி முதல் பெண்ணின் பேரன் சொத்தில் மூன்றில் ஒரு பாகமும், இரண்டாவது பெண்ணின் பிள்ளையும், 3 வது பெண்ணின் பெண்ணும் விவாகஞ் செய்துகொண்டு அவர்களுக்குப் பிறந்த பெண்களுக்கு மூன்றிலிரண்டு பாகமும் கொடுக்கவேண்டும்.

மகமது என்பவரின் அபிப்பிராயப்படி, சொத்தை இருபத்தெட்டு பாகமாகப் போட்டு முதல் பெண்ணின் பேரனுக்கு தாய் வழி பாத்தியத்தால் 6 பாகமும், மற்ற விரண்டுபேத்திகளுக்கு தாய் வழியாக 6 பாகமும், தகப்பன் வழியாக 16 பாகமும் ஆக, 22 பாகங்கள் கிடைக்கும்.

41. வாலா (Wala). மேற்சொன்ன பாத்தியஸ்தர்கள் தவிற வாலா பாத்தியத்தினல் சில வார்சுகள் சொத்தை யடைகிருர்கள். ஹனுவி ஜாதியில் வாலா இரண்டு விதங்கள் அவைகளாவன:—அடிமைகளின் சிறை நீக்கினதினல் உண்டான பாத்தியஸ்தர்கள், ஒருவரை சார்ந்திருப்பதினலுண்டான பாத்தியஸ்தர்கள். ஷியாக்கள் ஸுனிகளுடைய ஜாதியில் ஏற்பட்ட இரண்டு வாலாக்களையும், அதைத்தவிறவேருருவித வாலாவையும் அனுஷ்டிக்கிருர்கள். அதாவது:—ஷியாக்கள் சிறை நீக்கப்பட்ட அடிமைக்கு இரத்த சம்பந்தமான பந்துக்கள் இல்லாமற் போகிறவரையில் சிறை நீக்கினவனுடைய வார்சு பாத்தியதையை நிறுத்தி வைக்கிருர்கள். ஆனல் ஸுனிகள் அந்த பாத்தியதையை சிறைநீக்கினவனுக்கே கொடுத்து விடுகிருர்கள்.

உதாரணம்:—A என்பவன் தன் அடிமையாகிய B என்பவனை சிறை நீக்குகிருன். B என்பவனுக்கு இரத்த சம்பந்தமான பந்துக்களிருந்தபோதிலும், ஸுனிகளுடைய சட்டப்படி அந்த அடிமை இறந்தவுடன் அவன் சொத்துக்களெல்லாம் A என்பவனுக்குத் தான் கிடைக்கும். ஒரு அடிமையை சிறை நீக்கினல், சிறை நீக்கியவன், அந்த அடிமை இறந்தபிறகு அவனுடைய சொத்துக்களை, பிள்ளைபேரன் முதலியவர்கள் (கொரான் பாகம்போக மீதி) சொத்தை யடைகிறதுபோல, அதை அடைய பாத்தியப்பட்டவனுவான். ஏனென்ருல் அவன் பிள்ளைக்குச் சமானமாகிருன். இறந்தவனுக்கு தாயுடன் பிறந்த சகோதரர்கள் முதலிய இரத்த சம்பந்தமான பந்துக்களைக் காட்டிலும் சிறை நீக்கியவனுக்கு அதிகபாத்தியமுண்டு.

42. ஸுனிகள் சட்டப்படி சிறை நீக்கியவரை "முக்கிய காரண பாகஸ்தரென்று" சொல்லுகிருர்கள். சிறை நீக்கியவரில்லாவிட்டால், இறந்துபோன சிறையிலிருந்து விடுபட்ட அடிமையின் புருஷபாகஸ்தர்கள் அவர் சொத்தை யடைவார்கள். பெண் வார்சுகளுக்கு சொத்துச கிடைக்க மாட்டாது; ஸ்திரீகள் அடிமையை சிறைநீக்கியிருந்தால் அப்படிப்பட்ட அடிமையின் சொத்துக்கு அவர்கள் முதல் வார்சாவார்கள். சுதந்தரமடைந்து இறந்துபோன அடிமைக்கு, கொரான் பாகஸ்தர்களும், கொரான்பாகம்போக மீதியை அடையவேண்டிய பாகஸ்தர்களு மில்லாதிருந்தால்,

அவன் சொத்து முழுமையும் பாகஸ்தர்களுக்குச் சமானயான சிறை நீக்கியவனைச் சேர்ந்துவிடும். மற்ற பந்துக்களுக்குச் சொத்து சேரமாட்டாது.

43. ஆனல் இறந்த அடிமைக்கு கொரான் பாகம் அடைய பாத்தியஸ்தரிருந்தால், அவர் பாகம்போக பாக்கிசொத்தை சிறை நீக்கியவன் அடைவான். அந்த அடிமைக்கு பிள்ளை பேரன் முதலிய இரத்த சம்பந்தமான பாகயோக்கியமுள்ள வார்சுகளிருந்தால், சிறைநீக்கியவனுக்கு வார்சுபாத்தியமாய் சொத்துகிடைக்காது.

44. ஸுனிகள், சிறைநீக்கியவனும் அவனுடைய ஆண்வார்சுகளும் அடிமையினுடைய சொத்தை யடைகிற விஷயத்தில் வழக்கமாய் ஏற்பட்டிருக்கிற வார்சுகளின் வரிசைக்கிரமத்தில் சிலமாறுதல்களை யேற்படுத்தி யிருக்கிறார்கள். சாதாரணமாய் ஒருவ னிறக்கும்போது அவனுக்கொரு பிள்ளையும், தகப்பனு முயிருடனிருந்தால், அவன் சொத்தில் ஆறிலொருபங்கை தகப்பனும், மீதிசொத்தைப் பிள்ளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனல் அப்படி யிறந்த அடிமைக்குச் சொந்த தகப்பனும், அவனைச் சிறைநீக்கியவனுடைய பிள்ளையு மிருந்தால் தகப்பனுக்கு சொத்தை கொடாமல் எல்லாச் சொத்தையும் அந்த சிறை நீக்கியவனுடைய பிள்ளை யடைவான். அதுபோலவே, இறந்தஅடிமைக்கு தகப்பனைப்பெற்ற பாட்டனும், அடிமைத்தனத்தை நீக்கியவனுடைய குமாரனுமிருந்தால் பிந்தியவன் அவன் சொத்து முழுமையு மடைவான்.

45. ஆனல் வாலா (Wala) பாத்தியம் புராதன வழக்கமே யொழிய தற்காலம் இந்தியாவில், 1843 ஞூத்து, 5-வது ஆக்ட், 3-வது பிரிவால் அடிமை நீக்கியவனுக்கு அடிமை நீக்கப்பட்டவனுடைய சொத்தில் எவ்விதபாத்தியமும் கிடையாது. இது விஷயமாக பிரிவிகவுன்சிலார் சிறை நீக்கப்பட்ட அடிமையினுடைய சொத்தை அவனுடைய சொந்த வார்சுகள் வரிசைக்கிரமமாய் அடையவேண்டுமே யொழிய, சிறைநீக்கியவனுவது அவனுடைய வார்சுகளாவது, சொந்தவார்சுக ளிருக்கும்போது சொத்தையடையக்கூடாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். (லா-ரி. இ. அப்பீல். பக்கம் 137.)

46. அப்படி சிறை நீக்கப்பட்ட இறந்த அடிமைக்கு சொந்த சந்ததிகளில்லாவிட்டால், அவருடைய முழுசொத்தையும் சிறை நீக்கியவன் அடையலாம்.

47. மேற்சொன்ன வார்சுகள் ஒரு மகமதியனுக்கில்லாவிட்டால், அவனை இறக்கும்வரையில் பரிபாலித்து வந்தவன் அவன் சொத்தை யடையவேண்டும். இரண்டு மகமதியர்கள் அதிகசினேகமாயிருந்து அண்ணன் தம்பிபோல் உறவு கொண்டாடிக் கொண்டிருந்தால், அவர்களில் ஒருவரிறந்துபோய் அவருடைய சொத்தை யடைய மேற்சொன்ன வார்சுகளில்லாம லிருந்தால் சினேகமாயிருந்தவன் அவன் சொத்தை யடையலாம். இதுவரையில் சொன்ன வார்சுகள் ஒருவனுக்கில்லா விட்டால் அவன் சொத்தெல்லாம் உலகத்திலுள்ள எல்லா மகமதியர்களுக்கும் உதவும்படியாய் பொது சொத்தைச் சேர்ந்துவிடும்.

4-இருவிதபாத்தியஸ்தர்கள்.

48. ஒருவனிறந்து போகும்போது அவனுக்கு கொரான் பாகஸ்தர்கள்மட்டு மிருந்து, மற்ற பாகத்தையடைய வேண்டிய வார்சுகளில்லாமலிருந்தால், அவனுடைய சொத்தை கொரான் பாகஸ்தர்கள் முதலில் கொரானில்சொல்லியபடி பிரித்துக்கொண்டு, பிறகு பாக்கி சொத்துக்களையும் மறுபடியும் கொரான் பாகத்தைப் போல் பிரித்துக் கொள்ளவேண்டும்.

முற்காலத்தில் வேறு வார்சுகளில்லாமற் போனபோதும் புருஷன் அல்லது பெண்சாதிக்கு கொரான்பாகந்தவிற வேறுபாகங் கிடைக்காதென்று ஏற்பட்டிருந்தது; ஆனால் இக்காலத்தில் வேறு பாத்தியஸ்தர்கள் இல்லாத விஷயத்தில் பெண்சாதி அல்லது புருஷன் கொரான்பாகமடைவதுடன் மீதிசொத்திலும் பாகமடையலாமென்று ஹைகோட்டார் அவர்களால் தீர்ப்புகள் செய்யப்பட்டிருக்கின்றன.

49. கொரான் பாகத்துடன் மற்ற சொத்திலும், (வேறு வார்சுகளில்லாத சமயத்தில்), பாகம்பெற பாத்திய முள்ளவர்கள் எட்டுப் பெயர்கள். அவர்களாவன;—(1) தாய், (2)பாட்டி, (3)பெண்,

(4) பேத்தி, (5) சொந்த சகோதரி, (6) தகப்பனுக்கு வேறு தாய் வயிற்று சகோதரி, (7) வேறு தகப்பனால் சொந்த தாய்க்குப்பிறந்த சகோதரனும், (8) சகோதரியும்.

மேற்சொன்ன கொரான் பாகஸ்தர்கள் தங்களுக்கு கொரானில் சொல்லப்பட்ட பாகத்தையடைந்த பிறகு மீதிசொத்தை கொரான் பாகத்தை யடைந்த விதமாகவே பிரித்துக்கொள்ள வேண்டும். அதை கீழேவிவரித்துக் காட்டியபடி தெரிந்துக்கொள்ள வேண்டும்.

ஒருவனிறக்கும்போது அவனுக்கு சொத்து ரூபா. 240, பெருமானமுள்ளதா யிருந்தால் அதை அவன் வார்சுகள் அடியில் விவரித்தபடி அதை பிரித்துக்கொள்ள வேண்டும்.

(1) இறந்தவருக்கு பாட்டி ஒருவளும், ஒரே தாய் வயற்றிற் பிறந்த (தகப்பன் வேறு) சகோதரியுமட்டு மிருந்தால் அவர்கள் ஒவ்வொருவருக்கும் முதலில் கொரான் பாகப்படி ஆறில் ஒருபாகம் எடுத்துக்கொள்ளவேண்டும். அதாவது ரூ. 40, அதன் பிறகு மீதியை இருவரும் சரிசமமாக பாகித்துக் கொள்ளவேண்டும்,

(2) இறந்தவருக்கு சொந்தப் பெண்ணும், தாயுமிருந்தால், பெண்ணுக்கு சொத்தில் பாதியும் (120 ரூ.) தாய்க்கு ஆறிலொரு பாகம் (40 ரூ.) முதலில் கிடைக்கும். பிறகு முன்வீதப்படியே பாக்கி சொத்தையும் பிரித்துக்கொள்ளவேண்டும். அதாவது பெண்ணுக்கு ரூ. 60, தாய்க்கு ரூ. 20. ஆகமொத்தம், பொண்ணுக்கு ரூ. 180-ம், தாய்க்கு ரூ. 60-கிடைக்கும்.

(3) இறந்தவருக்கு இரண்டு பெண்சாதிகள், தாய் ஒருவள், மூன்று குமாரிகளிருந்தால், மேற்கண்ட விதமாகவே பிரித்தால் ஒவ்வொரு பெண்சாதிக்கு ரூ. 15-ம், தாய்க்கு ரூ. 42-ம், ஒவ்வொரு பெண்ணுக்கு ரூ. 56-ம் கிடைக்கும்.

(4) இறந்தவருக்கு ஒரு பெண்சாதி, ஒருதாய், ஒரு பெண்ணிருந்தால், அவர்களுக்கு (பெண்சாதி) 4 : (தாய்) 7 : (பெண்) 21, இந்த வீதமாகச் சொத்துக் கிடைக்கும்.

(5) இறந்தவருக்கு தாய் ஒருத்தி, பெண் ஒருத்தி, பிள்ளை வயிற்றுப் பிறந்த பேத்தி ஒருவள் இவர்களிருந்தால், தாய்க்கு ஆறி

லொருபாகமும், பெண்ணுக்கு இரண்டிலொன்றும், பேத்திக்கு ஆறிலொருபங்காக முதலில் பிரித்து, மீதிசொத்தையும் அதேவிதமாகப் பிரித்தெடுத்துக் கொள்ளவேண்டும். அதாவது தாய்க்கு ரூ. 48, பேத்திக்கு ரூ. 48. பெண்ணுக்கு ரூ. 144-ம் கிடைக்கும்.

குறிப்பு:—முன்னால், ஒருவனிறக்கும்போது அவனைச் சேர்ந்த வார்சுகளுக்கு சொத்து எந்த வீதப்படி கிடைக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ அதை கவனித்துப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஒரு வார்சோடு மற்றொரு வார்சு சேர்ந்தால் அந்தவார்சு தனியாயிருந்தால் என்ன சொத்துக் கிடைக்குமோ அந்த சொத்து வேறொருவருடன் சேர்ந்ததினால் வித்தியாசப்பட்டதையும் கவனிக்கவேண்டும்.

50. ஒருவனிறக்கும்போது அவனுக்கு ஒரு பிள்ளையும், ஒரு பெண்ணும், தகப்பனுக்கு வேறு தாய் வயற்றிற் பிறந்த சகோதரன் ஒருவனுமிருந்தால், அவன் சொத்து அந்த சகோதரனுக்குக் கிடைக்கமாட்டாது. பாகஞ்செய்வதற்குள் அவன் புத்திரனிறந்துபோனால் அந்தப் பிள்ளைக்குக் கிடைக்கவேண்டிய மூன்றிலிரண்டு பாகத்தை அவன் பெண்ணும் சகோதரனும் சரிசமமாகப் பிரித்துக் கொள்ளவேண்டும். அப்போது பெண்ணுக்கு நியாயமாய்க் கிடைத்த பாகத்துடன் அப்படி யிறந்துபோன தன் சகோதரனுடைய பாகத்திலும் பாதியை யடைந்து இருவிதபாகமடைந்தவளாகிறாள்.

(5) பாகபின்ன பூரணம்.

51. ஒருவ னிறக்கும்போது அவனுக்கு அனேக வார்சுகளிருந்து அவர்களுக்கு சொத்தை பாகஞ்செய்து கொடுப்பதில் பின்னங்கள் வந்தால் அந்த பின்னங்களை பூரணம் செய்வதற்காக அந்தந்த பாகத்திற்குத் தகுந்தபடி பின்னங்களைக் குறைத்து பாகத்தை அதிகப்படுத்துவது ஸுனிகளுடைய சம்பிரதாயமா யிருக்கின்றது. இதற்கு ஆல் (Aul) என்று பெயர். ஒரு ஸ்திரி இறக்கும்போது, அவளுக்கொரு புருஷனும், இரண்டு குமாரிகளும், தாய் ஒருவளுமிருந்தால், புருஷனுக்கு அவள் சொத்தில் நாலிலொருபாகமும், பெண்களுக்கு மூன்றிலிரண்டுபாகமும், தாய்க்கு ஆறிலொருபங்கும் கிடைக்கும் அதாவது:—மொத்தம் 13/12 பாகமாகிறது. இதில் பின்னம் வருவதால் மொத்தமாக சொத்தை 13 பாகமாகப்போட்

டால் பின்னம் வராமல், புருஷனுக்கு 3 பாகமும், பெண்கள் 8 பாகமும், தாய்க்கு 2 பாகமும் கிடைக்கிறது.

52. ஷியாக்களுடைய வழக்கம் வித்தியாசப்படுகிறது. அவர்கள் யாருடைய பாகம் மாறுதலை யடையக்கூடியதாயிருக்கிறதோ அவர்கள் பாகத்தைக் குறைத்து விடுகிறார்கள். அதாவது:—முந்திய பாராவில் கண்டபடி புருஷன் மூன்றுபாகமும் தாய் இரண்டு பாகமும் எடுத்துக்கொள்ளுகிறார்கள். பாக்கி 7/12 பாகத்தை பெண்கள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(6) பிதாவிறக்கும்போது கர்ப்பத்திலிருந்து பிறந்த பிள்ளைகளைப் பற்றிய விஷயங்கள்.

53. புருஷனை யிழந்த பெண்சாதி அவனிறந்தது முதல் நான்குமாதமும் பத்து நாள்களுக்குள்ளாக மறுவிவாகம் செய்து கொள்ளக் கூடாது. இதற்கு இதத் (Iddat) என்று பின்னால் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக்காலத்தில் தான் ஒருவள் கர்ப்பவதியா யிருக்கிறாளா இல்லையாவென்று பார்க்கவேண்டும். கர்ப்பவதியா யிருந்தால் அவள் பிரசவிக்கிறவரையில் அவளுடைய இதத் (Iddat) காலம் நீங்கமாட்டாது. வழக்கமான நாள்கள் வரையில் கர்ப்பந்தரித்துப் பிள்ளையைப் பெற்றால், அந்தப்பிள்ளை தகப்பன் சொத்தை யடைய பாத்தியப்பட்டவனாகிறான்; தகப்பன் சொத்தை தவிற வேறு யாருடைய சொத்தை யடைய அந்தப்பிள்ளைக்கு பாத்திய முண்டோ, அப்படிப்பட்டவர் இறந்த ஆறுமாதத்திற்குள் பிள்ளைபிறந்தால், அந்தப்பிள்ளை அவர் இறந்துபோகும்போது பிறந்திருந்தால் சொத்தை யடைவதுபோலவே, இப்பவும் அவர் சொத்தையடைய பாத்தியப்பட்டவனாவான்.

54. ஹனபிகளுடைய புராதன வழக்கப்படி கெட்டுப்போனவன் 90 வருஷங்கள் வரையில் பிழைத்திருப்பதாக எண்ணப்பட்டிருந்தது. ஆனால் மாலிகிகளுடைய வழக்கம் 4 வருஷமானதால் அதையே ஹனபிகளும் தற்காலம் ஆசரிக்கிறார்கள். ஷியாக்களுடைய அனுஷ்டானப்படி கெட்டுப்போனவன் 10 வருஷம் பிழைத்திருப்பதாகவும், ஷாபிகள் 7 வருஷங்களென்றும் அனுஷ்டிக்கிறார்கள். இந்த ஏழுவருஷம் இந்தியன் சாட்சிய ஆக்டுக்கு

ஒத்திருக்கிறது. அந்த ஆக்ட் 107-வது பிரிவின்படி கெட்டுப்போன வன் உயிருடனிருக்கிறுனு இல்லையாவென்று விவாதம் ஏற்படும் போது அவன் 30 வருஷகாலம் வரையில் ஜீவித்திருந்தானென்று ஏற்பட்டால், அதை வாதிப்பவன் அதை ருஜூச்செய்ய வேண்டும்.

அதே ஆக்ட் 108-வது பிரிவில் ஒருவன் 7 வருஷ காலமாகக் காணப்படவில்லை யென்றும், அவனுயிருட னிருக்கிறுனு இல்லையா வென்று விவாதமேற்பட்டால், அவனிருப்பதாகச் சொல்லுகிறவன் அதை ரூபிக்க வேண்டும்.

ஹனுபிகளுடைய ஆசாரப்படி ஒருஸ்திரி தன்னுடைய புருஷன் காணுமற்போன நான்குவருஷங்களுக்குப் பிறகு கல்யாணஞ்செய்து கொண்டால் இந்தியன் சாட்சி ஆக்ட்படி சொல்லாததாகிறது. ஆனுல் இந்த ஆக்ட் மகமதியர்களுடைய பற்பல ஆசாரங்களின்படி ஏற்பட்ட காலத்தை விரோதிக்க செய்யப்பட்டதல்ல.

(C) ஷியாக்களுடைய வார்சுபாத்தியங்கள்,

55. வார்சுபாத்திய விஷயத்தில் ஷியாக்களுக்கும் ஸுனிகளுக்குமுள்ள முக்கியமான வித்தியாசம், தகப்பன்வழி பந்துக்கள் என்கிற கோட்பாட்டில் அடங்கியிருக்கிறது. ஏனென்றுல் ஷியாக்களுடைய அனுஷ்டானத்தில் அஸாபா (Asabab) தகப்பன் அல்லது ஆண்வழி பந்துக்களுக்கு பெண்வழி பந்துக்களைக் காட்டிலும் அதிக பாத்திய மில்லை.

56. ஷியாக்களுடைய வார்சுகள் இரண்டு காரணங்களால் சொத்தை யடைகிறுர்கள். (1) "நாசப்" (Nasab) இரத்த சம்பந்தத்தினுலும், (2) "ஸபாப்" (Sabab) விசேஷ காரணங்களாலும். இறந்தவருடைய இரத்த சம்பந்தமான உரவினர்கள் எல்லாரும் இனிமேல் விவரிக்கப்போகிற நிபந்தனைகளினுல் நீக்கப்படாத வரையில் அவருடைய சொத்துக்கு வார்சாகிறுர்கள். சொத்து பாத்தியமடைய அர்ஹரான இரத்த சம்பந்தமான பந்துக்களெல்லாம் மூன்று வகுப்பாகப் பிரிக்கப்பட்டிருக்கிறுர்கள். ஒவ்வொரு வகுப்பாரும் இரண்டு உட்பிரிவாக பிரிக்கப்பட்டிருக்கிறுர்கள். கீழே சொல்லப்போகிற முதல் வகுப்பாருக்கு, இரண்டு மூன்று

வகுப்பாரைக் காட்டிலும் சொத்துபாத்தியம் மேலிட்டு அவர்களுக்கு முன் சொத்தை யடைகிறார்கள். அதுபோலவே இரண்டாவது வகுப்பார் மூன்றாவது வகுப்பாருக்கு முன் சொத்தை யடைகிறார்கள். ஆனால் அந்தந்த வகுப்பைச்சேர்ந்த உட்பிரிவினர்கள் ஏககாலத்தில் சொத்தை யடைகிறார்கள்.

57. முதல் வகுப்பில் சொல்லப்பட்ட இரத்த சம்பந்தமான பந்துக்களாவன:— (1) பெற்றோர்கள், (2) பிள்ளைகள் (ஆண் அல்லது பெண்), அவர்களுடைய வார்சுகள் முதலிய பின் வம்சஸ்தர்கள். இரண்டாவது வகுப்பில் சேர்ந்தவர்களாவன:— (1) பாட்டன் முதலிய முன்னோர்களும், (2) சகோதரர் சகோதரிகளும் அவர்களுடைய சந்ததிகளும்.

மூன்றாவது வகுப்பு பந்துக்களாவன:—மேற்சொன்னவர்கள் தவிர தகப்பனுக்காவது தாய்க்காவது பந்துவாய் ஏற்பட்டவர்களும் அவர்களுடைய சந்ததிகளும். அவர்களாவன:—தகப்பனுடன் பிறந்த சகோதரர் சகோதரிகள், பாட்டனுடன் பிறந்த சகோதரர் சகோதரிகள் அவர்களுடைய சந்ததிகள்.

58. A. என்பவனிறந்து போகும்போது அவனுக்கு B. என்கிற முதல் வகுப்பு வார்சும், C. என்கிற இரண்டாவது வகுப்பைச் சேர்ந்த வார்சொருவனும், D. என்கிற மூன்றாவது வகுப்பைச் சேர்ந்த வார்சொருவனு மிருந்தால் அந்த A. என்பவனுடைய சொத்து முழுவதும் B. என்பவனைச் சேர்ந்துவிடும். C. D. என்பவர்களுக்கு சொத்து கிடைக்க மாட்டாது. ஆனால் A. என்பவனுக்கு C. D. என்கிற வார்சுகள் மட்டு மிருந்தால் D. என்பவனுக்கு சொத்து கொஞ்சங்கூடக் கிடைக்காமல் C. என்பவனுக்கு அவன் சொத்து முழுவதும் சேர்ந்துவிடும்.

இறந்தவனுடைய முதல் வகுப்பில் சேர்ந்த பெற்றோரும், பிள்ளையு மிருந்தால் அவர்களிருவருக்கும் சட்டவிதப்படி சொத்து ஏக காலத்தில் கிடைக்கும். அதுபோலவே பாட்டன் பாட்டிகள், சகோதரர் சகோதரிகளுடனும், தகப்பனுடன் பிறந்த சகோதரர் சகோதரிகளோடு தாயுடன் பிறந்த சகோதரர் சகோதரிகளும் ஏக காலத்தில் பாகத்தை யடைகிறார்கள்.

ஆனால் பிள்ளை பேரன் முதலியவர்க ளிருக்கும்போது, சகோதரர் சகோதரிகளுக்கும் அல்லது அவர்களுடைய சந்ததிகளுக்கும், சகோதரர் சகோதரிகள் அல்லது அவர்கள் சந்ததிகளிருக்கும் போது, சித்தப்பன் மாமன் அத்தை முதலியவர்களுக்கும் பாகங் கிடைக்காது.

59. ஒரு ஸுனிமகமதிய னிறந்துபோகும்போது அவனுக்கு பெண்வயிற்றுப்பேத்தி ஒருவளும், சகோதரன் மகன் ஒருவனு மிருந்தால், பேத்திக்கு சொத்து கிடைக்காமல் சகோதரன் மகனுக்கு சொத்துக்கிடைக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் ஷியாக்கள் ஜாதியில் பெண்வயிற்றுப் பேத்தி இறந்தவனுக்குச் சொந்த வம்சத்தில் பிறந்த வார்சாக சொத்து முழுவதையுமடைகிறாள். சகோதரன் மகனுக்கு சொத்துச் சேருகிறதில்லை.

60. ஸுனிகள் சட்டப்படி இறந்துபோன ஒருவனுக்கு பெண்ணும், சகோதரனுமிருந்தால் பெண்ணுக்கு பாதிபாகமும், பாக்கிசொத்து சகோதரனைச் சேருவதுவழக்கம்; ஷியாக்கள் சட்டப்படி அவள் சொத்து முழுவதையு மடைகிறாள்; எப்படியெனில் முதலில் பாதியும் பிறகு இருவித பாத்திய வழக்கப்படி மீதி பாதியையும் எடுத்துக் கொள்கிறாள்.

61. ஸபாப் (Sabab) விசேஷகாரணத்தினால் ஏற்பட்ட வார்சுகள் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களாவன:—"(1)சௌஜியத்" (Zougiyat) விவாகத்தினால் ஏற்பட்ட பாத்தியஸ்தர்கள், (2)வாலா (Wala) விசேஷகாரணங்களினால் ஏற்பட்ட பந்துக்கள்.

62.—விவாகத்தினால் ஏற்பட்ட வார்சுகள் புருஷன் அல்லது பெண்சாதிகள். இவர்களுக்கு சொத்து பாத்தியம் எக்காலத்திலும் கிடைக்காமல் போகாது. ஒருவனிறக்கும்போது அவனுக்கு ஒரு பிள்ளையும் பெண்சாதியு மிருந்தால் பெண்சாதிக்கு நியாயமாய் ஏற்பட்ட சொத்துபோக மீதியைத்தான் பிள்ளையடைய வேண்டும். அதுபோலவே இறந்தவனுக்கு பெண்சாதியும், இறந்த சம்பந்த உறவினர்களான பெற்றோர்கள், பாட்டன் பாட்டிகள், சகோதரர் சகோதரிகள் முதலியவர்க ளிருந்தாலும், பெண்சாதிக்கு சட்டத்தில் சொல்லியிருக்கிற பாகத்தைக் கொடுத்தபிறகுதான் மீதியை மற்றவர்கள் ஏதாபாகமாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்.

63. வாலா (Wala) விசேஷகாரணங் களினாலுண்டான வார்சுகள் மூன்று பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அவர்களாவன:—(1) வாலா-உல்-இட்க் (Wala-ul-Itg) சிறைநீக்கினதினுல் பாத்தியதை யடைந்த வார்சுகள், (2) வாலா-ஜ்ஸாமி-உஜ்-ஜாரிரா (Wala-Z-Zamin-Uj-Jarirah) வக்கீலாக காரியஞ் செய்ததினுலாவது, ஜாமீன்தாரனு யிருந்ததினுலாவது பாத்திய மடைந்தவர்கள்.

(3) வாலா-உல்-இமாமேட், (Wala-Ul-Imamate) மத குருவான இமாம் அந்தஸ்தைப்பெற்ற பாத்தியத்தியனுல் சொத்துக்கு வார்சான இமாம்கள்.

ஷியாக்களுடைய வார்சுகள்.



64. ஷியாவகுப்பைச் சேர்ந்தவர்கள் தங்கள் இரத்த சம்பந்த உறவினர் யாராவதிறந்தால், அவருடைய சொத்தை அவர்கள் மூன்றுவித பாத்தியதையால் அடைகிறார்கள்.

அவைகளாவன:—(1) ஜூ-பார்ஸ். (Zu-Farz) கொரானில் பாகங்கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டவர்கள்.

(2) கராபட் (Karabat), முதலில் கொரான் பாகத்தையும், இறந்தவனுக்கு பந்துவாயிருப்பதால் அந்தவழியாய் வார்சுபாத்தியதையையும் அடைகிறவர்கள்.

(3) ஜூ-கராபட், (Zu-Karabat), இறந்தவனுக்கு உறவாயிருப்பதால் மாத்திரம் சொத்துக்கு வார்சானவர்கள்.

65. ஜூ - பார்ஸ் அல்லது கொரான் பாகஸ்தர்களாவன:—
(1) இறந்தவருக்கு தகப்பன் அல்லது பிள்ளைகளில்லாதிருக்கும்போது இருக்கிற பெண்கள்.

(2) இறந்தவருக்கு பாட்டனில்லாதிருக்கும்போதிருக்கிற சொந்த சகோதரிகள் அல்லது இரத்த சம்பந்தப்பட்ட வேறுசகோதரிகள், அல்லது சகோதரர்கள் முதலியவர்கள்.

(3) இறந்தவருக்கு பிள்ளைகளிருக்கும்போதிருக்கிற தகப்பன்.

(4) தாய்.

(5) புருஷன் அல்லது பெண்சாதி.

(6) ஒரே தாய்க்கு (வேறு தகப்பனால்) பிறந்த மற்ற பந்துக்கள்.

66. இறந்தவருக்கு 64 வது பாராவில் சொல்லப்பட்ட வார்சுகளிலாவது, அல்லது விசேஷகாரணங்களினால் ஏற்பட்ட வார்சுகளிலாவது ஒருவன் மட்டும் தனியாயிருந்து வேறு வார்சுகளில்லாமலிருந்தால், அவன் இறந்தவர் சொத்து முழுவதையு மடைகிறான். உதாரணம்:—ஒருவனுடைய ஏகபுத்திரி தன் தகப்பனிறந்த பிறகு கொரான்பாகமாய் பாதிசொத்தையும், வார்சுபாத்தியமாய் மீதிபாதி சொத்தையும் அடைகிறாள். ஆனால் ஒரு ஏகபுத்திரன் தன் தகப்ப

னிறந்த பிறகு அவன் சொத்து முழுவதையும் வார்சுபாத்தியமாக அடைகிறான்.

67. ஒருவரிறந்து போகும்போது அவருக்கு புருஷன் அல்லது பெண்சாதியைத் தவிர வேறு வார்சில்லாமலிருந்தால், அந்தப் புருஷன் அல்லது பெண்சாதி முதலில் கொரான் பாகத்தையும், பிறகு வார்சுபாத்திய பாகத்தையும் அடைகிறார்.

68. இறந்தவருடைய ஆண் வார்சுகளும் பெண் வார்சுகளும் ஒரே வகுப்பு ஒரே பிரிவைச்சேர்ந்தவராக சமமாயிருந்து இறந்தவருக்கு சரிசமானமான பந்துக்களாயிருந்தால், ஆண் வார்சுகள் பெண் வார்சுகளைக் காட்டிலும் இரண்டு மடங்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இறந்தவருடைய பெண்ணைக்காட்டிலும் பிள்ளை இரண்டுமடங்கு சொத்தை யடைவான். அதுபோல பேரன் பேத்தியைக்காட்டிலு மிரண்டுமடங்கு எடுத்துக்கொள்வான்; ஆனால் தாய் வழியைச்சேர்ந்த பந்துக்கள் விஷயத்தில் மட்டும் சில மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது:—ஒரே தாய்வயிற்றிற் (தகப்பன் வேறு) பிறந்த சகோதரர் சகோதரிகள் அவர்களுக்கு சட்டத்தில் ஏற்பட்ட மூன்றிலொரு பாகத்தை தங்களுக்குள் சரிசமமாகப் பிரித்துக்கொள்ளவேண்டும்.

69. கொரான் பாகத்தை யடையவேண் டியவர்களில்லாமல் வேறு பாகஸ்தர்கள் இரண்டல்லது அதிகமானவர்க ளிருந்தால் அவர்கள் தங்களுக்கு சட்டத்தில் ஏற்பட்டிருக்கிற வீதாசாரப்படி பிரித்துக்கொள்ளவேண்டும். அதாவது:—ஒருவனுக்கிரண்டு குமாரர்கள்மட்டு மிருந்தால் அவன் சொத்தை யவர்கள் சரிபாதியாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். ஆனால் அவனுக்கு ஒரு பெண்ணும் ஒரே ஒரு பிள்ளையு மிருந்தால், அவன் சொத்தில் மூன்றிலிரண்டு பிள்ளைக்கும், மூன்றிலொன்று பெண்ணுக்கும் சேரும்.

70. இறந்த வொருவனுக்கு தகப்பன்வழி பந்துக்களும், தாய்வழி பந்துக்களு மிருந்தால், எந்தெந்த பந்துக்கள் யாரைச்சேர்ந்தவரோ அவருக்குண்டான பாகத்தின் வீதப்படி அவர்களுக்கு சொத்துக் கிடைக்கும். உதாரணம்:—ஒருவனுக்கு தகப்பனுடன்

பிறந்த சகோதரர் சகோதரிகளும், தாயுடன் பிறந்த சகோதரர் சகோதரிகளு மிருந்தால், அவன் சொத்தை மூன்று பாகமாகப் பிரித்து இரண்டு பாகத்தை தகப்பனைச்சேர்ந்த பந்துக்களும், ஒரு பாகத்தை தாயைச்சேர்ந்த பந்துக்களு மெடுத்துக்கொள்ள வேண்டும்.

71. ஒருவனுக்கு பந்துக்கள் பலவிதமாயிருந்தால் அந்த பந்துக்களைச் சேர்ந்த பிரிவிற்கு பாகத்தைக் கொடுத்து அதை மறுபடியும் ஸ்திரி புருஷர்களுக்கு ஒன்றும் இரண்டுமாக பாகித்துக் கொடுக்க வேண்டும். உதாரணமாக:—இறந்தவனுடைய தகப்பனுக்குப் பல சகோதரர் சகோதரிகளிருந்தால் அவன் சொத்தில் மூன்றிலிரண்டு பாகத்தை அவர்களுக்குப் பொதுவாகக் கொடுத்து, மறுபடியும் அதைப் பலபிரிவாகப் பிரித்து புருஷர்களுக்கு ஸ்திரிகளைக் காட்டிலும் இரண்டு மடங்கு கொடுக்க வேண்டும்.

72. இறந்தவருக்கு இரத்த பந்துவாயேற்பட்டவர்களுடைய வார்சுகள், வேறு யாவராலும் அதிக பாத்தியங் கொண்டாடப்படாம லிருந்தால், அந்தவார்சுகள் இறந்துபோன அல்லது பாகப்பிரஷ்டரான தங்களுடைய பெற்றோர்களுடைய பாத்தியதையைக் கைப்பற்ற யோக்கியதை யுடையவர்களாகிறார்கள். உதாரணம். ஒருவனுக்கு பிள்ளைவயிற்றுக் குழந்தைகளும், பெண்வயிற்றுக் குழந்தைகளு மிருக்கும்போது அவனிறந்துபோனால், அவன் சொத்தை மூன்று பிரிவாகப் பிரித்து இரண்டுபாகத்தை பிள்ளையின் குழந்தைகளுக்கும், மற்றொருபாகத்தை பெண்ணின் குழந்தைகளுக்கும் கொடுக்கவேண்டும். அந்தந்தபாகத்தை அந்தந்தக் குழந்தைகளுக்கு பிள்ளைக்கு இரண்டு பாகமும் பெண்ணுக்கொரு பாகமுமாகப் பிரிக்கவேண்டும்.

73. ஒருவனிறந்து போகும்போது அனுக்கு அனேக வார்சுகளிருந்து அவர்களிற் சிலர் கொரான் பாகஸ்தர்களாகவும், சிலர் வார்சுபாத்திய பாகத்தை யடைகிறவர்களாயு மிருந்தால், முதலில் கொரான் பாகஸ்தர்களுக்கு பாகம் பிரித்துக்கொடுத்த பிறகு மற்றவர்கள் பாகம்பிரித்துக் கொள்ளவேண்டும்.

74. ஒருவனுக்குச் சொந்தமாயும், ஒன்றுவிட் டொன்றும் பந்துக்கள் அனேகரிருந்தால், அவன் சொத்தில் மூன்றிலொன்றை

தாயைச்சேர்ந்த பந்துக்களுக்கு மொத்தமாய்ப் பிரித்துக்கொடுத்து, அதை யவர்கள் ஆண்பெண் வித்தியாசமின்றி சமமாகப் பாகித்துக் கொள்ள வேண்டும். மீதி மூன்றிலிரண்டு பாகத்தை இறந்தவனுடைய சொந்த பந்துக்கள் அவரவர்களுக்கு ஏற்பட்ட வீதாசாரப் படிப் பிரித்துக்கொள்ள வேண்டும். தகப்பன்வழி பந்துககளுக்குக் கிடையாது. உதாரணமாக:—ஒருவனுக்கு சொந்த சகோதரர் சகோதரிகளும், தாய்வழியிலும், தகப்பன்வழியிலும் ஒன்றுவிட்டொன்று சகோதரர் சகோதரிகளிருந்தால், தாய்வழி சகோதரர் சகோதரிகள், அதாவது (ஒரே தாய்க்கு வேறு தகப்பனுல் பிறந்தவர்கள்) அவன் சொத்தில் மூன்றிலொரு பாகமெடுத்துக்கொண்டு ஆண் பெண் வித்தியாசமின்றி சமபாகமாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். தாய்வழி சகோதரர் சகோதரிகளில் யாராவதொருவர் மட்டு மிருந்தால் அவன் அல்லது அவளுக்கு இறந்தவன் சொத்தில் ஆறிலொன்றுதான் கிடைக்கும். மீதிசொத்தை சொந்த சகோதரர் சகோதரிகள், பெண்ணுக்கு ஒரு பாகமும், ஆணுக்கிரண்டு பாகமுமாக பாகித்துக் கொள்ளவேண்டும். சொந்த பந்துக்களாவது, தாய்வழி பந்துக்களாவது இல்லாமற் போனுல் மாத்திரம் தகப்பன் வழி பந்துக்களுக்கு சொத்துக் கிடைக்கும். உதாரணமாக:— ஒருவனிறந்து போகும்போது அவனுக்கு தன் சொந்த தாய் தகப்பனுக்குப் பிறந்த சகோதரியும், வேறு தாய்க்கு தன் தகப்பனுல் பிறந்த ஒன்றுவிட்ட சகோதரனெருவனு மிருந்தால் அவன் சொத்து முழுவதும் அந்த சகோதரிக்குச் சேர்ந்துவிடும்.

75. புருஷன் அல்லது பெண்சாதி எந்த தெசையிலும் அவர்களுக் கேற்பட்ட பாகத்தையடைய அர்ஹராயிருக்கிறுர்கள். பெண்சாதியைத் தவிர வேறு வார்சில்லாமலிருந்தால் அவளுக்கு நியாயமாய்க் கிடைக்கவேணடிய பாகம் கிடைப்பதுடன் பாக்கிசொத்தையும் அவளடைகிருள். ஆனுல் முற்காலத்தில் அவளுக்கு கொரான் பாகமட்டுந்தான் கொடுக்கப்பட்டு வந்தது.

76. ஒருவனிறந்து போகும்போது அவனுக்கு தாய்வழியிலும், தகப்பன்வழியிலும் ஒன்றுவிட்ட சகோதரர்க ளிருந்தால், அவர்கள் இறந்தவருக்கு சமமான பாத்தியஸ்தர்க ளானதால் அந்த இருவித பாத்தியஸ்தர்களும் அவன் சொத்தில் அவர்களுக்கேற்

பட்ட பாகத்தையெடுத்துக்கொண்டு, மீதி சொத்தை தங்களுக்கேற்பட்ட பாகத்தின் வீதாசாரப்படியே பிரித்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக:—இறந்தவனுக்கு சொந்த தகப்பனல் வேறு தாய்க்குப் பிறந்த சகோதரி ஒருவளும், சொந்த தாய்க்கு வேறு தகப்பனுல் பிறந்த சகோதரி ஒருவளுமிருந்தால் அவன் சொத்தில் பாதியை தகப்பன்வழி சகோதரியும், ஆறிலொரு பாகத்தை தாய்வழி சகோதரியும் எடுத்துக்கொண்டு பாக்கி மூன்றிலொரு பாகத்தை மேற்சொன்ன வீதாசாரமாகவே பிரித்துக் கொள்ளவேண்டும்.

77. கொரானில் சொல்லப் பட்டிருக்கிற பாகங்கள் ஆறு விதம். அவைகளாவன:—(1) பாதிபாகம், (2) கால்பாகம், (3) அரைக்கால் பங்கு, (4) மூன்றிலொரு பகுதி, (5) மூன்றிரண்டு பிரிவு, (6) ஆறிலொரு வீதம்.

(1) பாதிபாகத்தையடைய யோக்கிய முள்ளவர்களாவன:

(*a*) குழந்தைகளில்லாமற் போனல் புருஷன்.

(*b*) வேறு வார்சுகளில்லாத சமயத்தில் சொந்த சகோதரி.

(*c*) ஏக புத்திரி.

(2) கால்பாகமடைய அர்ஹமுள்ளவர்க ளாவன:—

(*a*) குழந்தைக ளிருக்கும்போது இருக்கிறபுருஷன்.

(*b*) குழந்தைகளில்லா திருக்கும்போதிருக்கிற பெண்சாதி.

(3) அரைக்கால் பாகம் பெருகிறவர்களாவன:—

குழந்தைகளாவது, அவர்களுடைய வார்சுகளாவதிருக்கும் போதிருக்கிற இறந்தவன் பெண்சாதி.

(4) மூன்றிலொரு பாகமடைய வேண்டியவர்களாவன:—

(*a*) இரண்டல்லது அதற்கு மேற்பட்ட ஒரே தாய்வயிற்றிற் பிறந்த சகோதரர் சகோதரிகள்.

(*b*) இறந்தவருக்கு வேறு வார்சுகளில்லா திருக்கும் போது அவன் தாயாரும் அல்லது இரண்டல்லது அதற்கு மேற்பட்ட சகோதரர்களாவது, ஒரு சகோதரர் இரண்டு சகோதரிகள்.

(5) மூன்றிலிரண்டு பெறவேண்டியவர்களாவன:—

(a) பிள்ளை பேரன்களில்லா திருக்கும்போது இரண்டல்லது அதற்கு மேற்பட்ட குமாரிகள்.

(b) சொந்த சகோதரர்களாவது, தகப்பனுல் வேறு தாய்க் குண்டான ஒன்றுவிட்ட சகோதரர்களாவ தில்லாதிருக்கும்போது இரண்டல்லது அதற்கு மேற்பட்ட சொந்த சகோதரிகள்.

(6) ஆறிலொரு பாகம் அபேட்சிக் கிறவாகள்.

(a) இறந்தவனுக்கு பிள்ளை பேரன் முதலிய சந்ததிகளிருக் கும்போது அவன் தாய், தகப்பன்.

(b) இறந்தவருக்கு இரண் டல்லது அதற்கு மேற் பட்ட சொந்த சகோதரர்களாவது, ஒருசொந்த சகோதரரும் பல சொந்த சகோதரிகளுமாவது இருக்கும்போது இருக்கிற தாய்.

(c) ஒரே தாய்வயிற்றில் (வேறு தகப்பனுல்) பிறந்த ஏக சகோதரி அல்லது சகோதரன்.

78. ஷியாக்களுடைய சட்டப்படி சந்ததி யில்லாத விதவை க்கு அவளுடைய புருஷனுடைய ஸ்தாவர சொத்திலும், நிலங்களி லும் பாகங்கிடைக்காது. ஆனல் ஜங்கம சொத்தில் ஒரு பாகமும், வீடு, கட்டிடம் முதலியவற்றின் விலையின்பேரில் பணமாகவும் பாகம் கிடைக்கும்.

(D) வார்சுபாத்தியமடைய யோக்கியதை யில்லாதவர்கள்.

79. முஸல்மான்க ளுடைய சட்டப்படி, இறந்துபோனவனு டைய ஆஸ்திகளையடைய பாத்தியப்பட்ட வார்சுகள் அடியில்கண்ட காரணங்களால் வார்சுபாத்திய மில்லாமல் போவதுண்டு; அவைக ளாவன:—(1) குர் (Kufr) அதாவது வாஹ்தானியத் (Wahdaniat கடவுள் ஒருவரென்றும் ரிஸாலத் (Risalat) தேவதூதராய் வந்தவர் மகமதுவென்றும் நம்பாமலிருப்பது; ஸ்வாமி ஒருவர், மகமது தேவ தூதரென்றும், நம்புவதுதான் இஸ்லாம் மதத்தில் முக்கியமான கோட்பாடு. அதை நம்பாதவனுக்கு ஒரு மகமதியன் சொத்துக் கிடைக்க மாட்டாது. ஒரு மகமதுமத விபட்சன், வேறு மதத்தில்

பிறந்தவனைப் போலவும், இஸ்லாம் மதத்தைவிட்டு வேறு மதத்தைச் சேர்ந்தவனைப் போலவும், மகமதியனுடைய சொத்தை யடைய மாட்டான்.

(2) இரண்டாவது காரணம். ஸூனிகளுடைய சட்டப்படி ஒருவன் வேறொருவனை தற்செயலாகவாவது, மனப்பூர்த்தியாகவாவது கொன்றால், அப்படிக் கொல்லப்பட்ட வனுக்கு கொன்றவன் வார்சாயிருந்தாலும் அவன் சொத்தை யடையமாட்டான்.

ஷியாக்கள் சட்டப்படி அப்படிச் செய்த கொலையானது மனப்பூர்த்தியாயும், நியாயமற்றதாயு மிருக்கவேண்டும்.

(3) மூன்றாவது. ஸூனிகள், ஷியாக்கள் இந்த விரண்டு ஜாதிகளிலும் ஒருவன் அடிமையாய் விட்டால் அவனுக்கு வார்சுபாத்தியம் போய்விடும். உதாரணம்:

A என்பவனுக்கு B என்கிற சமீபவார்சும், C என்கிற தூர வார்சுகளு மிருக்கிறார்கள். அவர்களில் B என்பவன் A இறந்து போகும் காலத்தில் அடிமையா யிருந்தால் அவன் சொத்து முழுவதும் C என்பவனுக்கு சேர்ந்துவிடும்.

ஆனால் அந்த அடிமையாய் போனவனுக்கு வார்சுகளிருந்து அவர்கள் அடிமையாயில்லாதிருந்தால், தகப்பனுக்குக் கிடைக்க வேண்டிய சொத்தை அவர்கள் அடைவார்கள்.

(4) நான்காவது. சட்டப்படி நியாயமில்லாத உறவுகளைக் கொண்டாடுகிறவர்களுக்கும் வார்சுபாத்தியம் கிடைக்கமாட்டாது.

II—சம்பந்தங்களின் நிலமைகள்.

(*a*)—சொந்தபாத்திய நிலைமைகளைப்பற்றிய விதிகள்.

I—பொது விஷயங்கள்.

80. உலகத்திலுள்ள மற்ற ஜாதிகளைப் போலவே, மகமதியர்களிலும், ஒரு குழந்தையின் வம்சமின்னதென்று தெரிந்து கொள்ள வேண்டுமானால், அந்தக் குழந்தையின் தாய் அக்குழந்தையை கெர்ப்பமா யிருக்கும்போது எந்தப் புருஷனுடன் கல்யாணஞ் செய்துகொண்டு சேர்ந்திருந்தாளோ அந்தப் புருஷனுடைய

வகுப்பைச் சேர்ந்தவனவான். அந்தக் குழந்தை யாருக்குப் பிறந்திருந்தாலும் பாதகமில்லை.

81. மகமது மதத்தைச் சார்ந்த எல்லா சாஸ்திரங்களிலும், அதமபட்சம் ஒரு புருஷனுடன் சேர்ந்த ஆறுமாதத்திற்குள் பிள்ளை பிறந்தால், அந்த பிள்ளை யவனுக்குப் பிறந்ததாகவே எண்ணப்படுமென்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஆனல் புருஷனை விட்டபிறகு பிறக்கும் பிள்ளையின் கால அளவு விஷயத்தில் ஒன்றுக்கொன்று வித்தியாசப்படுகின்றது. (Sunnis) ஸுனிகளுடைய சாஸ்திரத்தில் உயர்ந்த காலம் இரண்டுவருஷமென்றும், ஷியாக்களுடைய (Shias) சாஸ்திரத்தில உயர்ந்தகாலம் பத்துமாதமென்றும், சில முக்கியமான சந்தர்ப்பங்களில் பன்னிரண்டு மாதம்வரையில் காலத்தை உயர்த்தலாமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றது.

82. ஆகையால் ஸுனிஜாதிகளில், கல்யாணத்துக்குப் பிறகு ஆருவதுமாதங் கழிந்த பின்பாவது, புருஷனிறந்த அல்லது பெண்டாட்டியை பரித்தியாகஞ் செய்த பத்தாவது மாதத்திற்குள்ளாவது பிறந்த பிள்ளை சட்டப்படி கல்யாணம் செய்தவனுக்குப் பிறந்ததாகவே எண்ணப்படும். அதை மறுக்க சொந்தத் தகப்பனுக்குக் கூட பாத்தியமில்லை.

மேற்சொல்லிய காலத்திற்குள் ஒருவன் பெண்சாதிக்குப் பிள்ளை பிறந்தால் அந்தப் பிள்ளை அவனுக்குப் பிறந்ததாக எண்ண வேண்டியதா யிருந்தபோதிலும், புருஷன் அந்தக் காலத்திற்குள் வியாதியாயிருந்த தினலாவது, ஸ்திரிசம்போகஞ் செய்யச் சக்தியற்றவனு யிருந்த தினலாவது, அல்லது பெண்சாதி புருஷனைவிட்டுப் பிரிந்திருந்ததினலாவது, தான் அவளுடன் சேரவில்லையென்று ருஜுச் செய்யும் பட்சத்தில, அபபடி அந்தக் காலத்தில் பிறந்த பிள்ளையைப் புருஷன் தனக்குப பிறந்ததாக ஒப்புக்கொள்ள வேண்டியதில்லை.

83. ஆனல் மகமதிய ஜாதியனுஷ்டானப்படி பிள்ளை பிறந்த காலங்களில் செய்யவேண்டிய சடங்குகளைப் புருஷன் கூடவிருந்து நடத்தினல், அவன், அந்தப்பிள்ளை யாருக்குப் பிறந்திருந்த போதி

லும், தனக்குப்பிறந்த தாகவே ஒப்புக்கொண்டதாக ஜனங்கள் எண்ணுவார்கள்.

84. ஒருவன் தன் பெண்சாதிக்குப் பிறந்த குழந்தை தனக்குப் பிறக்கவில்லை யென்று சொல்லும் பட்சத்தில் அதை ரூபிக்கும்படி அவன் பெண்சாதி அவனைக் கேட்க பாத்தியமுண்டு; அதற்கு மகமதிய சாஸ்திரத்தில் (Laan) லான் என்று பெயர்.

85. பொதுவாய் மகமதிய சாஸ்திரத்தில் கல்யாணத்துக்குப் பிறகு கர்ப்பந் தரித்துப் பிறந்த பிள்ளைதான் நியாயமானதென்றும், ஷியாக்களுடைய ஜாதியில் கல்யாணம் நிறைவேறின பிறகு ஆறுவது மாதத்தில் பிறந்த பிள்ளையும், ஸுனிகளுடைய ஜாதியில் கல்யாணத்திலிருந்து ஆறுவது மாதத்தில் பிறந்த பிள்ளையும் நியாயமானதென்று சொல்லப் படுகின்றன.

பிரிவிகவுன்சில்ஜட்ஜிகள், திரட்சிகல்யாணத்தி லிருந்து கணக்கிடுவதுதான் நியாயமென்றும், மற்ற சாதாரண விவாகத்திலிருந்து கணக்கிடக் கூடாதென்றுந் தீர்ப்புச்செய் திருக்கிறார்கள். (8 மூர். இ. அ. பக்கம். 132.)

86. சாஸ்திர விரோதமான சம்பந்தங்களில் பெற்ற பிள்ளைக்கு எவ்வித பாத்தியமும் கிடையாது; ஆனால் சம்பந்தஞ்செய்து கொண்டவர்கள் நியாயமாகத்தான் சம்பந்தஞ் செய்திருக்கிறோமென்று மனப்பூர்த்தியாய் எண்ணியிருந்தால் அப்படிப்பட்ட சம்பந்தத்தினால் பிறந்த பிள்ளைக்கு பாத்தியமுண்டு.

87. அதுபோலவே இன்ன பாத்தியமுள்ள பெண்களைக் கல்யாணஞ்செய்து கொள்ளக் கூடாதென்று சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறதோ அந்த பாத்தியமுள்ள பெண்ணைத் தெரியாமல் கல்யாணஞ்செய்து முடிந்திருந்தால் அப்படிப்பட்ட ஸ்திரீக்குப் பிறந்த பிள்ளை நியாயமானதென்று ஒத்துக்கொண் டிருக்கிறார்கள். ஆனால் ஹனுவிஜாதியார் என்ன தெரியாமல் செய்திருந்தபோதிலும், சாஸ்திர விருத்தமான கல்யாணத்தினால் பிறந்த பிள்ளை நியாயமானதல்லவென்று சொல்லுகிறார்கள்.

88. கல்யாணஞ் செய்யுங்காலத்தில் நியாயவிரோதமா யிருந்த போதிலும், பிறகு பரிகாரஞ்செய்யக் கூடியதா யிருந்தால், அதன் பிறகு அந்தக் கல்யாணம் நியாயமானதாகும். அந்தக் கல்யாணத்தினுல் சந்ததியுண்டானுல் நியாயமான சந்ததியாக எண்ணப்படும்.

உதாரணம்:—ஒருவன் சகோதரிகளான இரண்டு கன்னிகைகளை விவாகம்செய்து கொள்ளுகிறுன். சகோதரிகளை ஒருவன் கல்யாணஞ் செய்து கொள்வது நியாய விரோதம். அதினுல் அந்த சகோதரிகளில் இரண்டாந்தரம் செய்துகொண்ட விவாகம் சட்டவிரோதமானதா யிருந்தாலும், முதலில் விவாகம் செய்த பெண் இறந்துபோனதினுலாவது, பரித்தியாகஞ் செய்ததினுலாவது, இரண்டாந்தரம் செய்துகொண்ட விவாகம் சட்டசம்மதமாகிறது. அந்த விவாகத்திற்குப் பிறந்த பிள்ளைகளும் நியாயமானவைகள்.

89. ஒருவன் வேறு மதமுள்ள பெண்ணைக் கல்யாணஞ்செய்தாலும் பிறகு அந்தப்பெண் மகமது மதத்தை யனுசரித்தால் அந்த சம்பந்தம் நியாயமானதாகும். (இ. லா. 21 கல். பக்கம் 666).

90. ஒரு மகமதிய ஸ்திரி அன்னியமதத்தான் ஒருவனை விவாகம் செய்து கொண்டாலும், பிறகு அவன் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்துவிட்டால் அவனுக்குப் பிறந்தபிள்ளை நியாயமானதாகும்.

91. ஆனுல் கல்கத்தா ஹைகோர்ட்டார் இரண்டு சகோதரிகளை விவாகஞ் செய்தால் இரண்டாவது தடவை செய்துகொண்ட சகோதரிக்குப் பிறந்த பிள்ளைக்கு எவ்வித பாத்தியமும் கிடையாதென்று தீர்மானித்திருக்கிறுர்கள். (இ. லா. 23 கல். ப. 130) இத்தீர்ப்பு பொதுவிதிக்கு விரோதப்படுகின்றது. அதாவது, அந்தவிதம் இரண்டாவது விவாகம்செய்துகொண்ட சகோதரிக்கு ஸ்திரீகளுக்கு கிடைக்கவேண்டிய சொத்து பாத்தியமிருப்பதால், அவளுக்குப் பிறந்த பிள்ளைக்கும் சகல பாத்தியமுமுண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது.

92. சாஸ்திர விருத்தமான கல்யாணத்தினுல் பிறந்த பிள்ளை நியாயசம்மதமாகபாவிக்கப்பட்டு, சொத்து பாத்தியதையையடை

ந்தபோதிலும், அவன் தாயாருக்கு சொத்து பாத்தியங் கிடையாது. சட்ட விரோதமாக கல்யாணஞ் செய்துகொண்டவர்களுக்கு நியாயமான விவாகமாவதற்கு முன் அவர்களுக்குள்ள பாத்தியதையை கைப்பற்ற வழக்கிட்டால் செல்லாது. விவாகப் பூர்த்திக்கு முன் அவர்கள் நியாயமாய்ப் பிரிக்கப்பட்டால் அப்படிப் பிரிக்கப்பட்ட ஸ்திரீக்கு ஸ்திரீதனபாத்தியங் கிடையாது. நியாயமான விவாகத்துக்குப் பிறகு அவள் தனக்குக் கிடைக்கவேண்டிய ஸ்திரிதனத்தைக்கேட்க நியாயமுண்டு. ஆனல் அவளை நீக்கிவிட பாத்தியமில்லாமற் போனுலும், சட்ட சம்மதமான விவாகத்துக்குபிறகு அவளை நீக்கிவிட்டாலும் விடலாம். அவன் பெண்சாதியும் (Iddat) இதத் என்பதை அனுஷ்டிக்கவேண்டியதில்லை. (Iddat-இதத் என்பது, ஒரு ஸ்திரி கர்ப்பமாயிருக்கிருளா இல்லையாவென்று மூன்று மாதகாலம் சோதனை பார்க்கவேண்டிய கால அளவு).

93. ஒரு புருஷன் மனப்பூர்த்தியாய்நியாயமானதென்று எண்ணிக்கொண்டு ஒரு பெண்ணைக் கல்யாணஞ் செய்துகொள்ளுகிருன். பிறகு சட்ட விரோதமென்று தெரியவந்தது. அந்த விவாகத்திற்குப் பிறந்த பிள்ளைநியாயமானதுதானென்று, ஷியாக்களைச் சேர்ந்த சாஸ்திரிகள் சொல்லி யிருக்கிருர்கள்.

94. அதுபோலவே எந்த பாத்தியமுள்ள பெண்களை விவாகஞ் செய்துகொள்ளக்கூடாதோ அந்தப் பெண்களையாவது, எந்த ஜாதிப் பெண்களை கல்யாணஞ் செய்யக்கூடாதென்று நீக்கப்பட்டிருக்கிறதோ, அந்தப் பெண்களையாவது, தெரியாத்தனத்தினுல் நியாய விரோதமென்று மனப்பூர்த்தியாய் அறியாமல் விவாகஞ்செய்துகொண்டு அவர்களுக்கு பிள்ளைகள் பிறந்திருந்தால், அந்தப் பிள்ளைகளுக்கு சகல பாத்தியங்களுமுண்டு.

95. ஸூனிகளுடைய கோட்பாட்டின்படி சட்ட விரோதமாய்ப் பிறந்த பிள்ளைகள் தங்கள் தாயுடையவும், தாயைச் சேர்ந்த பந்துக்களுடைய சொத்துக்களையும் அடையலாம்; தாயும், தாயைச் சேர்ந்த பந்துக்களும் அந்தப்பிள்ளையினுடைய சொத்தை யடையலாம்.

96. விபசாரத்தில் பிறந்த பிள்ளைக்கு தாய் தந்தையர்களுடைய சொத்தையடைவதாவது, அப்படி பிறந்த பிள்ளையின்

சொத்தை தாய் தந்தைகள், தாய் தந்தைகளைச்சேர்ந்த பந்துக்கள் அடைவதாவது நியாயமில்லை யென்று ஷியாஜாதி சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

97. சொந்தப்பிள்ளையல்ல, தாசியின் புத்திரனென்று வழக்குகள் ஏற்படும்போது, அந்தப்பிள்ளையை வைத்திருக்கிற தாயும் தகப்பனும் பிரமாணத்தின் பேரில் தங்களுக்குப் பிறந்ததென்று சத்தியஞ் செய்தால் அந்தப் பிள்ளை பெற்றோர்களுடைய சொத்து பாத்தியதையை யடைகிறான்.

98. கல்யாணம் வேறு தேசத்தில் செய்ததினாலோ, பிரத்தியட்சசாட்சியம் அல்லது, எழுத்து மூலமான சாட்சியால் கல்யாணத்தை ரூபிக்க முடியாத சந்தர்ப்பத்தில் கல்யாணம் செய்துகொண்டது சந்தேகமா யிருந்தால், அப்படி விவாகம்செய்துகொண்டவர்கள் தம்பதிகளாய் வெகுகாலம் ஒருமிக்கவிருந்து குடித்தனம் செய்துகொண்டிருப்பதே போதுமென்றும், அப்படிப்பட்டவர்களுக்குப் பிறந்தபிள்ளை அவர்களுடைய சொத்துக்களையடைய பாத்தியப்பட்டவர்களென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. (8 மூர். இ. அ. ப. 159)

(2) பிதாபுத்திர சம்பந்தங்கள்.

99. மகமதிய அனுஷ்டானப்படி ஒருவன் தனக்குப் பிறந்ததாக எண்ணுகிற சொந்தப் பிள்ளையைமட்டும் புத்திரனாக பாவிக்க வேண்டும். அப்படி ஒரு பிள்ளையைப் பெற்றோர்கள் தங்களுக்குச் சேர்ந்த பிள்ளையென்று ஒப்புக்கொண்டால் அதுவே போதுமானது. ஸுனிஜாதியில் அப்படி பிள்ளை தனக்குச் சொந்தமென்று ஒப்புக்கொள்ளுகிற பாத்தியம், தகப்பனைத் தவிற தாயிக்காவது, மற்ற பந்துக்களுக்காவது கிடையாது. ஒருவன் பகிரங்கமாக வாவது, நடவடிக்கை களினாலாவது அவ்விதம் ஒரு பிள்ளையை ஒப்புக்கொண்டதாகக் காட்டவேண்டும். பிள்ளையை நடத்துகிற விதத்தி விருந்தே அந்தப்பிள்ளை அவனுக்குச் சொந்தமென்று எல்லாரும் அறியக் கூடியதா யிருக்கவேண்டும். (இ. அ. 11. மூ. 94.) (இ. ல. கல். ப. 922,) (இ. ல. கல். ப. 663,) (இ. ல. கல். ப. 6.6.)

ஒருவனைத் தன்னுடைய பிள்ளையென்று ஒப்பு கொண்டிருந் தால அடியில்கண்ட மூன்று அம்சங்களிருக்க வேண்டும்.

(1) ஒருவன் ஒரு பிள்ளையை தன் பிள்ளையென்று ஒப்புக் கொள்ளுகிறதா யிருந்தால் பிள்ளையைக் காட்டிலும் தகப்பன் அதிக வயதுடையவனாய் இருக்கவேண்டும். அதமபட்சம் பன்னிரண் டரை வயதாவது தகப்பன் பிள்ளையைக் காட்டிலும் பெரியவனா யிருக்கவேண்டும்.

(2) தனக்குச் சொந்தமான தென்று சொல்லுகிற பிள்ளைக்கு வேறே பெற்றோர்கள் இருப்பதாகவாவது, அல்லது அந்தப் பிள்ளை யின் வம்ச மின்னதென்றாவது தெரியாமலிருக்க வேண்டும்.

(3) பிள்ளையானவன், தன்னை புத்திரனாக பாவிக்கிற பிதா தனக்குச் சொந்தமான தகப்பனென்று ஒத்துக் கொள்ளு கிறதா யிருக்க வேண்டும்.

100. பிள்ளை, பந்துத்வமென்பது இன்னதென்று அறியவா வது, தன்னுடைய சங்கதி இன்னவிதமா யிருக்கிறதென்று தெரிந்து கொள்ளவாவது போதுமான ஸ்திதியிலிராத குழந்தைப்பருவமா யிருந்தால், அந்தக் குழந்தை மேற்கண்ட ஒப்புக் கொள்ளுதலை அங்கீகரிக்க வேண்டியதில்லை. அப்படி சிறுவயதில் ஒத்துக்கொண்ட தாக ஏற்பட்டாலும் அது சட்ட சம்மதமாகாது.

101. பிதா புத்திர சம்பந்தஞ் செய்கிறதா யிருந்தால் பிள்ளை நல்ல புத்தியோடும், சுவேச்சையாயும், ஒப்புக் கொள்வதோடு வயது வந்த புருஷனாயு மிருக்கவேண்டும்.

குழந்தை (மகமது சட்டப்படி புருஷப்பருவம் வராதவன்) யினாலாவது, சிரையிருப்பவனாலாவது, நல்ல புத்தியோடு இல்லா திருப்பவனாலாவது ஒப்புக்கொண்டவைகளொன்றும் செல்லாது.

102. ஒருவனைத் தன் பிதாவென்று ஒருவன் ஒப்புக்கொண் டால், அவனிடமிருந்து, சொந்தத் தகப்பன்சொத்தைப் பிள்ளை யடைவதுபோல சகல பாத்தியதைகளையும் அவனிடமிருந்து அந் தப் பிள்ளையடைகிறான்.

103. ஒருவன் ஒரு பிள்ளையைத் தன் சொந்தபிள்ளையென்று ஒப்புக்கொண்டால், அந்தப்பிள்ளையின் தாயைத் தன்பெண்சாதியாக ஏற்றுக்கொண்டதாகவாகும். அவளை விவாகஞ்செய்த விஷயமான சாட்சிகளில்லாமற் போனாலும் பாதகமில்லை. பிள்ளை தன்னுடையதுதானென்று ஒருவன் வெளிப்படையாய்ச் சொல்லவேண்டியதில்லை. அவன் அந்தப்பிள்ளையை புத்திரனைப்போல் பாவித்து நடத்துவதே போதுமானது,

104. ஒருவன் ஒரு ஸ்திரீயோடு காரணார்த்தத்திற்கல்லாமல் நிஜமாகவே வாழ்ந்து பிள்ளையைப் பெற்று, அந்தப் பிள்ளை தன்னுடைய சொந்தப்பிள்ளையென்று ஒப்புக்கொண்டால், அவன் அந்த ஸ்திரீயை நியாயமாய் விவாகம் செய்துகொண்டதாகவே எண்ணப்படும். ஸ்திரீ புருஷர்கள் முன்னிருந்த ஒற்றுமையிலிருந்துதான் பிள்ளையினுடைய பிதுரு பாத்தியம் ஸ்திரப்படுகின்றது. கல்யாணம் செய்துகொண்டதை ருசுப்படுத்த முடியாதிருந்தால், பிறந்திருக்கிற பிள்ளையை சாதாரணமாய் ஒப்புக்கொள்வதினால் பிரயோசனமில்லை. நிச்சயமாய் இவன்தான் தன்குழந்தையென்று சொல்லும்படியான காரியங்களை செய்யவேண்டும்.

105. நியாயமாய் விவாகஞ் செய்துகொண்டஸ்திரீபுருஷர்களுக்குப் பிறந்த பிள்ளையை ஒப்புக்கொள்ளுகிற பாத்தியம் தகப்பனுடையதே யொழிய, தாயுடையதல்லவென்றும், தகப்பனுடைய சொந்த அபிப்பிராயம் சேர்ந்தாலொழிய தாய் சுலபமாய் ஒப்புக்கொள்ள அதிகாரமில்லையென்றும் ஸுனிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால், ஷியாக்களுடைய சட்டத்தில் புருஷனையிழந்த ஸ்திரி அந்தப் புருஷனுடைய விவாகத்தால் பிறந்த பிள்ளையை ஒப்புக்கொள்ளலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் இறந்துபோன புருஷனுடைய சொத்து பாத்தியம் அந்த ஸ்திரீக்கு போய் விடுகிறது.

106. ஸ்திரி புருஷர்கள் வித்தியாசமின்றி ஒரே பாத்தியதையோடு சொந்த வம்சத்தில் பிறக்காத மற்றவர்களை தகப்பனாகவும், தாயாகவும், புருஷனாகவும், பெண்சாதியாகவும், சகோதரர்களாகவும் பாவித்து ஒப்புக்கொண்டு பந்துத்வம் பாராட்டலாமென்றும்,

அந்த பந்துத்வத்தை பரஸ்பரம் இருவரும் உயிரோடிருக்கும்போதும், இறந்த பிறகும் நியாயமானதாக பாவிக்க வேண்டும். இதுவிஷயத்தில் யார்யாரை பந்துவாக ஒப்புக்கொள்ளுகிறரோ, அப்படிப் பட்டவன் அதற்கு உடன்பட்டதாக ஒத்துக்கொண்டால் அவர்களிருவரைப்பற்றியமட்டில் பந்தத்வத்தை ஒப்புக்கொள்ளலாம். அப்படிப்பட்டவன் அதற்கு உடன்படா விட்டால் அந்த பந்துத்வம் செல்லாது.

107. இந்தவிஷயங்களில் கூட ஒருவன் எவனை பந்துவாக ஒப்புக்கொள்ளுகிறனே, அவனுடைய வம்ச மின்னதென்று தெரியாதிருப்பதோடு கூட, அதே பந்துவாக அவனை பாவிக்க வேறொருவர் இருக்கக் கூடாது.

108. ஆனல், ஒருவன், தனக்கு வார்சுகள் இருக்கும்போதே வேறொருவனை, பிள்ளையல்லாத மற்ற பந்துவாகப் பாவித்தால், அந்த வார்சுக்குள்ள நியாயமான பாத்தியங்கள் போய்விடாது. பந்துவாக பாவிக்கப் பட்டவனுக்கும் சட்டவிரோதமான பாத்தியங்கள் ஏற்படாது.

(*b*) தகப்பனின் அதிகாரம்.

109. சாதாரணமாய் எல்லா ஜாதிகளைப்போல மகமதியர்களில், பிள்ளை மைனராயிருக்கிறகாலத்தில் தகப்பன் அந்தப்பிள்ளையின் அனுமதியின்றி தனக்குத் தோன்றின பெண்ணை யவனுக்கு விவாகம் செய்து வைக்கலாம். அந்தப் பிள்ளை வயது வந்த புருஷனுல் தகப்பனைக் கேளாமலே சுவயமாக தனக்கிஷ்டப்பட்ட பெண்ணை விவாகஞ்செய்து கொள்ளலாம்.

110. மகமதிய ஆசாரப்படி ஒரு பிள்ளைக்கு பதினைந்து வயதாய் விட்டால் அவன் புருஷப்பருவம் அடைந்ததாகவும், அதற்கு மேல் அவன் நியாயமான சகல நடவடிக்கைகளையும் செய்யலாமென்றும் ஏற்பட்டிருக்கிறது. பெண்களும் பதினைந்தாவது வயதுக்கு மேல் கன்னியாப்பருவம் நீங்கி யுவதியாகிறுள். அந்த வயதிற்குள் புஷ்பவதியா யிருக்கவேண்டும்.

111. பதினேந்து வயதுக்குமேல் ஸ்திரீ புருஷர்கள் சுயேச்சையாய் விவாகஞ்செய்து கொள்ளலா மென்றிருப்பதால், மற்றவர்களால் கல்யாணம் நிச்சயஞ் செய்தாலும், அந்த தம்பதிகள் வெளிப்படையாய் கல்யாணத்தை அங்கீகாரஞ் செய்ததாகச் சொல்ல வேண்டும்,

112. ஆனல் மாலிக் (Malik), ஷாவி (Shafei) இவர்களின் ஆசாரப்படி பெண்கள் விவாகமாகிறவரையில் பெற்ருேர்கள் சொற்படி கல்யாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்றும், அதன் பிறகு அவர்கள் சுயேச்சையா யிருக்கலாமென்றும் ஏற்படுகிறது. மற்ற மகமதியர்கள் மேலே சொன்னவர்களுடைய கஷ்டமான கோட்பாடுகளை விலக்கி, இலகுவானவைகளைச் சேர்த்துக்கொண் டிருக்கிருர்கள்.

113. தூரதேசத்திற்குப் போயிருந்த தகப்பன் கல்யாணத்திற்குள் வருவது அசாத்தியமென் றிருந்தாலும், தகப்பன்புத்தி சுவாதீன மில்லாதிருந்தாலும், தகப்பனுக்கு அடுத்த நியாயமான போஷகர் பெண்பிள்ளைகளுக்குக் கல்யாணத்தை நிச்சயஞ்செய்ய பாத்தியமுண்டு.

114. ஆனல், தகப்பன் விவாகத்திற்குள் திரும்பிவரக்கூடாத ஸ்திதியில் காராகிரகத்தில் அடைபட்டிருந்தால் பெண்களின்தாயும், பாட்டியும் கல்யாணத்தை நிச்சயஞ் செய்யலாம்.

115. தகப்பனில்லாத காலத்தில் பெண்களுக்கு வரன் நிச்சயஞ்செய்ய வேண்டிய முதல் பாத்தியம் தகப்பனைச்சேர்ந்த சமீப பந்துக்களைச்சேர்ந்தது. தகப்பனுக்கு சமீப பந்துக்களில்லா விட்டால் தாய்வழியைச் சேர்ந்த சமீப பந்துக்கள் நியாயமான வரனை நிச்சயஞ் செய்யலாம். தகப்பனுடைய சொந்த சகோதர னிருக்கும்போது, தாய் தாயைச்சேர்ந்த பந்துக்கள் மைனர்களுக்கு விவாகம் நிச்சயஞ்செய்ய அதிகாரமில்லை. ஆனல், தகப்பனவது, தகப்பனைச் சேர்ந்த பந்துக்களாவது அனியாயமான சம்பந்தத்தைச் செய்ய நிச்சயஞ் செய்தால், தாயும் தாயைச்சேர்ந்த பந்துக்களும் காஜியிடம் மனுச்செய்து அந்த விவாகத்தை நிறுத்தி விடலாம்.

116. தகப்பன் அல்லது பாட்டன் (தகப்பனுடைய பிதா) இவர்களல்லாமல் மற்றவர்களால் ஒரு மைனருக்குச் செய்து வைத்த விவாகத்தை, அந்த மைனர் அப்படிப்பட்ட விவாகத்தை சுயேச்சையாய் உறுதிப்படுத்த வாவது, நீக்கிவிடவாவது பாத்தியமுண்டு.

117. தகப்பன், பாட்டன் இவர்கள் அதிக விரயமாகக்கூடியதும், பிள்ளைக்கு கெடுதலையுண்டாக்கக் கூடியதுமான விவாகத்தை நிச்சயஞ்செய்தால், மைனர்கள்கூட இஷ்டப்படா விட்டால் அந்த விவாகத்தை நிறுத்திவிடலாம்.

(C) மைனர் சம்ரட்சணம்.

118. குழந்தைகளை வைத்திருக்கவேண்டியகடமை தாயுடையதுதானென்று வடாவா அலங்கிரி (Fatawa Alamgiri) என்பவர் எழுதியிருக்கிறுர், அவள் புருஷனேடு வாழ்ந்து கொண்டிருந்தாலும், பிரிந்திருந்தாலும் குழந்தையை அவள்தான் பத்திரமாக வளர்க்கவேண்டும்.

119. அவளுக்கு அடுத்த பாத்தியஸ்தார் அவளுடைய தாய் (குழந்தையின் தாயைப்பெற்ற பாட்டி). அவள் துர்க்குணமில்லாதவளாயிருக்கவேண்டும். அவள் மகமதிய ஸ்திரீயா யிருந்தாலும், வேறு மதஸ்திரியா யிருந்தாலும் குற்றமில்லை.

120. தாயின் வசத்தில் குழந்தையில்லாதிருந்தால், தாயைக் காட்டிலும் தகப்பனுக்கு அந்தக்குழந்தையை எடுத்துவளர்க்க அதிக பாத்தியமுண்டு. அவன் அக்குழந்தைகளுக்கு படிப்பு முதலியன கற்பித்துப் பாதுகாக்கவேண்டும்.

121. ஹனுவி ஜாதியில், பக்குவமாகிற வரையில் பெண் குழந்தைகளை தாய்தான் தன்வசத்தில் வைத்திருக்கவேண்டுமென்றும், மாலிக், ஷாவீஸ், ஹன்பாலீஸ், ஜாதிகளில் பெண்ணுக்கு விவாகம் முடிகிறவரையில் தாயுடனிருக்கவேண்டுமென்றும் ஏற்பட்டிருக்கின்றது.

122. ஆண்பிள்ளைகளை தாய் தன் வசத்தில் வைத்துக்கொண்டிருக்கவேண்டிய விதிகள் அந்தந்த ஜாதிக்குத் தகுந்தபடி யிருக்கின்றன. தாய் ஆண்பிள்ளையை புருஷப்பருவமடைகிற வரையில் தான் வைத்திருக்கலாமென்று மாலிக் ஜாதி அனுஷ்டானத்தில் ஏற்பட்டிருக்கிறது.

123. ஷாவி, ஹன்பாலி ஜாதிகளில், ஏழுவருஷம் வரையில் தாயின் சம்ரட்சணையிலிருந்து, பிறகு தாயிடத்திலேயாவது அல்லது தகப்பன் சம்ரட்சணையிலாவது இஷ்டப்படி ஒரு ஆண்பிள்ளை யிருக்கலாமென்றும் ஏற்பட்டிருக்கிறது.

124. ஹனவி சாஸ்திரிகள், ஏழாவது வயது முடிந்தபிறகு ஒரு ஆண்பிள்ளையை வளர்த்துக் காப்பாற்றவேண்டிய பாத்தியம் முடிந்துபோய் விடுவதாக அபிப்பிராயப்படுகிறார்கள்.

125. ஆண் அல்லது பெண்குழந்தைகளை பால்மறக்கிறவரையில் (அதன் காலம் இரண்டுவருஷம்) தாயின் வசத்திலிருந்து அவளுடைய சம்மதமின்றிப் பிரிக்கக்கூடாதென்றும், அதன்பிறகு ஆண் குழந்தையை சம்ரட்சிக்கவேண்டிய பாத்தியம் பிதாவினுடையதென்றும், பெண் குழந்தைகளை ஏழுவயது வரையில் தாய் வளர்க்க பாத்தியப்பட்டவளென்றும் ஷியா கிர்ந்தகர்த்தாக்கள் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள்.

126. ஹனவி ஜாதியில் குழந்தைகளை சம்ரட்சிக்க வேண்டிய பாத்தியம் இதனடியில் கண்டவர்கள் வரிசைக் கிரமமாக அடையவேண்டும்.

(*a*) ஸ்திரீ பாத்தியஸ்தர்கள்.

1. தாய்.
2. மாதாமகி (தாயின் தாய்).
3. பிதாமகி (தகப்பனின் தாய்).
4. ஒரே தகப்பனுக்கும் தாய்க்கும் பிறந்த சகோதரி.
5. ஒரே தாய் வயற்றில் வேறொரு தகப்பனால் பிறந்த சகோதரி.

6. வேறொரு தாயால் தகப்பனுக்குப்பிறந்த சகோதரி.
7. ஒரே தகப்பனுக்கும் தாய்க்கும் பிறந்த சகோதரி யின் பெண்.
8. ஒரே தாய்க்கு வேறொருவனால் பிறந்த சகோரியின் பெண்.
9. ஒரே தகப்பனுக்கும் தாய்க்கும் பிறந்த, தாயைச் சேர்ந்த சகோதரி.
10. ஒரே தாய்க்கு வேறொருவனால் பிறந்த தாயைச் சேர்ந்த சகோதரி.
11. தகப்பனுக்கு வேறொருத்தியால் பிறந்த சகோதரி யின் பெண்.
12. சகோதரருடைய பெண்கள்.
13. அத்தை, (தகப்பனின் சகோதரி).

(*b*) மேற்சொல்லிய ஸ்திரீ பாத்தியஸ்தர்களில்லாவிட்டால் அடியில் சொல்லியிருக்கிற வரிசைக் கிரமமாக புருஷர்கள் குழந்தைகளைப் பாதுகாக்கவேண்டும்.

1. தகப்பன்.
2. பாட்டன். (பிதாவின் தகப்பன்).
3. ஒரே தகப்பனுக்கும் தாய்க்கும் பிறந்த சகோதரன்.
4. வேறொருத்தியால் தகப்பனுக்குப்பிறந்த சகோதரன்.
5. ஒரே தகப்பனுக்கு தாய்க்கும் பிறந்த சகோதரனுடைய மகன்.
6. வேறொருத்தியால் தகப்பனுக்குப் பிறந்த சகோதரனுடைய மகன்.
7. பிதாவின் சகோதரர்கள்.

பாத்தியங்கள் மேற்சொன்ன வரிசைக் கிரமமாகத் தான் கிடைக்கும். குழந்தைகளை வளர்க்க மேற்சொன்ன பாத்தியஸ்தர்கள் இல்லாவிட்டால், புருஷபாத்தியஸ்தர்களைச் சேர்ந்த சகோதர்களும், பந்துக்களும் குழந்தைகளை எடுத்து வளர்க்கவேண்டும். ஆனால், எந்

தப் புருஷனும், பெண்களை விவாகஞ்செய்ய பாத்தியப்படாத பந்துவா யிருந்தாலொழிய அர்தப் பெண் குழந்தைகளை தன் வசத்தில் வைத்து வளர்க்கக்கூடாது.

127. ஷியாக்கள், ஸூனிகள் இவர்கள் வழக்கம் வேறுவிதமா யிருக்கிறது. குழந்தையை வளர்க்க தாயில்லாவிட்டால், தகப்பனும், தகப்பனு மில்லாவிட்டால் தகப்பனைச்சேர்ந்த பெற்றோர்களும் அவர்களுடைய முன்னோர்களும், அவர்களுமில்லாவிட்டால் இரத்த சம்பந்தமான மற்ற நெருங்கின பந்துக்களும் வரிசைக்கிரமமாக அந்தக்குழந்தையை வளர்க்கலாம். இவர்கள் விஷயத்திலும், வளர்ப்பவன் சட்டப்படி, அந்த பெண் குழந்தையை விவாகஞ்செய்து கொள்ளக்கூடாத பாத்தியஸ்தனா யிருக்கவேண்டும்.

128. பொதுவாய் போஷகர்களால் வளர்க்கப்பட்ட பெண்கள் பிள்ளைகள் கல்யாணஞ்செய்து கொண்டாலும், துஷ்டகிருத்தியங்கள் செய்தாலும், தகப்பன் அல்லது கற்பிக்கிற ஆசிரியன் இவர்களுடைய பார்வையிலில்லாமலிருக்கும்படி வாசஸ்தானத்தை மாற்றினாலும், வேறு மதத்தைத் தழுவினாலும், அவர்கள் போஷணையிலிருந்தும் விலக்கப்படுவார்கள்.

129. சட்ட விரோதமாய்ப் பெற்ற குழந்தைகளை தாயும் தாயைச்சேர்ந்த பந்துக்களும் காப்பாற்றவேண்டும். வழியில் கண்டெடுத்த குழந்தையை கண்டெடுத்தவனாவது, சர்க்காரிலாவது வளர்க்கவேண்டும்.

(D) விவாகம்.

1. விவாகஞ்செய்கிற விதம்.

130. மனிதர்கள் கெட்டவிஷயங்களில் பிரவர்த்தித்து காமாதுரர்களாய்த் திரியாமலிருப்பதற்கும், அந்தந்த ஜாதியார் சேர்ந்து வாழ்வதற்கும், ஒற்றுமையும் பாதுகாப்பும் உண்டாவதற்காகவும், விவாகம் ஏற்பட்டிருக்கிறது.

131. கல்யாணத்தை உடன்படிக்கையாக பாவித்தால், ஸ்திரீ புருஷர்கள் சாஸ்திர சம்மதமாயும், பரஸ்பரம் அவர்கள் தங்களு

டைய சம்மதத்தின் பேரிலும் சம்பந்தஞ் செய்தால், அந்த விவாகம் ஸ்திரமான உறவாகிறது.

132. சேர்க்கை பாத்தியமாக பாவித்தால், அந்த விவாகம் சிவில் சம்பந்தமான உடன்படிக்கையாகிறது. இவ்வித சம்பந்தம், ஸ்திரி புருஷர்களில் யாராவது ஒருவர் பிரேரேபித்து மற்றவர் ஒத்துசகோர்வதே போதுமானதா யிருக்கிறது. இந்த சம்பந்தத்தை ருசுச்செய்ய சாட்சிகளாவது தஸ்தாவேஜுகளாவது அவசியமில்லை,

133. கல்யாணத்தின் நிச்சயத்தைச்செய்ய வதூவரன்களுடைய ஸ்திதியைக்கொண்டு உளகிக்கவேண்டும். விவாக உடன்படிக்கை செய்துகொள்ளுகிற ஸ்திரீபுருஷர்கள், விவாகமின்னதென்று தெரிந்துகொள்ளக்கூடிய வயதுள்ளவர்களாயும் சக்தியுள்ளவர்களாயு மிருக்கவேண்டும். அவர்களில் யாராவதொருவர் கல்யாணமின்னதென்று தெரிந்துகொள்ள சக்தியற்றவர்களா யிருந்தாலும் அவர்களுக்குச்செய்த விவாகம் செல்லாது. இரண்டாவது, தகப்பன் அல்லது போஷகர் இவர்களால் ஏற்பாடு செய்யாத கல்யாணமாயிருந்தால், கல்யாணஞ்செய்துகொள்ளுகிற ஸ்திரீபுருஷர்கள் பருவமடைந்தவர்களா யிருக்கவேண்டும். விவாகங்கள் சதிபதிகளின் சம்மதமின்றி கட்டாயத்தின் பேரில் செய்கிறதாயிருந்தால் செல்லாது.

134. விவாகநிச்சயஞ் செய்வதற்கு, ஸ்திரீபுருஷர்கள் ஸ்வபுத்தியோடும் கல்யாணமின்னதென்று தெரிந்துகொள்ளக் கூடியவர்களாயிருக்கவேண்டுமென்றும், யௌவனமடைந்தவர்களாயும், கட்டாயப்படுத்தாமல் ஸ்வதந்திர முள்ளவர்களாயு மிருக்கவேண்டுமென்றும் வடாவா அலங்கிரி (Fatawa Alamgiri) என்பவர் சொல்லுகிறார். மைனர்களால் நிச்சயஞ் செய்யப்பட்ட விவாகத்தை அவர்களின் போஷகர் சம்மதிக்க வேண்டும்.

135. மேற்சொன்னவைகள் தவிர, சட்டப்பிசகென்று நீக்கப்பட்டிருக்கிற பந்துக்களுக்குள் சம்பந்தஞ் செய்வதும், கல்யாணஞ் செய்து கொள்ளுகிற பெண்ணுக்கு நியாயமான புருஷனிருக்கும்போதும், கல்யாணஞ்செய்து கொள்ளுகிற புருஷனுக்கு சட்ட

சம்மதமான பெண்சாதிகள் நான்குபேர்க ளிருக்கும்போதும் செய்யப்படுகிற கல்யாணம் செல்லாது.

2. விவாக நிஷித்தங்கள்.

136. மகமதிய சட்டப்படி ஸ்திரீபுருஷர்கள் நியாயமாகவோ அநியாயமாகவோ யேற்பட்ட இரத்த சம்பந்தமான பந்துக்களையும், விவாக நிமித்தமாயும், வளர்த்த நிமித்தமாயும் ஏற்பட்ட பந்துக்களையும் விவாகஞ் செய்துகொள்ளக் கூடாதென்று நீக்கப்பட்டிருக்கிறது. இரத்த சம்பந்தமான அடியில்கண்ட பந்துக்களை விவாகஞ்செய்வது சட்டப்பிசகானதென்று ஸூனிகளும், ஷியாக்களும் அபிப்பிராயப் படுகிறார்கள். அவர்களாவன:—(1) ஸ்திரிபுருஷர்களுடைய முன் சந்ததிகள்; (2) பின்சந்ததிகள்; (3) சகோதரர்கள், சகோதரிகள் இவர்களுடைய வம்சஸ்தர்கள்; (4) தகப்பனுடைய, தாயுடைய சகோதரர்கள் சகோதரிகள்; (5) தங்களுக்குப் பிறந்த சந்தானங்களோடாவது, அவர்களுடைய வம்சஸ்தர்களோடாவது யாரும் சம்பந்தஞ் செய்யக்கூடாது. (6) ஒருவன் தன் தகப்பனின் பெண்சாதி (ஜனன தாயல்லாத மற்றவர்களை) யாவது, அவனுடைய முன் சந்ததியைச் சேர்ந்தவர்களுடைய பெண்சாதியையாவது, பிள்ளையின் பெண்சாதியையாவது, அந்தப் பிள்ளையின் சந்ததியைச்சேர்ந்தவர்களுடைய பெண்சாதியை யாவது விவாகம் செய்யக்கூடாது. (7) ஒருவன் தன் பெண்சாதியின் தாயையாவது, பெண்களையாவது, (வேறொருவனுக்குப் பிறந்த பெண்கள்), ஒரு ஸ்திரி தன் செக்களத்தி பிள்ளையையாவது, புருஷன் தன் வளப்பு சகோதரியையாவது, வளர்ப்புத்தாய் தான் வளர்த்த பிள்ளையின் சகோதரனையாவது விவாகஞ்செய்யக் கூடாது.

137. விபசாரத்தினால் சம்பந்தங்கள் ஏற்பட்டாலும் விவாக விஷயத்தில் அந்த சம்பந்தத்தினால் உண்டான உறவினர்களிடத்தில் சம்பந்தஞ் செய்யக்கூடாது. அதாவது:—ஒருவன் ஒரு ஸ்திரீயோடு நியாயவிரோதமாய் கல்யாண சம்பந்தமில்லாமல் கூடியிருந்தாலும் அந்த ஸ்திரியினுடைய தாயையாவது, பெண்ணை யாவது விவாகஞ் செய்யக்கூடாது. அந்த ஸ்திரியும் அப்படிச் சேர்ந்த புருஷனுடைய தகப்பனையாவது, பிள்ளையையாவது விவாகஞ் செய்யக் கூடாது.

138. ஒரு ஸ்திரி தான் முதலில் செய்துகொண்ட விவாகம் (Divorce) விமோசனமாகா திருக்கும்போது, மறுபடியும் புனர் விவாகம் செய்துகொள்ளக் கூடாது.

139. முடாசாலாக்கள் (Mutazalas) என்ற வகுப்பார் பல பாரியைகளை விவாகஞ் செய்வதை ஒத்துக்கொள்ளாததால் அவர்கள் தவிற, மற்ற மகமதியர்கள் ஒரே சமயத்தில் ஒருவன் நான்கு பாரி யாக்களை வைத்துக் கொண்டிருக்கலா மென்றும், அவர்களை ஒரே விதமாய் வித்தியாச மில்லாமல் நடத்தவேண்டு மென்றும் அனுஷ் டித்து வருகிறார்கள். வித்தியாசமாக நடத்தும் பட்சத்தில் ஒருத்தி யைத் தவிர மற்றவர்கள் அவனைவிட்டு நீங்கிவிடுவார்கள்.

140. இரண்டு ஸ்திரீகளை ஒருவன் விவாகம் செய்துகொள்ளு கிறான்; அந்த ஸ்திரீகளில் ஒருவன் புருஷனாயிருந்தால் மற்றவளை அவன் விவாகஞ்செய்ய பாத்தியப்படாத சொந்தக்காரனா யிருப் பானேயாகில், அப்படி பாத்தியப்பட்ட இரண்டு ஸ்திரீகளையும் ஒரு வன் விவாகம் செய்துகொள்வது நியாயமான தல்ல. ஆனால் அந்த விவாகத்தினால் பிறந்த பிள்ளைகள் நியாயமான தாகவே பாவிக்கப் படும்.

141. ஸுனிகளுடைய ஆசாரப்படி, ஒரு மகமதியன், விக் கிரஹம், அக்கினி இவைகளை யாராதனை செய்பவர்கள் தவிர மற்ற கிரிஸ்தவ, ஜுடைஸம் (Judaism) இந்த மதங்களை யனுஷ்டிக்கிற வர்களையும், நாஸ்திகர்களையும் விவாகஞ்செய்து கொள்ளலாம். விக் கிரஹ ஆராதனை செய்பவர்களுடன் செய்கிறவிவாகம் சட்டப்பிசகே ஒழிய, நீக்கிவிடக் கூடியதல்ல.

142. யாதொரு மகமதியஸ்திரீ, மகமதியனல்லாத மற்ற மத ஸ்தர்களை விவாகம் செய்துகொள்ளக் கூடாது.

ஷியாக்கள் இதுவிஷயத்தில் மேற்கண்ட ஸுனிகளுடைய ஆசா ரத்தில்சுவல்பபேதப்பட்டாலும், முடாஸாலாக்கள், உஸுலிகள், ஆக் பாரி வகுப்பைச்சேர்ந்த அனேகர்கள், ஸுனிகளைப்போல், கிரிஸ்த வர், ஜுடைஸமதஸ்தர்கள் இவர்களுடன் செய்கிற விவாகம் சட்ட சம்மதமானதாக ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆக்பாரி வகுப்பைச்

சேர்ந்த சிலர்மட்டும் அப்படிப்பட்ட கிரிஸ்தவர் முதலானவர்களுடன் ஸ்திரமாயல்லாமல் சிலகாலத்துக்கு மட்டும் விவாகம் ஏற்பாடு செய்யலாமென்று எண்ணுகிறார்கள்.

(3) விவாகஞ் செய்யவேண்டிய விதிகள்.

143. விவாககாலத்தில் முக்கியமாய் செய்யவேண்டிய காரியங்களாவன:—(1) ஸ்திரிபுருஷர்கள் ஒருவருக்கொருவர் சொல்லுகிற உடன்படிக்கையின் நிபந்தனைகளைக் கேட்டு அறிந்துகொண்டு அதற்கு உடன்பட வேண்டும். (2) அவர்கள் செய்துகொள்ளுகிற உடன்படிக்கையின்படி சுயேச்சையாய் விவாகபந்தத்தை அங்கீகரிக்க வேண்டும். (3) ஸ்திரிபுருஷர்கள் இன்னாரென்று ஸ்பஷ்டமாகத் தெரிவித்து ஒருவருக்கொருவர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

144. ஸுன்னிகள் அனுஷ்டானப்படி மேற்கண்டபடி உடன்படிக்கை செய்யுங்காலத்தில், அந்த உடன்படிக்கை சாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறபடி சரியாகச் செய்யப்பட்டதென்று ருசுச்சொல்ல குறைந்தது இரண்டு சாட்சிகளாவது கூடயிருக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. விவாகஞ் செய்துகொள்ள வேண்டிய ஸ்திரீ மகமது மதத்தை தழுவாதவளா யிருந்தால் அப்படிப்பட்ட சாட்சிகள் அவள் மதத்தைச் சேர்ந்தவர்களா யிருக்கவேண்டும்.

145. ஷியாக்கள் சட்டப்படி, விவாகத்திற்கு சாட்சிகள் அவசிய மில்லையென்றும், கல்யாணம் தூரதேசங்களிலாவது மற்றெங்கேயாவது செய்தாலும், அந்தக் கல்யாணம் எந்த தெசையிலும் செல்லுமென்று ஏற்பட்டிருக்கிறது. உடன்படிக்கைகளை ஒத்துக்கொண்டிருந்தாலும், வெளிப்படையான காரியங்களால் அங்கீகரித்தாலும் போதுமானது.

146. சாட்சிகளில்லாமல் வக்கீல் மூலமாய் விவாகத்தை நிச்சயஞ் செய்யலாமென்றும், மற்ற விஷயங்களில் அந்த வக்கீல்கள் செய்கிற உடன்படிக்கை செல்லுவதுபோல விவாக விஷயத்திலும் செல்லுமென்று ஸுன்னிகளும் ஷியாக்களும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். சாட்சிக ளில்லாமலே, வக்கீல் மூலமாயாவது, சமாசார மரிவிப்போன் மூலமாயாவது விவாகம் நிச்சயஞ் செய்யப்பட்டால்,

ஸ்டேனிகள் சட்டப்படி அந்தக் காரியஸ்தர்கள் அல்லது சமாசார மரிவிப்போன் விவாகநிச்சய விஷயமாய் அனுப்பிய கடிதம், அல்லது தந்தியில் இரண்டு சாட்சிகளிடத்தில் கையெழுத்துவாங்கி, அவர்களுடைய அனுமதியையும் பெறவேண்டும்.

(4) விவாக ருசு.

147. விவாகத்தைப் பிரத்தியட்ச சாட்சியத்தினுலாவது, சங்கதியைக் குறித்த அனுமான சாட்சியத்தினுலாவது ருசுப்படுத்தலாம். கல்யாண சங்கதியைப்பற்றிய சகல சடங்குகளையும் தான்கூட விருந்து நடத்தினதாக அந்தப் பிரத்தியட்ச சாட்சி தன்வாயினுற் சொல்லவேண்டும். கல்யாண உடன்படிக்கை ரூபமான தஸ்தாவேஜைக் கொண்டும் விவாகத்தை ரூபிக்கலாம். ஸ்திரிபுருஷர்கள் ஒரே வீட்டில் புருஷன் பெண்சாதி உறவாக வெகுகாலம் ஸ்னேகமாய் வாழ்ந்திருந்தாலும், அவர்களுடைய நடவடிக்கை புருஷன் பெண்சாதிகள் ஒருவருக் கொருவர் செய்துகொள்வதைப் போல் இருந்தாலும், அவர்கள் நியாயமான தம்பதிகளென்று ருசுப்படுத்தலாம்.

148. நியாயமான விவாகத்திற்குறிய சம்பந்தமாய் கல்யாணஞ் செய்துகொண்டால், கல்யாணவிஷயமாய் ஏற்படுத்தப்பட்ட சகல உடன்படிக்கைகளையும் கல்யாணமாப்பிளை பூர்த்திசெய்யக் கடமைப்பட் டிருக்கிருன். அதன்பிறகு அவர்களுடைய பந்துத்வத்திற்கும், சொத்து பாத்தியத்திற்கும் கெடுதியுண்டாக மாட்டாது. இந்தமாதிரி விவாகத்தில், புருஷன் தன் பெண்சாதியை நியாயமாயும், மரியாதையாயும், பட்சமாயும் நடத்தக்கடமைப்பட்டிருக்கிருன். அவன் பெண்சாதி அவனிடத்தில் கீழ்ப்படிந்து நன்றியறிந்தவளாயிருக்கவேண்டும்.

(5) உறுதியில்லாத சட்டவிரோதமான விவாகங்கள்.

149. சட்டசம்மத மில்லாததும், ஸ்திரமில்லாமல் நீக்கக்கூடியதுமான சம்பந்தங்கள் விஷயத்தில், நியாயவாதம் கிடையாது; அவர்கள் யாதொன்றுக்கும் கட்டுப்பட்டவர்களுமல்ல. விவாகம் நிறைவேறினுலொழிய (1) பெண்சாதி தனக்குச் சேரவேண்டிய

ஸ்திரி தனத்தைப் புருஷனிடம் கேட்க பாத்தியமில்லை; (2) தம்பதிகளில் யாராவதொருவ ரிறந்தாலும் அவர்சொத்துக்கு மற்றவர் பாத்தியஸ்தராக மாட்டார்கள்.

உடன்படிக்கை செய்துகொண்ட தேதிமுதல், விவாக சம்பூர்ணமாகிறதற்குள் ஸ்திரிபுருஷர்கள் சேர்ந்திருந்தால், அது சங்கதியினாலேயும், சட்டதாத்பரியப்படியும் நியாயமானதாக எண்ணப்படமாட்டாது.

150. தடுக்கப்பட்டிருக்கிற பந்துக்களைச் செய்துகொண்ட விவாகம் உறுதியில்லாததும் நீக்கக்கூடியது மாகிறது. இதற்கு நியாயவாத தாவாபாத்தியங் கிடையாது. தாவாசெய்தாலும் பலன் கிடைக்காது. விவாகம் நிறைவேறி முடிந்திருந்தால், ஸ்திரீ தன பாத்தியமுண்டு.

151. ஒருவன், ஒருஸ்திரீக்கு புருஷன் இருப்பதாக தெரிந்தாவது, தெரியாமலாவது, அவளை விவாகம் செய்துகொள்ள அதற்கு வேண்டிய சடங்குகளைச் செய்தாலும், சம்பந்தம் சுத்தமாய்ச் சட்டவிரோதமானது.

ஆரம்பத்திலேயே பிசகான காரியங்களினால் செய்யப்பட்ட சட்டவிரோதமான விவாகம் தடுக்கப்படாமல் முடிந்து, அதற்குக் குழந்தைகள் பிறந்தால் அவைகளை நியாயமான பிள்ளைகளாக ஒப்புக்கொள்ளவேண்டும். அப்படி விவாகம் செய்யப்பட்ட ஸ்திரிக்கு ஸ்திரீ தனமும் கிடைக்கும். விக்கிரக ஆராதனை செய்பவர்களை விவாகம் செய்வது, ஒரு ஸ்திரீக்குமேல் விவாகஞ்செய்து கொள்ளலாமென்றிருக்கிற ஜாதிகளில், ஒருவருக்கொருவர் சம்பந்தஞ்செய்ய பாத்தியமுள்ள நிலைமையிலிருக்கிற இரண்டு ஸ்திரிகளை ஒருவன் விவாகஞ் செய்துகொள்வது முதலியவைகள் செல்லாத விவாகங்கள்.

152. ஒரு மைனருக்கு, அவன் தகப்பன் அல்லது பாட்டனால் அவனுக்கு சரியான அந்தஸ்தோடு கூடிய பெண்ணை விவாகம் செய்திருந்து அந்த விவாகம் சகல விஷயத்திலும் தகுதியானதாயிருந்தால், அந்த மைனர் வயது வந்தபிறகு அந்த விவாகத்தை

ரத்துசெய்ய பாத்தியங் கிடையாது. கெண்ணியமில்லாமலும், உள தாரித்தனமாயும், நல்ல குணமில்லாமலும், மைனர்களுடைய நன் மைக்குக் கெடுதலுண்டாகக் கூடியதுமான விவாகத்தை, தகப்பன் அல்லது பாட்டன் செய்துவைத்தால், உடனே அந்த விவாகத்தை அந்த மைனரைச்சேர்ந்த மற்ற போஷகர்கள் அதைத் தடுக்காதிருந் தால், அந்தமைனர் (ஆண் அல்லது பெண்) மேஜரானவுடன் அந் தக் கல்யாணத்தை உறுப்படுத்தினல்தான் செல்லும்.

153. தகப்பன் பாட்டன் இவர்கள் அல்லாத மற்றவர்களால் ஒரு மைனருக்குச் செய்துவைத்த விவாகத்தை, அந்த மைனர் ஆணுகவிருந்தாலும் பெண்ணுகவிருந்தாலும் மேஜரானவுடன் அந் தக் கல்யாணத்தை உறுதிப்படுத்தவாவது, தள்ளிவிடவாவது பாத் தியமுண்டு. அந்தக்கல்யாணம் கெடுதல்செய்யாததாயிருந்தபோதி லும் அதற்கு மைனர்கள் உட்படவேண்டியதில்லே.

154. ஸுனிகளுடைய அபிப்பிராயப்படி ஒரு விவாகத்தை ரத்துசெய்கிறவரையில், அது சம்பந்தப்பட் டிருப்பதாக எண்ணப் படுகிறது. வெளிப்படையாய் அதை உறுதிப்படுத்துகிற வரையில் அந்த விவாகத்திற்கு பலமில்லேயென்று ஷியாக்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

155. மைனர்கள் மேஜரானவுடன் தங்களிஷ்டப்படி விவா கத்தை நீக்கிவிட்டால், அதை காஜியோஜனேசெய்து அனுமதி கொடுக்க வேண்டும். ஆனல், ஒரு பெண் தான் மைனராயிருக் கும்போது தனக்கு தன் போஷகரால் செய்துவைத்திருந்த விவா கத்தை ரத்துசெய்து காஜியினுடைய அனுமதியில்லாமல் வேருெரு வனே விவாகஞ் செய்துகொண்டால் அதற்காக அவள் தண்டனேக் குள்ளாக மாட்டாள். எதுவரையில் விவாகம் உறுதியாய் ரத்து செய்யப்படவில்லேயோ அல்லது காஜி யினுடைய அனுமதிபெற வில்லேயோ, அதுவரையில் விவாகபந்தம் நீங்காதென்றும், அதற் குள் தம்பதிகளில் யாராவதொருவ ரிறந்தால் அவர் சொத்துக்கு மற்றவர் பாத்தியப் பட்டவரென்றும் ஸுனிகளுடைய சட்டத்தில ஏற்பட்டிருக் கின்றது.

156. மைனர்கள் மேஜரானவுடன் தங்களுக்குச் செய்து வைத்த விவாகத்தைப்பற்றிய இஷ்டத்தைச் சொல்லவேண்டும். பாத்தியமில்லாத போஷகர்களால் மைனர்களுக்கு செய்துவைத்த விவாகம் அந்த மைனர்களால் உறுதிப்படுத்துகிற வரையில் கொஞ்சங்கூட ஸ்திரமானதல்லவென்று ஷியாக்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

157. ஒரு ஸ்திரி அவளிஷ்டப்படி யாரையாவது விவாகம் செய்துகொள்ள உடன்படிக்கை செய்து கொள்ளலாமென்றும், ஆனால் அந்த சம்பந்தம் தகுதியில்லாததா யிருந்தால், அவளைச் சேர்ந்த பந்துக்கள், அந்த சம்பந்தத்தினால் குழந்தைகள் பிறப்பதற்குள்ளாக அவளைத் தடுத்து காஜி மூலமாய் அந்த விவாகத்தை ரத்து செய்யலாம் என்று ஹனவி ஷியாக்கள் அபிப்பிராயப்படுகிறார்கள்.

158. நிலையில்லாத விவாகங்கள் :—ஆக்பாரிஷியாக்கள் குறிப்பிட்ட சில காலத்துக்குமட்டும் செய்துகொள்ளுகிற ஸ்திரமில்லாத விவாகங்கள் நியாயமானதென்று அங்கீகரிக்கிறார்கள். இந்த மாதிரி விவாகங்கள் அதிகமாக விக்கிரக ஆராதனை செய்கிற அரபிகளும் (Arabs) ஸபானுஸ் (Sabæans) களும் செய்கிறார்களென்றும், அரேபிய பிராபெட்டுகளால் (Arabain Prophets) அனுமதி கொடுக்கப்பட்டிருக்கின்றது. ஹிஜிரி பத்தாவது வருஷத்தில் இவ்வித விவாகங்கள் கூடாதென்று தடுக்கப்பட்டு மிருக்கின்றன. இவர்களில், ஒரு ஸ்திரியும் ஒருபுருஷனும் அவர்களிஷ்டப்படி இவ்வளவு காலத்துக்கென்று விவாக சம்பந்தத்தை ஏற்படுத்திக் கொள்ளலாமென்றும், அந்தக்காலம் முடிந்ததின் பேரிலாவது, அல்லது இருவரும் ஒத்துமையாய் உடன்பட்டாவது அவர்கள் சம்பந்தத்தை நீக்கிக்கொள்ளலாமென்றும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வித விவாகங்களை விமோசனஞ் (Divorce) செய்யக்கூடாது. ஆனால் சில சட்ட நிபுணர்கள் இந்த சம்பந்தத்தைப் புருஷன் பெண்சாதியின் சம்மதமின்றி நீக்கிவிடலாமென்று அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். அதற்கு அனுகுணமாக கல்கத்தா ஹைகோர்ட்டாரும் தீர்ப்புச் செய்திருக்கிறார்கள். (இ. லா. க. 10. பக்கம் 878). இந்தக் கடைசி அபிப்பிராயம் ஸ்திரி புருஷர்கள் செய்துகொண்ட உடன்படிக்கைக்கு விரோதப்

படுகிறது. ஸ்திரி கடன்பட்டவனுக்குச் சமானமென்றும், புருஷன் கடன் கொடுத்தவனுக்குச் சமானமென்றும், கடன்கொடுத்தவன் கடன்காரனை என்னவேண்டுமென்று செய்தாலுஞ்செய்யலாம் என்று தப்பான வழக்குகள் இதற்குப் பேசுகிறார்கள். இது ஷியாக்க ளுடைய அனுஷ்டான முற்றிலும் பிசகானது.

ஆதியிலேயே விரோதமான உடன்படிக்கை யிருந்தாலொழிய இவ்விதவிவாகங்களுக்குண்டான சந்ததிகள் நியாயமானதும்,சொத்து பாத்திய மடையத் தகுந்த தாகின்றன.

(6) மதப்பிரஷ்டர்களைப்பற்றிய விஷயங்கள்.

159. ஒரு மகமதியன் தன் மதத்தைவிட்டுப் புறமதத்தைத் தழுவினல், அவன் பெண்சாதி அவனை விவாக பந்தத்திலிருந்து நீக்கிவிடலாம்.

160. மகமதிய சட்டப்படி ஸ்திரிபுருஷர்கள் இருவரும்வேறு மதத்தில் சேர்ந்தால் அவர்களுடைய விவாகபந்தம் நீங்காது. அது போலவே ஒரு ஸ்திரி விக்கிரக ஆராதனை யல்லாத மற்ற மதங்களைச் சேர்ந்தால், அவளுடைய புருஷன் அவளை விவாகப்பந்தத்திலிருந்து நீக்கிவிட பாத்தியமில்லை. புருஷன் அந்த மதத்தை அனுசரித்த பிறகு அவனுடன் அவள் சேர்ந்திருக்க விரும்பினல் அது பிரயோ சனமற்றதாகும்.

161. விக்கிரக ஆராதனையல்லாத கிரிஸ்தவ, ஜுடைஸ, ஸோரோஸ்திரிய முதலான மதத்தைச் சேர்ந்த யாராவதொருவன் மகமது மதத்தைத்தழுவி, அவன் பெண்சாதி பழைய மதத்திலிருந் தாலும் அவர்களுடைய விவாகபந்தம் நீங்காது. விக்கிரக ஆராதனை செய்கிற ஒருவன் மகமது மதத்தைச்சேர்ந்து, அவன் பெண்சாதி சேராதிருந்தால் அவர்களுடைய விவாகபந்தம் நீங்கிவிடும். அவள் சேர்ந்துவிட்டால் நீங்காது. எந்த மதத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரியாவது மகமதிய மதத்தைச் சேர்ந்து அவளுடைய முன் மதத்தைச் சேர்ந்த புருஷனை விவாகபந்தத்திலிருந்து நீக்கிவிட வேண்டியிருந்தால் அடியில் விவரித்தபடி செய்யவேண்டும். அதாவது :—(1) அவள் மகமது மதத்தைச் சேர்ந்த தேசம் மகமதிய ராச்சியமாயிருந்தால், காஜி

மூலமாய் தன் புருஷனுக்கு நோட்டீஸ்விட்டு மகமது மதத்தைச் சேரென்று கேட்கவேண்டும். அவன் அதற்கு ஒத்துக்கொள்ளா விட்டால் விவாக பந்தத்தை நீக்கிவிடலாம்.

(2) அது மகமதிய மதத்தை அனுசரிக்காத தேசமாயிருந்தால் அவள் இஸ்லாம் மதத்தைச்சேர்ந்த நாள்முதல் மூன்றுமாதத்திற்கு பிறகு முந்தினவிவாக பந்தத்தை நீக்கிவிடலாம். இந்தியாவில் மகமதியர்கள் அதிகமாயிருப்பதால், இதை மகமதிய தேசமாகப்பாவித்து, மகமதிய மதத்தைச்சேருகிற ஸ்திரி ஜட்ஜ் அல்லது மாஜிஸ்ட்ரேட் மூலமாய் அவளுடைய முந்தியமதத்தைச் சேர்ந்த புருஷனை மகமதியமதத்தை யனுஷ்டிக்கிறாயா வென்று கேட்காமல் புதிதாய் வேறுவிவாகஞ் செய்துகொண்டால், அவள் வியபசாரகுற்றத்துக்குள்ளாகி தண்டிக்கப்படுவாளென்று கலகத்தா ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (இ. லா. கல் 18. பக்கம். 236). ஜட்ஜி அல்லது மாஜிஸ்ட்ரேட் அவள் மனுவை அலட்சியஞ் செய்தாலும், அல்லது புருஷன் அவளிஷ்டப்படி சேராவிட்டாலும், கோர்ட்டில் மனுச்செய்வதே அவள் பிறகு கிரிமினல் குற்றத்துக்கு உள்ளாகமாட்டாளென்றும், விவாகபந்தத்தை, அவள் மகமதிய மதத்தைச் சேர்ந்த மூன்றுமாதத்திற்குப் பிறகு நீக்கிவிட பாத்தியப்பட்டவளென்றும் எண்ணவேண்டும்.

162. ஒரு மகமதியன் தன்பெண்சாதி எந்தமதத்தைச் சேர்ந்தவளாயிருந்தாலும், அவன் தன்னிஷ்டப்படி அவளைத் தள்ளாமலிருந்தால், அவளுக்கு ஜீவனம்சம்கொடுக்க அவன் பாத்தியப்பட்டவனாவான்.

163. பெண்சாதி மைனராயிருந்து விவாகசம்பூர்ண மாகாதிருந்தால், அவளுக்குப் புருஷன் ஜீவனம்சம் கொடுக்கவேண்டியதில்லையென்று ஹனபி ஷியா சாஸ்திரங்களில் ஏற்பட்டிருக்கிறது. ஜீவனம்ச பாத்தியமில்லாத மைனர்களைபுருஷன் தான்வைத்து காப்பாற்றவேண்டிய அவசியமில்லை.

164. ஷாபி ஜாதிகளில் பெண்சாதி மைனராயிருந்தாலும் மேஜராயிருந்தாலும் புருஷன் தன் வசத்தில்வைத்து போஷிக்க வேண்டுமென் றேற்பட்டிருக்கிறது.

165. பெண்சாதி, குழந்தைகள் இவர்களுக்கு யாதொன்றும்வைக்காமல் குடும்பத்தைவிட்டு ஒருவன் ஓடிப்போய்விட்டால், அவன் பெண்சாதி அவனைவிட்டுப் பிரிந்து வசிக்க பாத்தியமுடையவளென்று ஷாவி சட்டத்தில் ஏற்பட்டிருக்கிறது. ஹனுவி ஜாதியில் காஜி இதுவிஷயத்திற்கு அனுமதி கொடுக்கவேண்டும்.

ஒருவிதவை தன் புருஷனுடைய எஸ்டேட்டிலிருந்து ஜீவனும்சம் அடைய பாத்தியமில்லையென்று பிரிவிகவுன்சிலார் தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். (கல். வீக்கிலி. நோட்ஸ் பக்கம். 449).

(E) விவாகபந்தத்தை நீக்கிவிடுதல்.

(1) பொதுவிஷயங்கள்.

166. பொதுவாய் ஸ்திரி புருஷர்கள் இதற்கடுத்த பாராவில் சொல்லியிருக்கிற விஷயங்களுக்காக தங்களுடைய விவாகபந்தத்தை தங்களிஷ்டப்படி நீக்கிக்கொள்ளலாம்.

ஸ்திரிபுருஷர்களில் யாராவது ஒருவர் கொடுமையாயும், ஓடிப்போவது முதலிய துஷ்டகிருத்திஞ் செய்கிறவரா யிருந்தால், மற்றவர் காஜியிடம் மனுச்செய்து கொண்டதின்பேரில் அவர்களுடைய விவாகபந்தத்தை நீக்கிவிட அந்தகாஜிக்கு அதிகாரமுண்டு. விவாக சம்பந்தமாய் ஸ்திரிபுருஷர்கள் செய்துகொண்ட உடன்படிக்கையை அவர்களில் யாராவதொருவர் நிறைவேற்றச் சக்தியற்றிருந்தாலும், மோசம் அல்லது வஞ்சனை முதலியதை யாராவது செய்தாலும், அப்படிப் பட்டவர்களுடைய விவாகபந்தத்தை நீக்கிவிட காஜிக்கு அதிகாரமுண்டு.

167. விவாகபந்தத்தைப் புருஷன் பிரித்தால் அதற்கு தாலக் (Talak) என்றும், ஸ்திரி நீக்கினால் அதற்கு கூலா (Khula) வென்றும், மனமொப்பி புருஷன் பெண்சாதி யிருவரும் நீங்கினால் அதற்கு முபாராத் (Mubarat) என்றும் பெயர்.

168. இவ்விதமாய் விவாகபந்தத்தை நீக்குவதற்கு நியாயாதிபதியினுடைய தீர்ப்பு அனுவசியமென்று ஸுனிகளும், ஷியாக்களும்

அபிப்பிராயப் படுகிறார்கள். விவாகபந்தத்தை நீக்குவதற்கு வேண்டிய சகல காரணங்களும் செரியாயிருந்து அதன்பேரில் ஸ்திரி புருஷர்கள் நியாயமாய்ப் பிரிந்திருப்பதே போதுமானது.

169. ஸ்திரி புருஷர்களுக்குள் இல்வாழ்க்கை சம்பந்தமான விவகாரங்கள் ஏற்பட்டால், அவைகளை அந்த ஸ்திரி புருஷர்களைச் சேர்ந்த பந்துக்கள் மத்தியஸ்தராயிருந்து வழக்கைத் தீர்க்கவேண்டுமென கோரானில் (Koran) பலமாய் எழுதப்பட்டிருக்கிறது.

இதே அபிப்பிராயத்தை யொத்து, "தாலக்" மகா வெறுக்கத்தக்க செய்கையென்று பிராபெட் வெகு ஆத்திரமாய்ச் சொல்லியிருக்கிறார்.

170. விவாகபந்தத்தை நீக்குவதற்கு நியாயமான காரணங்களிருக்கின்றனவா வென்று, நியாயாதிபதிகள் யோசிக்க வேண்டுமென்று முடாசாலாக்கள் (Mutazalas) அபிப்பிராயப் படுகிறார்கள்.

(2) தாலக். (Talak).

171. ஹனவி ஜாதியில் தாலக் இரண்டு விதங்கள். (1) அரெபிய பிராபெட்டினால் கர்ணபரம்பரையாய் ஏற்பட்டிருக்கிற விதிகளின்படி விவாகபந்தத்தை நீக்குவது. இதற்கு தாலக்-உஸ்-சன்னது (Talak-us-Sunnat) என்று பெயர். (2) சாஸ்திர விரோதமாய் அல்லது தப்பானவழியாய் நீக்கலாமென்று மகமதியர்ப்தம் இரண்டாவது நூற்றாண்டில் அனுஷ்டானத்திற்கு வந்தது. இதற்கு தாலக்-உல்-பிடாட் (Talak-ul-Bidaat) என்று பெயர்.

172. ஷியாக்களும், மாலிகிகளும் பிடாட் தாலக்கை சட்டசம்மதமானதாக ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் பிடாட் தாலக்குபடி விவாகபந்தத்தைவிட்டு விலக்குவது பாபமாயிருந்தபோதிலும், அதை ஹனவி களும், ஷாவி களும் நியாயமானதென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

173. தாலக்-உஸ்-சன்னத் (Talak-us-Sannat) இரண்டுவிதங்கள். ஆசன் (Ahsan-மிகவும்தகுதியானது) ஹாசன் (Hasan-சாதா

ரணமாய் தகுதியானது). ஆசன் மாதிரியாய் பெண்சாதியை யொருவன் பரித்தியாகஞ் செய்தால், அந்தப் புருஷன் அடியில்கண்ட விதிகளுக்கு உட்படவேண்டும். (1) ஒரே வாக்கியத்தில் ஒரே தரமாக பெண்சாதியின் பரித்தியாக விதிகளைச்சொல்லவேண்டும். (2) அந்த பெண்சாதி பரிசுத்தமுள்ளவளா யிருக்கும்போதும், விவாகத்திற் குறிய சம்பந்தஞ்செய்ய யோக்கியமுள்ளவளா யிருக்கும்போதும் அப்படிச் செய்யவேண்டும். (3) பரித்தியாக விதிகளைச் சொன்ன பிறகு மூன்றுமாதகால பரியந்தம் தனக்குண்டான விவாக பாத்தியங்களைவிட்டு நீங்கியிருக்கவேண்டும். இந்தக் கடைசிவிதி, புருஷன் தன் பெண்சாதியை பரித்தியாகஞ் செய்யவேண்டுமென்று சொன்னது நீங்கக்கூடிய எண்ணமல்ல, உறுதியான எண்ணந்தானென்று அவனுடைய தீர்மானத்தை ரூபிப்பதற்காக ஏற்பட்டிருக்கிறது. மூன்று மாதங்கழிந்தபிறகு புருஷன் செய்த பரித்தியாகம் மாற்றக் கூடாத விதமாய் உறுதிப்படுகிறது.

174. ஹாசன் (Hasan) மாதிரியை யனுஷ்டித்தால், புருஷன் பரித்தியாக விதிகளை மாதத்திற்கொருதரமாக மூன்றுமாதத்திற்கு மூன்றுதரம் சொல்லவேண்டும். மூன்றுந்தரம் சொன்ன பிறகு பரித்தியாகம் திருப்பியடையக்கூடாததாகிறது. இவைகளிரண்டையுந்தான் ஷியாக்கள் அனுஷ்டிக்கிறார்கள்.

175. தாலக்-உல்-பிடாட் (Talak-ul-Bidaat) சம்பிரதாயப்படி பெண்சாதி பரிசுத்தமுள்ளவளா யிருநதாலும் இல்லாவிட்டாலும், புருஷன் விவாக பந்த பரித்தியாக விதிகளை ஒரே சமயத்தில் மூன்று விதிகளையும் சொல்லலாம். அதன்மேல் அந்தப்புருஷன் பெண்சாதி மூன்றுமாதகாலம்பரிசுத்தமாயிருந்துவிட்டால் பிரிவினை ஸ்திரப்படுகிறது.

176. ஒரு புருஷன் திடீரென்று முன் யோசனையில்லாமல் தன் பெண்சாதியை விலக்கவேண்டிய விதிகளைச்சொன்னால், மூன்று மாதங்கழிவதற்குள் என்றைக்காவது தான்சொன்னவைகளை மாற்றிவிடலாம். தன் சொல்லுக்குப் பரிகாரம் செய்வதற்குள் மூன்று மாதமாய்விட்டால் அதன் பிறகு மாற்றக்கூடாது என்று ஸுனிகளும் ஷியாக்களும் சொல்லுகிறார்கள்.

177. புருஷனும் பெண்சாதியும் பிரத்தியட்சமாயும், பூர்த்தியாயும் பிரிந்துபோனபிறகு அவர்கள் மறுபடி சம்பந்தஞ்செய்து கொள்ளக்கூடாது. அப்படிப் பிரிந்த ஸ்திரி வேறொருவனை விவாகஞ் செய்துகொண்டு அவனால் பரித்தியாகஞ் செய்யப்பட்டால் அதன் பிறகு முந்தின புருஷனை மறுபடி விவாகஞ்செய்து கொள்ளலாம். இந்த விதி அடிக்கடி ஸ்திரீகளைப் பரித்தியாகம் செய்யாதிருப்பதற்காகவே அரேபியாவில் எற்பட்டிருக்கிறது. மேலும் அபிமானம், அறிவு, கொஞ்ச நாகரிகம் இவைகளுள்ள ஜாதியாரை அடக்கியாளுவதற்காகவே மேற்கண்டவிதி யேற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஷியாக்களைக் காட்டிலும், ஸுனி ஜாதியில் தாலக் விஷயத்தில் வெகு அதிகாரஞ் செலுத்துகிறார்கள்.

178. ஸுனிகளுடைய ஆசாரப்படி, பெண்சாதியை நீக்குகிறவனுடைய எண்ணத்தைப்பற்றி சந்தேகமில்லாத விதமாயாவது, இரண்டர்த்தமுள்ள அல்லது ஒரு அர்த்தத்தோடுகூடிய வார்த்தையினாலாவது வெளிப்படையாய் தாலக்கை செய்யலாம்.

179. தாலக்கை பெண்சாதி முன்னிலையில் சொல்லவேண்டுமென்றும், அவளுக்கு அந்தச் சங்கதி தெரியாத வரையில் புருஷன் அவளை சம்ரட்சிக்கக் கடமைப்பட்டவனாகிறான்.

(3) தாலக் செல்லும் விதம்.

180. ஷியாக்களுடைய ஆசாரப்படி நியாயமான தாலக்கைச் சொல்லுவதற்கு மூன்றுவிஷயங்கள் முக்கியமானவைகள். (1) புருஷன் மேஜராயிருக்கவேண்டும், (2) அவன் நல்ல புத்தியோடும், விஷயங்களை யறியுந் திறமையுள்ளவனாயிருக்கவேண்டும். (3) சுவேச்சையாயும், நிச்சயமான எண்ணத்தோடும் விவாக பந்தத்தை நீக்க தீர்மானித்தவனாயிருக்கவேண்டும். பாரியா பரித்தியாகம் கட்டாயத்தின்பேரில் செய்தால் சட்டப்பிசகாயும் செல்லாததாயுமாகிறது.

181. மோசமாயாவது, நியாயமில்லாத செல்வாக்கின் பேரிலாவது பாரியா பரித்தியாகஞ்செய்ய உத்திரவு கிடைத்தால் செல்லாது. எல்லா தாலக்களிலும் புருஷனுடைய எண்ணம் முக்கியமானது.

182. ஒருவன் குடித்து வெறிகொண்டிருக்கையிலாவது, அல்லது மயக்கமுண்டாக்கத் தக்க வேறெந்த வஸ்துவை யாவது உட்கொண்டு அதினுல் சித்தசுவாதீன மில்லாதிருக்கையிலாவது பாரியா பரித்தியாக நிபந்தனைகளைச் சொன்னுல் செல்லாது. தவறுதலினுலாவது, அசாவதானமாக வாவது, முன்கோபத்தினுலாவது, வேடிக்கையாக வாவது, தூங்கும்போதாவது "தாலக்கை" ச்சொன்னுல் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல.

183. ஹனுவி களுடைய வழக்கப்படி பருவமடைந்தவனும், நல்ல புத்தியோடுகூடிய ஒரு புருஷனுல் "தாலக்கை" சொன்னுல் அது ஏற்றுக்கொள்ளத் தக்கதாகும். அவன் சுவதந்தரமுள்ளவனுயிருந்தாலும், அடிமையா யிருந்தாலும், சுவேச்சையாகவாவது, கட்டாயத்தின் பேரிலாவது, விளையாட்டுக்காகவாவது, பரிகாசத்திற்காகவாவது, முன்யோசனை யில்லாமலாவது, வாய்தவறியாவது சொன்னுலும் அந்த தாலக் செல்லுமென்று ஹனுவிகள் ஒப்புக்கொள்ளுகிருர்கள். குடித்து வெறிகொண்டிருக்கும்போதும் சொன்ன தாலக் செல்லும். ஆனுல் அவனுக்கு இஷ்டமில்லாமலிருக்கும்போது கட்டாயத்தின் பேரிலாவது, மருந்தாக வாவது அந்த லாகிரிவஸ்துக்கள் கொடுக்கப்பட்டிருந்தால், அதினுல் புத்தி சுவாதீனமில்லா திருக்கும்போது தாலக் சொன்னுல் செல்லாது.

184. கட்டாயத்தின் பேரில் செய்த பாரியா பரித்தியாகம் ஹனுவி விஷயத்தில் செல்லுமென்று கல்கத்தா ஹைகோர்ட்டார் தீர்மானித்திருக்கிருர்கள். (4 பெ. லா. ரி. A. C. ப 13.)

(2) ஸூனிகளைச் சேர்ந்த எல்லாவகுப்பாரும், வயது வராத புருஷனுல் செய்கிற பாரியா பரித்தியாகம், அவன் புத்தி விசாலமுள்ளவனுயிருந்தாலும் செல்லாது.

(3) ஷியாக்களுடைய சட்டப்படி பாரியா பரித்தியாகம் செய்யும்போது தகுந்த இரண்டு சாட்சிகள்கூட இருக்க வேண்டுமென்றும், அந்தசாட்சிகளும் ஏககாலத்தில் ஆஜரிருக்க வேண்டுமென்றும் ஏற்பட்டிருக்கிறது.

(4) ஸூனிகள் சாட்சிகள் வேண்டிய தில்லையென்று அபிப்பிராயப் படுகிருர்கள்.

(5) ஷியாக்களுடைய சட்டப்படி, கோபாவேசத்தினால் தன் னடக்கமில்லாத சமயத்தில் சொன்ன தாலக் செல்லாது. ஆனால் ஸூனிகளுடைய சட்டப்படி செல்லும்.

(4) கூலாவும் முபாராத்தும்.

(KHULA AND MUBARAT.)

185. ஒரு ஸ்திரி தன்புருஷனை பரித்தியாகஞ் செய்யவேண்டி யிருந்தால், விவாக காலத்தில் அவளுக்கு கொடுக்கப்பட் டிருந்த ஸ்திரீ தனம் அல்லது மற்ற சொத்துக்களைப் புருஷனிடம் திருப்பிக் கொடுத்த பிறகு விவாகபந்தத்திலிருந்து நீங்கவேண்டும். இதற்குத் தான் "கூலா" என்று பெயர். புருஷன் "கூலாவை" ஒப்புக் கொள்ள மாட்டேனென்று மறுக்கலாம். ஆனால் தகுந்த காரணங்க ளின்பேரில் காஜிக்கு அவனை ஒப்புக்கொள்ளும்படி கட்டாயஞ் செய்ய பாத்தியமுண்டு.

ஸ்திரீ புருஷர்களுக்கு மன ஒத்துமை யில்லாததினாலாவது, அல்லது வேறு காரணத்தினா லாவது இருவருமிஷ்டப்பட்டு வேறு பட்டால் அதற்கு "முபாராத்" என்று பெயர்.

ஸூனிகளுடைய சட்டப்படி ஸ்திரீ புருஷரிருவரும் தங்கள் சம்மதத்தின்பேரில் பிரிந்தால், அவர்களுக்கு விவாக விஷயமாய்க் கிடைத்த சொத்துக்களுடைய பாத்தியம் போய்விடும்.

186. கூலா, தாலக் இவைகளுக்கு முன்னால் என்னவிதிகள் ஏற்பட்டிருக்கின்றனவோ அந்த நிபந்தனைகளின்படியே "முபாராத்" ஏற்பட்டால்தான் நியாயமான தாகும்.

ஒருவன் சதா தன்பெண்சாதியை கொடுமையாய் நடத்தினா லும், விவாக சம்பந்தமான உடன் படிக்கைகளை நிறைவேற்றாம லிருந்தாலும், பயித்தியமுள்ளவனா யிருந்தாலும், விவாகத்திற்கு முந்தியே தீராதவியாதி யுள்ளவனாயும், வலிமையற்றவனாயு மிருந் தால், அப்படிப்பட்ட புருஷனை நீக்கிவிட காஜி உத்திரவு கொடுக் கலாம்.

விவாகசம்பந்தமான உடன்படிக்கையை ஒருவன் செய்யாவிட் டாலும், அதை ஒத்துக்கொள்ளா விட்டாலும், அப்படிப்பட்ட புரு ஷனை நியாயாதிபதி நீக்கிவிட தீர்ப்புச்சொல்லாம்.

(F) ஸ்திரிதனம் (மாஹ்ர். Mahr)

(1) பொது விஷயம்.

187. மாஹ்ர் அல்லது "ஸ்திரிதனமென்பது," விவாகவிஷயமாய் பெண்ணுக்கு, கல்யாணசம்பூர்ணமாவதற்கு முந்தியே இன்னது கொடுக்கிறதென்று செய்யப்படுகிற ஏற்பாடாம். ஒவ்வொரு விவாகத்திலும் "மாஹ்ர்" இவ்வளவென்று நிச்சயஞ் செய்வது முக்கியமான நிபந்தனையாயிருக்கிறது. விவாக உடன்படிக்கை காலத்தில் "மாஹ்ர்" இவ்வளவென்று தீர்மானமாய் ஏற்படாமல், பொதுவாய்ச் சொல்லியிருந்தால், அப்படிப்பட்ட பெண்சாதிக்கு அவள் குடும்பத்தின் அந்த ஸ்துக்குத் தகுந்த வழக்கமான ஸ்திரீதன பாத்தியம் அவளுக்குக் கிடைக்கவேண்டுமேயொழிய, கிடைக்காமல் போய்விடாது. ஸ்திரி தனமே கிடையாதென்று முதலில் ஏற்பாடு செய்திருந்தாலுங்கூட புருஷன் அதைக் கொடுக்கக் கட்டுப்பட்டவனென்று சட்டமேற்பட்டிருக்கிறது.

188. ஸ்திரி தனத்தின் தொகை தேசத்திற்கு தேசம் வித்தியாசப்படுகிறது; அதன் உச்சத்தொகை இவ்வளவுதான் என்பதற்கு சட்டங்கிடையாது. அவரவர் ஜாதிக்குத் தக்கதாகவும், அந்தஸ்துக்குத் தக்கபடியும் ஸ்திரிதனத்தின் தொகையை நிச்சயஞ் செய்ய வேண்டும்.

(2) பல மாதிரியான ஸ்திரிதனங்கள்.

189. விவாக காலத்திலாவது அல்லது அதற்கு முன்பாவது பின்பாவது ஸ்திரிதனம் இவ்வளவென்று நிச்சயமாய் தீர்மானஞ் செய்யாவிட்டாலும், வேண்டுமென்றெஇவ்வளவு தொகையென்று ஏற்பாடு செய்யாமல் விட்டுவிட்டாலும், அப்படிப்பட்ட விவாகமான பெண்சாதி அவள் அந்தஸ்துக்குத் தகுந்த வழக்கமான ஸ்திரீதனத்தை அடையலாம். அதற்கு மாஹ்ர்-உல்-மிஸ்ல் (Mahr-Ul-Misl) என்று பெயர்.

190. வழக்கமான ஸ்திரிதனத்தை, ஒருவளுடைய தகப்பனின் குடும்பமிருக்கிற அந்தஸ்திலிருந்தும், அவளுடைய சொந்த யோக்கியதையிலிருந்தும் ஏற்படுத்தவேண்டும். சில சமயங்களில் புருஷனுடைய செல்வம் அந்தஸ்து, காலதேச வர்த்தமானம், ஸ்திரி

யினுடைய சுற்றத்தாருடைய யோக்கியதை இவைகளை யனுசரித்து ஸ்திரிதனம் இவ்வளவென்றேற்படவேண்டும்.

191. ஸுனிகளுடைய சட்டப்படி நிஜமாகவாவது, அனுமானமாக வாவது விவாகம் பூர்த்தியானவுடன் ஸ்திரி தனத்தைக் கொடுக்கவேண்டும். எதற்காகவாவது புருஷனும் பெண்சாதியும் சேர்ந்திருந்தால், விவாகப்பூர்த்தி யானதாகவே எண்ணப்படுகிறது. இதற்கு (கில்வட்-உஸ்-ஸாஹி-Khilwat - us - Sahih) "செல்லக் கூடிய ஏகாந்தமென்று" பெயர்.

192. ஷியாக்களுடைய சட்டப்படி விவாக உடன்படிக்கை பூர்த்தியானவுடன் (அதாவது நிச்சயமான விவாக சம்பூர்ணமானவுடன்) ஸ்திரி தனத்தைக் கொடுக்கவேண்டும். ஆனால், கேட்டவுடன் ஸ்திரி தனத்தின் சிலபாகத்தைக் கொடுக்கிறதும், விவாக பந்தம் நீங்கும்போது சிலபாகத்தைக் கொடுக்கிறதும், வழக்கமாக ஏற்பட்டிருக்கிறது. இதற்கு "மாஹ்ர்-உல்-முயாஜல்" (Mahr-Ul-Muajjal) கேட்டவுடன் கொடுக்கிற ஸதிரி தனமென்று பெயர்.

கேட்டவுடன் கொடுக்கவேண்டிய ஸ்திரிதனத்தை ஒருவன் கொடுக்கத் தவறினுல், அவன் வீட்டில்போய் குடித்தனஞ்செய்ய மாட்டேனென்று அவன் பெண்சாதி சொல்லலாம். மற்ற பாகத்துக்கு "மாஹ்ர்-உல்-முவாஜால்" (Mahr-ul-Muwajjal) நிறுத்தி வைக்கப்பட்ட ஸ்திரீ தனமென்று பெயர். புருஷனிறந்து போவதினுலாவது, பாரியா பரித்தியாகம் (Divorce) செய்வதினுலாவது விவாகபந்தம் நீங்குகிறவளையில் அந்த நிறுத்திவைக்கப்பட்ட ஸ்திரி தனம் கொடுக்கப்பட மாட்டாது. இந்தியாவில், கேட்டவுடன் கொடுக்கிற அலலது நிறுத்திவைக்கப்பட்ட ஸ்திரிதனத்தை சமபாகமாகப்பிரிக்கிற வழக்கமேற்பட் டிருக்கிறது. ஆனுல், சம்பந்தஞ் செய்து கொள்ளுகிறவர்கள் ஸ்திரிதன சம்பந்தமாய் அவர்களுக்குத் தோன்றின ஒப்பந்தஞ் செய்துகொள்ள பாத்தியமுடையவர்களா யிருக்கிறுர்கள்.

193. ஸ்திரிதனம் இவ்வளவென்று சொல்லாமல் பொதுவாய்மட்டும் கொடுப்பதாகச் சொல்லிவிட்டு, இன்ன சமயத்தில் கொடுக்கவேண்டு மென்ருவது, கேட்டவுடன் இவ்வளவு தொகை கொடுக்கவேண்டும், அல்லது நிறுத்திவைக்கிற தொகை இவ்வளவிரு

க்க வேண்டுமென்றுவது விவாக உடன்படிக்கை காலத்தில் நிச்சயமாய் ஏற்படாவிட்டால், அந்த விவாகசம்பந்தஞ் செய்துகொள்ளுகிறவர்களுடைய ஜாதிவழக்கப்படி என்ன துகை ஏற்பட்டிருக்கிறதோ அந்த துகையைக் கொடுக்கவேண்டும்.

194. ஸுனிகளுடைய சட்டப்படி விவாகப்பூர்த்திக்கு முன் விவாகசம்பந்தம் நீக்கப்பட்டால், பெண்சாதிக்கு ஸ்திரிதனத்தில் பாதிதான் கிடைக்கும். சில ஷியாக்கள் இது விஷயத்தில் ஸுனிகளுடைய அபிப்பிராயத்தை ஒத்திருக்கிறுர்கள். மற்றவர்கள், அவளுக்கு ஏதாவது இனுமாகத்தான் கொடுக்கப்படுமே யொழிய பாதி கிடைக்கா தென்கிறுர்கள். இதைக்காட்டிலும் முந்தியதுதான் உத்தமமென்று மதிக்கப்படுகிறது.

195. ஒருவன் மரணவியாதியா யிருக்கும்போது தன்பெண்சாதியை பரித்தியாகம் செய்துவிட்டு மூன்றுமாதத்திற்குள் இறந்துபோனுல், அவனுடைய சொத்தில் அவன் பெண்சாதிக்கு பாகமுண்டு.

விவாகப்பூர்த்தியாவதற்குள் தம்பதிகளில் யாராவதொருவரிறந்தால், பிழைத்திருப்பவர் இறந்தவருடைய சொத்தில் ஒருபாகத்தையடையலாம்.

ஸ்திரிதனத்திற்குப் பதிலாக வேறொருசொத்தை மாற்றிஞல் அதற்கு பாய்-முகாஸா (Bai-Mukasa) எனப்படும்.

196. ஒரு விதவையின் ஸ்திரிதன பாத்தியம், புருஷன்வாங்கின கடனுக பாவிக்கப்பட்டு, அந்தப்புருஷன் எழுதிவைக்கிற உயிலுக்கும், அவனுடைய சந்ததியாரின் சொத்து பாத்தியத் திற்கும் முந்தினபாத்தியமாகச் செல்லும். ஆனுல் குறித்த யாதொருசொத்தில்மட்டும் பாத்தியமேற்படாது. ஒரு ஸ்திரி ஸ்திரிதனகடன் பாத்தியத்திற்காக தன் புருஷன் சொத்துக்களை நியாயமா யடைந்தால், அந்தக்கடன் தனக்கு வருகிறவரையில் அந்த சொத்துக்களைத் தன் வசத்தில் வைத்திருக்கலாம். (14 மூர். இ-அ. பக்கம் 398). பிறகு வார்சுகளிடத்தில் விடவேண்டும்.

197. ஸ்திரிதனக் கடனுக்காக தன் புருஷன் சொத்தை வைத்துக்கொண்டிருக்கிற ஸ்திரி, அந்த சொத்தின் வரும்படியி

விருந்து அவள் கடன் தீர்ந்தபிறகு சொத்தைவிடாம லிருந்தால், அவள் புருஷனுடைய வார்சுகள் அந்த சொத்தையடைய அவள் பேரில் வியாச்சியஞ் செய்யலாம்.

198. புருஷன் இறந்துபோகிற வரையிலாவது, பாரியா பரித்தியாகஞ் செய்கிறவரையி லாவது, "நிறுத்திவைக் கப்பட்ட" ஸ்திரிதன பாத்தியத்தைக்கேட்க காலம்வராது. "கேட்டவுடன் கொடுக்கவேண்டிய ஸ்திரிதனம்" என்றுமிறுக்கவேண்டிய கடனு யிருப்பதால், கேட்டவுடன் அதை அட்டியில்லாமல் கொடுத்துவிட வேண்டும். தெளிவாயும் சந்தேகமின்றியும் பெண்சாதி ஸ்திரிதனத் தைக் கேட்டும் அதைப் புருஷன் கொடாவிட்டால் அன்றுமுதல் வியாச்சியமூல முண்டாகிறது. விபரமாய் அதைப் பெண்சாதி கேட்காமலிருந்தால், அவள் அந்த ஸ்திரிதனபாத்தியதையையடைய காலாவதி கெடுதல்செய்யாது. ஸ்திரிகள் தங்களுக்குச் சேரவேண் டிய ஸ்திரிதனத்தை, புருஷனுடைய வாழ்நாட்களில் இஷ்டப்பட் டால் கேட்கவும், கேட்கவேண்டிய காலத்தை தங்களிஷ்டப்படி வைத்துக்கொள்ளவும் சுதந்திர முடையவர்களாயிருக்கிறார்கள். (15 பெ. லா. ரி. A. C. பக்க. 306, 5 பெ. ல. ரி. பக்க 84).

199. விவாகத்திற்கு முன் புருஷனும் பெண்சாதியும், தங்க ளில் யாராவதொருவர் இறந்தால் அவர் சொத்தில் மற்றவர் பாகம் பெறக்கூடாதென்று உடன்படிக்கை செய்துகொண்டாலும் அந்த உடன்படிக்கை செல்லாது; அவர்களில் யாராவதொருவரிறந்தால் பிழைத்திருப்பவர், இறந்தவருடைய சொத்தில் நியாயமான பாக த்தையடைவார்.

(G) மைனர்கள்.

(1) மேஜராகவேண்டிய வயது.

200. இஸ்லாமா மதப்படி ஒருமைனர் மேஜராகவேண்டிய காலம் இரண்டு வித்தியாசமான சமயங்களிலேற்பட் டிருக்கின் றன. முதலாவது அவர்களுடைய போஷகர்களுடைய பந்தத்தி லிருந்து விடுபட்டு சுவேச்சையாயிருக்கிற காலமும், இரண்டாவது, அவர்கள் தங்கள் சொத்து முதலியவைகளை ஒப்புக்கொண்டு மேற் பார்வை பார்க்கிற காலமும்.

இந்த விரண்டுகாலங் களுக்கும் ஸின்னி-புலுவ் (Sinnei-Bulugh) பக்குவமடைகிற வயது, ஸின்னி-ரஷ்ட் (Sinni - Rushd) சுவேச்சாபுத்திவருகிற வயது என்று சொல்லப்பட்டிருக்கின்றன.

201. ஹனுவிகளும் ஷாவிகளும் அப்படிப் பக்குவமடைகிற காலம் 15 வது வயது முடிந்தபிறகு வருகிறதென்றும், மாலிகிகள் 18 வது வயது முடிந்தபிறகு அது வருகிறதென்றும் சொல்லுகிறார்கள். பொதுவாக ஹனுவிகளும் ஷாவிகளும், ஒருமைனர் பக்குவமான வயது வந்ததும் தன்னுடைய போஷகனுடையபந்தத்திலிருந்து விடுபட்டபோதே அவனுடைய சொத்தையும் போஷகர்கள் அவனிடத்தில் ஒப்புவிக்கிறபடியால், அந்த சொத்தை வகிக்க அப்போதே பாத்தியப்படுகிறுனென்று எண்ணுகிறார்கள்.

இந்தியன் மெஜாரிடி ஆக்ட் (1875ளுபத்து 9 வது ஆக்ட்) 2வது பிரிவு கிளாஸ் (*a*) ல் சொல்லப்பட்டிருக்கிறபடி யாதொரு மைனர் செய்கிற கல்யாணம், ஸ்திரீதனம், தத்து இவைகளை பாதிக்காது. கோர்ட் ஆவ் வார்ட்ஸ் ஆக்ட் (1890ளுபத்து 8 வது ஆக்ட்டின்படி), கோர்ட்ஆவ்வார்ட்ஸில் இல்லாத மைனர்கள் 18 வது வயது முடிந்தபிறகு மேஜராகிறதாகவும், கோர்ட்ஆவ்வார்ட்ஸில் மைனரையும் அவர்களுடையசொத்து முதலியவைகளையும் மேன்பார்வை பார்த்துவருகிறதாயிருந்தால் அப்படிப்பட்ட மைனர் 21 வது வயது முடிந்தபிறகு மேஜராவதாகவும் ஏற்பட்டிருக்கிறது.

(2) கார்டியன்கள் (போஷகர்).

202. மைனர்களைப் பாதுகாப்பதில் மூன்று விஷயங்கள் முக்கியமானவைகள். அவைகளாவன:—(1) குழந்தையை ஒருவர் சுவாதீனத்தில் வைத்து அவரையே கார்டியனுக ஏற்படுத்தினல், அவர் அந்தக் குழந்தையின் திரேகத்தைப்பாதுகாக்கவேண்டுவது, 2 வது குழந்தை வேறொருவர் வசத்திலிருந்தால் கார்டியனுயிருப்பவன் அந்தக் குழந்தை சரியாய் பாதுகாக்கப்பட்டு வருகிறதாவென்று மேற்பார்வை பார்ப்பது, (3) மைனருடைய சொத்துக்களை கார்டியன் பாதுகாத்து விசாரணை செய்வது.

203. கார்டியன்கள் இயற்கையானவராகவாவது அல்லது ஏற்படுத்தப்பட்டவராகவாவ திருக்கலாம். இயற்கையான முதல்

கார்டியன் தகப்பன். ஹனுபி ஜாதிகளில் தகப்பனிறந்த பிறகு, அவனுடைய மைனர்களுக்கு கார்டியன் அவனுல் நேமிக்கப்பட்டவன் வருவான். கார்டியன் நேமிக்காமல் தகப்பன் இறந்துபோயிருந்தால், அப்படி யிறந்தவனுக்குத் தகப்பனிருந்தால் அவர் தன்னுடைய பிள்ளையின் மைனர்களுக்கு கார்டியனுகவிருக்கலம். பிறகு மைனர்களின் பாட்டனிறந்தால் அவரால் நேமிக்கப்பட்டவன் அந்தக்குழந்தைகளுக்கு கார்டியனுவான்.

ஷியாக்களில் பாட்ட னுயிருடனிருக்கும்போது தகப்பனுல் நேமிக்கப்பட்ட கார்டியனைக்காட்டிலும் பாட்டனுக்கு மைனர்களுடைய கார்டியனுயிருக்க அதிக பாத்தியமுண்டு.

204. தகப்பன், பாட்டன், அல்லது நேமிக்கப்பட்ட கார்டியனுவது ஒருமைனருக்கில்லாவிட்டால், அந்தமைனருடைய இரட்சணையின்பொருட்டும், சொத்தைக் காப்பாற்றுவதற்காகவும் யாதொரு காஜி இராஜாங்கத்தாருக்குப் பிரதிநிதியாயிருந்து கார்டியனை நேமிக்கலாம். ஹனுபிகளுடைய சட்டப்படி அப்படிப்பட்ட கார்டியன் மைனருடைய தகப்பன் வழியைச் சேர்ந்த பந்துக்களில் தகுந்தவர் யாராவதிருந்தால் அவரையே காஜி நேமிக்கவேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறது. தகப்பன் பாட்டன் இவர்களைத் தவிற வேறெவரும் மைனர்களுடைய சொத்துக்கள் விஷயமாய் பிரவேசிக்க அதிகாரமில்லை. ஆனுல் யாதொரு நியாயாதிபதியால் நேமிக்கப்பட்டவனுக்கு அப்படிப் பிரவர்த்திக்க அதிகாரமுண்டு.

205. தகப்பன், தன்னுடைய மைனருக்கு கார்டியனுயிருப்பதற்காகவும், அந்த மைனருடைய சொத்தைப் பரிபாலிப்பதற்காகவும், தனக்கு நல்லவனுகத் தோன்றிய ஒரு பந்துவை நேமித்திருப்பதாக ஸர்வசுவதந்தரமாக உயில் எழுதிவைக்கலாம்.

206. மைனரின் தாயார் குழந்தையை தன்வசத்தில்வைத்து வளர்ப்பதற்குமட்டும் பாத்தியப்பட்டவளே யொழிய, அந்த மைனருடைய சொத்துக்கள் விஷயத்தில் கார்டியனுயிருக்க அவளுக்கதிகாரமில்லை. அவள் தன் புருஷன் அல்லது காஜியினுடைய பிரத்தியேகமான அனுமதியில்லாமல் அந்த மைனருடைய சொத்துவிஷயமாய்ச் செய்த நடவடிக்கைகள், செல்லாததாகும். அவள் அப்படிச் செய்த நடவடிக்கைகள் மைனருடைய நன்மைக்காகவும்,

லாபகரத்துக்காகவும் செய்யப்பட்டிருந்தால் அந்த நடவடிக்கைகள் உறுதிசெய்யப்படும்; இல்லாவிடில் நீக்கிவிடப்படும்.

207. தகப்பன் தன் மைனருக்கு கார்டியனாக அந்த மைனரின் தாயாரை (தன் பெண்சாதி) நேமித்திருந்தால், அவள் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவளாயிருந்தாலும், வேறுமதத்தைச் சேர்ந்தவளாயிருந்தாலும், சட்டப்படிநேமிக்கப்பட்ட கார்டியன்களுக்குள்ள அதிகாரங்களை அவள் செலுத்தலாம்.

208. மைனருடைய நன்மைக்காகஏற்பட்ட ஒவ்வொரு காரியங்களை நிறைவேற்றவும், மைனருடைய சொத்துக்களை ஜாக்கிரதையாகக் காப்பாற்றுவதற்கும் நேமிக்கப்பட்ட கார்டியன் உத்தரவாதியாவான். சில சமயங்களில், முக்கியமாய் தகப்பன் அல்லது பாட்டனாலாவது அல்லது வேறே ஒருவரால் பொதுவாகவாவது நேமிக்கப்பட்ட கார்டியன்கள், தங்களுக்குப்பதிலாக தங்கள் வேலையைச் செய்ய வேறொரு கார்டியனை நேமிக்கலாம்.

209. ஒரு கார்டியன் நியாயமான முகாந்தரத்தின் பேரில் மைனருடைய ஜங்கமசொத்துக்களைவிற்று, அப்படிவிற்ற பணத்தை மைனரின் நன்மையை உத்தேசித்து இலாபகரமான காரியங்களில் கொடுக்கவேண்டும்.

(*a*) யாதொரு கார்டியன் தனக்காவது, தன்னைச்சேர்ந்தவருக்காவது ஒரு மைனருடைய சொத்துக்களை எவ்விதத்திலும் விற்கக் கூடாது.

(*b*) சொத்தின் இரண்டத்தனை விலைக்காவது, மைனரின் இலாபத்தை யுத்தேசித்தாவது மேற்சொன்னவரல்லாத வேறெவருக்காவது விற்கலாம்.

(*c*) தன்னை கார்டியனாக நேமித்தவன் எழுதிவைத்த உயிலின்படி ஏற்படுத்திய காரியங்களை சொத்தை விற்காமல் நடத்தமுடியாதிருந்தால், அக்காலத்தில் விற்கலாம்.

(*d*) உயிலெழுதியவன் பட்ட கடன்களை வேறுவிதமாய் தீர்ப்பது அசாத்தியமாயிருந்தால் அப்போது கார்டியன் சொத்தை விற்கலாம்.

(*e*) நிலத்தில் வரப்பட்ட வரும்படி அதன் சாகுபடிக்கும் தீர் வைக்கும் கட்டாததாயிருந்தால் அந்த நிலத்தை கார்டியன் விற்று விடலாம்.

(*f*) சொத்து சிக்கிறத்தில் அழிந்துபோகக் கூடியதாயுமிருந் தால் அந்த சொத்தை கார்டியன் விற்றுவிடலாம்.

(*g*) மைனரை சம்ரட்சிக்க வேறு ஐவேஜில்லாமல் சொத்தை விற்றுத்தான் அவனைக் காப்பாற்றவேண்டியிருந்தால், அப்போது அதை விற்றுவிடலாம்.

(*h*) மைனர் சொத்தை வேறொருவன் அபகரித்திருந்து, அதை திருப்பியடைவது முடியாதென்று நிச்சயமாய்த் தெரியவந்தால் அந்த சொத்தை கார்டியன் விற்றுவிடலாம்.

ஒரு கேசில், கார்டியன் மைனரின் சொத்து விஷயமாய் ஏற் பட்ட பட்டாபாத்திய விவாதத்தின்பேரில் அந்த சொத்தை நல்ல விலைக்கு விற்று எவ்வித வழக்குமில்லாமல் செய்தான். பிறகு அவன் விற்றதுகூடாதென்று வியாச்சியம் கொண்டுவரப்பட்டது. அதில் கல்கத்தா ஹைகோர்ட்டார் விற்பனைப் பத்திரத்தில் கண்ட சங்கதி தப்பிதமாயிருந்த போதிலும் அந்த விற்பனையால் மைனர் நன்மை யடைந்திருக்கிறானென்று விற்பனையை ஊர்ஜிதம் செய் தார்கள். (இ. லா. 16. கல். பக்கம் 627.)

(3) மைனர்களை சம்ரட்சிப்பது.

210. மைனரான தன் குழந்தையைக் காப்பாற்ற பிதா கட மைப்பட்டவன். பிதா ஏழையாயிருந்தால் அந்தக்குழந்தையின் தாய் அல்லது பாட்டன் சொத்துள்ளவராயிருந்தால் அவர்கள் காப் பாற்றவேண்டும். பிதாவுக்குப் பிறகு சொத்து அகப்பட்டாலும் அவன் அந்தக் குழந்தையைப் போஷிக்க அர்ஹனாகமாட்டான். வயதுவந்த ஆண்பிள்ளை நோயுள்ளவனுயும், பலமற்றவனுயு மிருந் தாலொழிய, அவனைக் காப்பாற்ற தகப்பன் கடமைப்பட்டவனல்ல. வயதுவராத ஆண்பிள்ளைகளைக்கூட தகுந்த பலமுள்ளவர்களாயிருந் தால் அவர்களுடைய அந்தஸ்துக்கும் பலத்துக்கும் தகுந்த வேலை யைச்செய்து சம்பாதிக்க அவர்களைத்தகப்பன் அமர்த்தலாம். பெண் களை விவாகஞ்செய்து கொடுக்கிறவரையில் தகப்பன் அன்னவஸ்தி ரம் கொடுத்துக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறான்.

III.—சொத்துக்கள்.

a. தானங்கள். (Gifts.)

1. பொதுவிஷயங்கள்.

211. சொத்துக்களை வினியோகஞ் செய்வது இரண்டுவிதங்கள். அவைகளாவன:—

(1) வினியோகஞ் செய்யப்பட்ட சொத்து தானங்கொடுத்தவனிருக்கும்போதே கைமாறுவது.

(2) உயில் மூலமாய் ஒருவன் தான் இறந்தபிறகு இன்ன சொத்தை இன்னார் அடையவேண்டுமென்று எழுதிவைப்பது.

மார்ஸ்-உல்-மௌத் (Marz-ul-Mout) தீராதவியாதியினால் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும்போது எழுதிக்கொடுக்கிற தானமும் இதிலடங்கும்.

தானங் கொடுத்தவனிருக்கும்போதே சொத்து டிரான்ஸ்பராகக் கூடியதாயிருக்கிற வினியோகம் இரண்டுவிதங்கள். அவைகளாவன :—ஹிபா (Hiba), வாக்வ் (Wakf).

(2) ஹிபா. (Hiba).

212. ஹிபா என்பதற்கு தானமென்று பெயர்; அது மூன்று விதங்கள். அவைகளாவன :—

(*a*) ஹிபா (சாதாரணமானதானம்)

(*b*) ஹிபா-பில்-எவாஸ் (Hiba-bil-ewaz) என்பது, ஏதாவதொரு முகாந்தரத்தை உத்தேசித்து தானங் கொடுப்பது. இது சாதாரணமாய் பரிவர்த்தனைக்குச் சமானமாகும்.

(*c*) ஹிபா-பா-ஷார்ட்-உல்-எவாஸ் (Hiba-ba-shart-ul-ewaz) என்பது, தானம் செய்தவனுக்கு தானம் பெற்றவன் இன்னின்ன காலத்தில் இன்னின்னது கொடுத்துவரவேண்டுமென்றுவது, பிற்காலத்தில் இன்னபொருளைக் கொடுக்கவேண்டு மென்றுவது முதலிலேயே உடன்படிக்கைசெய்துகொண்டு தானஞ்செய்வது.

சாதாரணமான ஹிபா (தானம்) என்பது தானம் செய்கிறவன் எவ்விதப் பிரதிப்பிரயோசனத்தையும் எதிர்பாராமல் சுவேச்சை

யாய் யாதொருபொருள் அல்லது சொத்தை வேருெருவனுக்கு தானமாகக்கொடுத்து அதை அவனிடம் ஒப்புவிப்பது. அந்தப் பொருள் தானம்செய்தவன் சுவாதீனத்திலிருந்தாலும் விவாதத்திலிருந்தாலும் பாதகமில்லை.

213. ஒருவன்செய்த தானம் வாயினுலாவது, எழுத்துமூலமாயாவதிருக்கலாம். வாயினல்கொடுத்த தானம், அதைச்சேர்ந்த மற்றகாரியங்களெல்லாம் சரிவர நடந்திருக்கிறதென்று ருசுக்கொடுத்ததின்பேரில் பிரிவிகவுன்ஸிலார் செல்லுமென்று தீர்ப்புச்செய்திருக்கிருர்கள். (இ. லா. 3. அல. பக்க. 206). டிரான்ஸ்பர் ஆவ் பிராபர்டி ஆக்டில் மகமதிய சட்டப்படி வாயினல்செய்த தான விஷயமாய் யாதொன்றும் சொல்லவில்லை.

214. ஒருவன் மற்றவுடன்படிக்கைகளைச் செய்வதற்கு என்னென்ன அம்சங்கள் அவனிடத்தில் பொருந்தியிருக்கவேண்டுமோ அவைகள் தானஞ்செய்யும்போதும் அவனிடத்திலிருக்கவேண்டும். அப்போதுதான் அந்த தானம் சுவேச்சையாய்ச்செய்ததாகச் செல்லும். அந்த அம்சங்களாவன:—(1) தானஞ்செய்பவன் மேஜராயிருக்கவேண்டும்; (2) சுயபுத்தியோடும், (3) சுவாதீனத்தோடும், (4) தானங்கொடுக்கிற சொத்துக்கு பாத்தியஸ்தனுயுமிருக்கவேண்டும்.

ஒருவன் செய்த தானம் செல்லவேண்டுமானுல், அவன் தான் செய்த தானம் இப்பேர்ப்பட்டதென்றும் அதன் பிரயோசன மின்னதென்றுந் தெரிந்துகொள்ளப்போதுமானசக்தியுள்ளவனுயும், நியாயமற்ற தூண்டுதலின்மேல் செய்யாததாயும், கைதியாக சிறைச்சாலையிலிருக்கும்போதாவது அல்லது அனியாயமாய் தடங்கல்செய்து வைக்கப்பட்டிருக்கும்போதாவது, தானங் கொடுத்த சொத்துக்கு பாத்தியஸ்தனுக வில்லாதிருக்கும்போதாவது செய்யாததாயுமிருக்கவேண்டும்.

215. ஒருவன்செய்த தானத்தை ஆண் பெண் என்கிற வித்தியாசமில்லாமலும், வயது, மதம் முதலியவை பாராமலும் யார் வேண்டுமென்ருலும் தானத்தைப்பெறலாம். ஆனுல் தானம் வாங்குகிறவர்கள் தானம்செய்தகாலத்தில் உயிருடனிருக்கவேண்டும். தானஞ்செய்த ஆறுமாதத்திற்குள் பிறக்கக்கூடிய பிள்ளையை உத்தேசித்து தானஞ்செய்தால் செல்லும்; ஏனென்ருல் அந்த சிசு தாய்

வயற்றில் உயிருடனிருப்பதாக எண்ணப்படுகிறது. அதற்கு மேற்பட்ட காலத்தில் பிறக்கக்கூடிய சிசுவை உத்தேசித்து தானம்செய்யக் கூடாது.

ஒருவன் தான் வழக்கமாய்ச் செய்கிற வேலையைச் செய்யக் கூடாமலாவது நின்றுகொண்டு தொழ அசக்தனாகவாவது போகும்படியாய் வியாதியாயிருந்து ஒரு வருஷத்திலிறந்துபோகிறான். அப்படி வியாதியாயிருந்தகாலத்தில் தன் சொத்தில் மூன்றிலொரு பாகத்தை தன்வார்சில்லாத வேறொருவனுக்குத் தானஞ்செய்தால் அதற்கு அவன் வார்சுகள் ஒத்துக்கொண்டால்தான் செல்லும். ஆனால் அந்ததானம் தன் வார்சுகளிலொருவருக்குச் செய்திருந்தால் மற்ற வார்சுகள் அதற்குட்படவேண்டும்.

(3) மௌஹூப் (Mouhoob) தானசோத்து.

216. ஒருவன் எந்த சொத்தின்பேரில் நேராய் அதிகாரஞ் செலுத்திவருகிறானோ, அல்லது எந்த சொத்தை தன்னுடைய அதிகாரத்துக்குக் கொண்டுவரலாமோ, அல்லது உண்மையாய் எது அவன் வசத்திலிருக்கிறதோ அல்லது கட்டாயப்படுத்தி வசப்படுத்தலாமோ அல்லது மால் (Mal) என்கிற வார்த்தையில் எவைகளடங்குமோ அந்த சொத்துக்களை யெல்லாம் தானம் செய்யலாம். விவாதத்திலிருக்கிற சொத்தையும், சொத்தல்லாத மற்றபாத்தியதைகளையும் தானஞ்செய்தாலும் செல்லும்.

217. வாடகை அல்லது குத்தகைக்கு விட்டிருக்கிற சொத்தைத் தானஞ்செய்தால் அந்த சொத்தின்வர்டகை அல்லது குத்தகையை வசூல்செய்ய பாத்தியமிருப்பதால் அந்த தானமும் செல்லும். ஒரு சொத்திலுள்ள மாலிகானா வரும்படியைப் பெறுவதற்காக அதை தானம்செய்யால் அது செல்லும்.

218. ஒருவன் பிரிக்கக்கூடாத ஒரு சொத்தின் ஒரு பாகத்தைப் பிரிக்காமல் தானஞ்செய்தாலும் செல்லும். ஸூனிகள் சட்டப்படி சொத்து பிரிக்கக்கூடியதாயிருந்தும் பிரிவினையாகா திருந்தால் அந்த சொத்தை தானஞ்செய்வது செல்லாதென்கிறார்கள். ஆனால் அந்த சொத்தின்பாத்தியம் தானஞ்செய்தவனால் கொடுக்கப்பட்டும் தானம் வாங்கியவனால் கிரகிக்கப்பட்டு அவன் அனுபோகத்திலுமிருந்தால் அந்த தானம் செல்லும்.

ஒருகேசில் பிரிவிகவுன்ஸில் ஜட்ஜிகள், மகமதிய சட்டப்படி முஷாவை (பிரிக்கப்படாதசொத்து) தானஞ்செய்து அது தானம் வாங்கினவனுடைய அனுபோகத்துக்கு வந்துவிட்டால் அந்த சொத்து கைமாறினதாகிறதென்றும், முஷாவை தானம் செய்வதில் செல்லாதென்று சொல்லுகிற கோட்பாடு தகுதியற்றதாயிருக்கிறதென்றும் அபிப்பிராயப் பட்டிருக்கிறார்கள். (லா. ரி. 1. இ. அப்பீல். பக்கம். 205)

219. பிரிக்கப்படாமலிருக்கிற பொது சொத்துக்கு முஷா (Mushaa) என்று பெயர். ப்ரேடாக் (Freytag) என்பவர் பிரிக்காமல் பொதுவாயும், இரண்டல்லது பலபேர்களுக்கு பாத்தியமுள்ள சொத்துக்கு முஷா என்று சொல்லுகிறார். ஆனால் முஷா என்கிற கோட்பாட்டை ஜமீன் சொத்துக்கள் விஷயத்தில் உபயோகிக்கக்கூடாதென்று கல்கத்தா ஐகோர்ட்டாரும், பிரிவிகவுன்ஸிலும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (லா. ரி. 2. இ. அப்பீல். 87, இ. லா. 10 கல். 1012, லா. ரி. 16 இ. அ. 205)

220. பிரிக்கக்கூடிய சொத்தை பொதுவாக இரண்டுபேர்களுக்கு தானஞ்செய்து இன்னின்னருக்கு இன்னின்ன பாகமென்று குறிக்காமலிருந்தால் அந்ததானஞ் செல்லாது. தானம் வாங்கியவர்கள் தங்களனுபோகத்தில் அந்த சொத்தை எடுத்துக்கொண்டால் அப்போது செல்லும்.

யாதொருதானத்தை யொருகுழந்தைக்கும், வயதுவந்தவொரு ஆண்பிள்ளைக்கும் பொதுவாகச்செய்தால் அந்ததானம் செல்லும்.

221. ஷியாக்களுடைய சட்டப்படி பிரிக்கக்கூடிய யாதொரு சொத்தின் பிரிவினையாகாத ஒருபாகத்தை தானஞ்செய்தால் அது செல்லும். யாதொரு சொத்தைப் பிரிக்காமலே இருவருக்குப் பொதுவாக தானஞ்செய்தால் அவர்கள் பொதுவாகவே அந்த சொத்தையடைந்து இருவரும் அந்த சொத்துக்கு பாத்தியஸ்தர்களாவார்கள். அப்படிப் பொதுவாகக் கொடுக்கப்பட்ட தானத்தின் சொத்தை ஒருவன்மட்டும் ஒப்புக்கொண்டு மற்றவன் ஏற்றுக்கொள்ளாதிருந்தால் தானத்தை ஒப்புக்கொண்டவன் விஷயத்தில்மட்டும் அந்த தானம் செல்லும்.

(4) செல்லக்கூடிய தானத்தின் முக்கியமான நிபந்தனைகள்.

222. ஒருவன்செய்த தானம் செல்லுவதற்கு அடியில்கண்ட நிபந்தனைகள் முக்கியமானவைகள்.

(1) தானம் செய்கிறவன் தானஞ்செய்யப் போவதாக பகிரங்கப்படுத்தவேண்டும்.

(2). தானம் வாங்கிக் கொள்ளுகிறவன் தானத்தைக் கிரிக்க ஒப்புக்கொண்டிருப்பதாக குறிப்பினாலாவது, வெளிப்படையாகவாவது தெரிவிக்கவேண்டும்.

(3). தானஞ்செய்த சொத்தை தானம் பெற்றவன் உண்மையாகவாவது, வாய்பேச்சினாலாவது தன் சுவாதீனப்படுத்திக்கொள்ள வேண்டும்.

223. சொத்து டிரான்ஸ்பர் செய்யப்பட்டது நியாயமானதாவென்றேற்பட்டால், டிரான்ஸ்பர் செய்தவனுடைய எண்ணம் அந்த விஷயத்தில் முக்கியமானது. தானம் செய்தால் மகமதிய சட்டப்படி தான சொத்தின் சர்வ சுவதந்திரத்தையும் கொடுக்கவேண்டும். சுவேச்சையாய் சொத்தை தானம்செய்து டிரான்ஸ்பர்செய்தால் தானம் செய்தவனுடைய எண்ணத்தை முக்கியமாய் கவனிக்கவேண்டுமென்று மகமதிய சட்ட நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். தானம் வாங்குகிறவன் தானத்தை கிரகித்தாலொழிய அந்த தானம் அமுலுக்குவரமாட்டாது.

224. முற்காலத்தில் தானம் கொடுப்பதும் வாங்குவதும் சொத்தை விற்பதும் விலைக்கு வாங்குவதும், கொடுக்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட சொத்தை சாதாரணமாய் ஒருவரிடமிருந்து மற்றொருவர்சுவாதீனத்தில் விட்டுவதேயொழிய எழுத்து மூலமான ஆதாரங்களால் டிரான்ஸ்பர் செய்கிறதில்லை. வீடு நிலம் முதலியவைகளை டிரான்ஸ்பர் செய்வதானால் அந்த வீட்டின் சாவி, நிலத்தின் பட்டயம் (Title Deed) இவைகளைக் கொடுப்பதே டிரான்ஸ்பர் செய்ததாகும்.

225. தகப்பனால் தன் மைனராயிருக்கிற பிள்ளைகளுக்குச் செய்கிறதானவிஷயத்தில் ஒப்புக்கொள்ளுதல் அவசியமில்லை. அப்படி தானங்கொடுத்தசொத்து தகப்பன் வசத்திலிருந்தாலும், வே

ஒருவர் வசத்திலிருந்தாலும் ஒப்படைத்திருந்தாலும் அந்த மைனர் வசத்தி லிருப்பதாகவே எண்ணப்படும். (இ. லா. 10. கல். பக்கம். 1012).

தகப்பனில்லாத குழந்தை தாய்வசமிருந்தால், அந்த தாய் அக் குழந்தைக்குக் கிடைத்த சொத்தை தன்வசத்தில் வைத்திருந்தால் அந்த சொத்தை அக்குழந்தை அங்கீகரித்ததாகவே எண்ணப்படும்.

குழந்தையை மூன்றுவது மனிதன் வளர்த்து வந்தால் அந்தக் குழந்தைக்கு வந்தசொத்தை அவன் தன் சுவாதீனத்தில் வைத்திருப் பதே தானத்தை ஒத்துக்கொண்டதாகும். (5 செல். ரி. பக். 40)

மைனரான பெண்ணுக்குக் கிடைத்த தானத்தை, அந்த மைன ருடைய தகப்பனுவது, புருஷனுவது வைத்திருந்தால் தானத்தை ஒத்துக்கொண்டதாகும்.

புருஷன் பெண்சாதிக்காவது, பெண்சாதி புருஷனுக்காவது தானஞ்செய்தால் அவர்களுக்குள் சொத்தை டிரான்ஸ்பர் செய்ய வேண்டிய அவசியமில்லை. (1 பெ. ஹை. ரி. ப. 157)

தானசொத்து தானம் வாங்கியவன் வசத்திலேயே யிருந்தால், அதை ஒப்புவிக்கவேண்டிய அவசியமில்லை.

226. தானம்கொடுத்த சொத்து கைமாறிற்றுவென்று பார்க் கவேண்டியதாயிருந்தால், தானங்கொடுத்தவர் வாங்கினவருக்குள்ள பந்துத்துவத்தை கவனிக்கவேண்டும். உதாரணமாக:—புருஷன் தன் பெண்சாதிக்கு யாதொரு வீடு அல்லது நிலத்தைத் தானங் கொடுத்து அதன்பிறகு அந்த வீட்டிலேயே அவன் குடியிருந்து வந் தாலும், அந்த நிலத்தின் வரும்படியை வசூல்செய்து வந்தாலும் தானம் செல்லாமற் போகாது. அதுபோலவே தகப்பன் தன் சொத்தை தன் மைனரான பிள்ளைக்குக் கொடுத்துவிட்டபிறகு அந்த சொத்தை மேல்பார்வை பார்த்துவந்தால் தானம் செல்லாமற் போகாது. அவ்விதமாகவே சிற்றப்பன் தன் சகோதரன் பிள்ளை க்கு சொத்துக்களைக் கொடுத்துவிட்ட பிறகு அதை தன் சுவாதீனத் தில் வைத்துப்பார்த்து வந்தாலும் தானம் செல்லும்.

(5) நிபந்தனையின்பேரில் தானங்கள்.

227. ஹனவி களுடைய கோட்பாட்டின்படி நிபந்தனையுள்ள தானங்களுக்கும், அனேக நிபந்தனைகளோடுசேர்ந்த தானங்களுக்

கும் அதிக வித்தியாசமிருக்கின்றது. ஹனுவிகளின்சட்டப்படி தானத்தின் பூர்த்தியிலிருந்து ஏதாவது குறைத்தால் அது செல்லாது; முதலில் தானம்செய்த சொத்து முழுவதுங் கொடுக்கிறதாய் நிச்சயமான எண்ணங்கொண்டிருந்தால், பிறகு அதைக்குறைப்பதாவது, அல்லது தானசொத்திலுள்ள பாத்தியதையை மட்டுப்படுத்தவாவது கூடாது. ஆனல் அப்படிப்பட்ட நிபந்தனைகள், தானசொத்தை அற்பமாக்காதிருந்தால், செல்லும். உதாரணமாக:—

(1) A என்பவன், B என்பவனுக்கு ஒரு சொத்தை தானஞ்செய்து அந்தசொத்தை அவன் தன்னுயிருள்ளவரையில் அனுபவிக்க வேண்டுமென்று நிபந்தனை ஏற்படுத்தியிருந்தால் அது பிரயோசனப்படாது. அந்த தானசொத்து அவனிறந்தபிறகும் அவனுக்கே பாத்தியப்படும்.

(2) A என்பவன், B என்பவனுக்கு ஒரு நிலத்தை தானஞ்செய்து அந்த நிலத்தின் மாசூல் முழுவதையும் B என்பவன் A என்பவனுக்கு நிரந்தரமாய்க் கொடுக்கவேண்டு மென்று நிபந்தனை செய்திருந்தால் அது செல்லாது.

(3) A என்பவன், B என்பவனுக்கு ஒரு சொத்தைத் தானஞ்செய்து, அந்த சொத்தின் வரும்படியில் ஒருபாகத்தை A தனக்கென்று வைத்துக் கொண்டு மற்ற சுதந்தர மெல்லாவற்றையும் விட்டுவிட்டால் அது செல்லும், (11. மூர். இ. அ. பக்கம். 517)

(4) A என்பவன் B என்பவனுக்கு தானவிக்கிரய யோக்கியமான சர்வ சுதந்திரத்தோடு ஒரு சொத்தைக்கொடுத்து, அந்த சொத்தின் வரும்படியின் ஒருபாகத்தை A என்பவனுக்காவது, A என்பவனுக்கும் அவன் வார்சுகளுக்குமாவது இன்னின்ன காலத்தில் கொடுக்கவேண்டுமென்கிற நிபந்தனையேற்படுத்தியிருந்தால் அது செல்லும். B என்பவன் சொத்தை பராதீனஞ் செய்கிறதா யிருந்தாலும், டிரான்ஸ்பர் பெற்றவன் மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டுத் தான் டிரான்ஸ்பர் பெறவேண்டும்.

நிபந்தனையின் பேரில் தானங் கொடுத்தால், தானத்துக்கு லோபம் வராதவிதமாய் நிபந்தனைகளை தானகாலத்தில் நிச்சயஞ் செய்யவேண்டும்.

228. ஷியாக்களுடைய ஜாதியிலும் நிபந்தனையின் பேரில் தானங்கள் செல்லும்.

A என்பவன் தன் சொத்தை B என்பவனுக்குக் கொடுத்து அதை அவன் வாழ்நாள்முழுவதும் அனுபவிக்கவேண்டுமென்று

கொடுத்திருந்தால், ஸஊனிகள் சட்டப்படி, B என்பவன் அதை வம்சபரம்பரையாய் அனுபவிக்கலாம்; ஆனால், ஷியாக்கள் சட்டப்படி, B இறந்தபிறகு அந்தசொத்து A அல்லது அவன் வார்சுகளுக்குத் திரும்பிவந்துவிடும்.

அதுபோலவே, ஷியாக்கள்சட்டப்படி ஒருசொத்தை முதலில் A க்கு அவன் வாழ்நாள்வரையிலும், பிறகு B க்கு வம்சபரம்பரையாய் அனுபவிக்கலாமென்று நிபந்தனையின்பேரில்கொடுத்தால் செல்லும். முதலில் A என்பவன் வாழ்நாள்வரையிலும், பிறகு B என்பவனும் வாழ்நாள்வரையிலும், அதன்பிறகு C என்பவன் வம்சபரம்பரையாய் அனுபவிக்கலாமென்கிற நிபந்தனையின்பேரில் சொத்து விடப்பட்டாலும் செல்லும். அதுபோலவே A என்பவன் சாகும்வரையிலும் அதற்குப்பிறகு அவன்பிள்ளைகள் வம்சபரம்பரையாய் அனுபவிக்கலாமென்று சொத்தைக்கொடுத்தாலும் செல்லும். ஷியாக்கள்சட்டப்படி ஒருசொத்தை ஒருவர்பின்னொருவராகப்பலர் ஆயுள்பரியந்தம் அனுபவிக்கலாமென்று தானஞ்செய்தாலும் செல்லும்.

(6) தானத்தை திருப்பியடைவது.

229. ஹனவிகளுடைய சட்டப்படி கொடுத்ததானத்தைத் திருப்பி எடுத்துக்கொள்ளலாம்; ஆனால் அடியில்கண்ட விஷயங்களில் அப்படி திருப்பி எடுத்துக்கொள்ளமுடியாது. அவைகளாவன:-

(1) தானங்கொடுத்த சொத்து தானம்வாங்கினவனுடைய ஸ்வாதீனத்திலிருந்து தானம், விற்பனை, ஒத்திமுதலியவைகளேதினாலாவது பராதீனமாயிருந்தாலும்,

(2) தானம்வாங்கியவனிறந்துபோயிருந்து, அந்த தானசொத்து அவனுடைய வார்சுகளுக்குச் சேர்ந்துபோயிருந்தாலும்,

(3) தானசொத்து கெட்டுப்போயிருந்தாலும்,

(4) யாதொரு கைம்மாறுகத் தானஞ்செய்திருந்தாலும்,

(5) தானங்கொடுத்த சொத்து தானம்வாங்கியவனிடத்தில் வேறுவிதமாய் மாறியிருந்தாலும்,

(6) தானங்கொடுத்தசொத்து பிரிக்கமுடியாதவிதமாய் வளர்ந்திருந்தாலும், விருத்தியடைந்திருந்தாலும், அப்படிப்பட்டவளர்ச்சி

அல்லது விருத்தி தானம்வாங்கினவனல் செய்யப்பட்டிருந்தாலும், அல்லது தானசொத்து சுவயமாகவே (மரத்தைப்போல) வளர்ந்திருந்தாலும், அல்லது (மரத்தின் காய்கனிபோல) விருத்தியடைந்திருந்தாலும், தானசொத்தில் சாயமேற்றுதல், அதை தைத்தல், அதை கூலிகொடுத்தெடுத்துக்கொண்டுபோதல் முதலியன தானத்தைத் திருப்பியடைய தடைப்படுத்தும்.

தானசொத்தை ஒருவிடமிருந்து மற்றோரிடத்திற்குக்கொண்டுபோய் அதினல் கொஞ்சம் சிலவுபிடித்தாலும் தானத்தைத் திருப்பியடைய முடியாது.

(7) தானங்கொடுத்தவரும், பெற்றவரும் பெண்சாதிபுருஷனயிருந்தால், அப்படிப்பட்டதானம் கல்யாணத்துக்குமுன் கொடுத்திருந்தால் திருப்பியடைய முடியும்; விவாகத்தின்போதாவது, விவாகத்திற்குப்பிறகாவது கொடுத்திருந்தால், அவர்களுக்குள்ள சம்பந்தம்நீங்கினலும் தானசொத்தைத் திருப்பியடையமுடியாது. அப்படிப்பட்ட புருஷன் பெண்சாதிகள் வெவ்வேறு ஜாதியைச்சேர்ந்தவர்களாயிருந்தாலும் பாதகமில்லை.

(8) தானங்கொடுத்தவர் தானம்வாங்கினவர் இவர்களுடைய மதத்தைக் கவனியாமலே, அவர்கள் சமீப இரத்தபந்துக்களாயிருந்தால் அப்படிப்பட்ட பந்துவுக்குக் கொடுத்ததானத்தைத் திருப்பியடையமுடியாது.

(9) தானசொத்து சுவேச்சையாய் வளர்ந்துவிட்டாலும், அப்படிப்பட்ட தானசொத்தைத் திருப்பியடைய முடியாது.

(10) தானங்கொடுத்தவனே இறந்துபோயிருநதால் திருப்பியடையும் பாத்தியம் அவனுடன்போய்விடும்; அவனுடையவார்சுகளுக்கு திருப்பியடையும் பாத்தியங்கிடையாது.

230. ஷியாக்கள் சட்டப்படிதானம், தகப்பனுக்காவது அல்லது மற்ற இரத்தசம்பந்தமான பந்துக்களுக்காவது, புருஷன் அல்லது பெண்சாதிக்காவது செய்திருந்து தானம் வாங்கியவர்களால் அந்த சொத்து சுவாதீனஞ் செய்யப்பட்டிருந்தால் சட்டப்படி திருப்பியடையக்கூடாதென்கிருர்கள். ஆனல் அந்ததானம் அன்னியரெவருக்காவது செய்திருந்தால், அந்த தானசொத்து அழியாமலிருக்கும்வரையில் திருப்பியடைய ப்பாத்தியமுண்டு.

(7) கைம்மாருகக் கோடுக்கும் தானங்கள்.

231. தானத்திற்காகச்செய்யும் கைம்மாற்றை (பிரதிநன்மை) தானங்கொடுக்கும் உடன்படிக்கையிலாவது சேர்க்கலாம் அல்லது தானங்கொடுத்த பிறகும் செய்யலாம். அது தான உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டால் அதற்கு ஹிபா-பில்-எவாஸ் (Hiba-Bil-ewaz) என்று பெயர்.

ஹிபா-பில்-எவாஸ் என்பது எல்லாவிதத்திலும் விற்பனைக்குச்சமானமாகும். உதாரணமாக:—ஒருவன் தனக்கு வேறொருவன் கொடுத்த ஏதோ ஒருபொருளுக்காக தன்னுடைய சொத்தெல்லாவற்றையும் அவனுக்குக் கொடுத்து அதை அவன் சுவாதீனத்தில் விட்டுவிட்டால், இது கைம்மாருகச்செய்யும் தானமாகாமல், விற்பனை அல்லது பரிவர்த்தனைக்குச் சமானமாகும். இந்தவிதம் செய்த சொத்தைத் திருப்பியடைய முடியாது.

ஹிபா-பா - ஷார்ட்-உல்-எவாஸ் (Hiba-ba-Shart-Ul-Ewaz) என்பதில் ஏற்படுகிற நிபந்தனைகள் சந்தேக அர்த்தத்தைக்கொடுக்கிறது. இவ்விதமாக:—"நீ எனக்கு இன்னபொருளைத் தருவதற்காக, நான் உனக்கு இதைத்தருகிறேன்" என்பதாம். இதன்படி அவர்கள் ஒருவருக்கொருவர் கொடுத்துக்கொண்டால் அது விற்பனைக்குச்சமானமாகிறது.

B. வாக்வ் (Wakfs) களைப்பற்றிய சட்டங்கள்.

(1) பொது விஷயங்கள்.

232. வாக்வ் என்பது யாதொரு அல்லது பல தெய்வகைங்கரியங்களுக்காக யாதொரு சொத்தை நிரந்தரமாய் விட்டுவிடுவதென்று அர்த்தம். யாதொருபொருளை வாக்வ்வாகக்கொடுத்தால் அதன் உரிமை எந்தத்தெய்வத்தை உத்தேசித்துக்கொடுக்கப்பட்டதோ அதைச் சேர்ந்துவிடும். அந்தச் சொத்தின்பலத்தைமட்டும் மனிதர் அனுபவிக்கலாமேயொழிய, அதை எப்பொழுதும் விற்பனை முதலிய பராதீனஞ்செய்யவாவது, வார்சுபாத்தியமாய் அடையவாவது கூடாது.

233. மகமதியசட்டப்படி, ஒருமனிதனுக்காவது, பலருக்காவது நன்மையை யுண்டுபண்ணுவதற்காக விட்டசொத்தும், ஜனங்

கள் தொழுகிறவிடமாகிற மசூதியைக் காப்பாற்றுவதற்காகவும், பாட்டைசாரிகள் தங்குவதற்காக தர்மசத்திரங்களுக்காகவும், அனாதிக் குழந்தைகளையும், பந்துக்களையும், அயலார்களையுங் காப்பாற்றுவதற்காகவும் விடப்படுகிற சொத்துக்கள் தர்மசொத்துக்களாகவே பாவிக்கப்படும்.

முதலில் வாக்வ் ஒருவர் பின்னொருவராக பலர் அடையும்படியாயும், பிறகு அனாதிகளும், அதன்பிறகு மசூதி, சத்திரம், தர்மவைத்தியசாலை இவைகளுக்குதவலாமென்றும் விடலாம்.

யாதொரு தர்மகைங்கரியத்துக்கு சொத்தை விடுவதற்கு தர்மஞ்செய்கிறவனுடைய நிச்சயமான அபிப்பிராயத்தைத் தெரிவிக்கக் கூடியவாசகங்கள் வாக்வில் ஏற்படவேண்டும் (2.மூர்.இ.அ.ப.398.)

234. தர்மகைங்கரியத்துக்கு சொத்தைவிடுகிறவன் (1) சுவதந்திரமுள்ளவனாயும், அடிமையாகவாவது, கட்டாயப்படுத்தப்பட்டவனாகவாவதிருக்கக்கூடாது, (2) ஸ்வபுத்தியோடும் (பைத்தியமில்லாதவனாயும்), (3) வயதுவந்தவனாயும், (4) வியாதியினாலவஸ்தையில்லாமல் நல்ல ஆரோக்கியமுள்ளவனாயும், (5) விடப்போகிற சொத்துக்குச் சொந்தக்காரனாயுமிருக்கவேண்டும். ஆனால் மரணாவஸ்தையாயிருக்கும்போது விடுகிற வாக்வ்கள் மரணசாசனத்தைப் போல் செல்லும்.

235. விட்ட வாக்வ் களைத்திருப்பி எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆனால் வாக்வ் விட்டவன் தன்மரணத்துக்குப் பிறகு அது உளர்ஜிதத்துக்கு வரவேண்டுமென்கிற நிபந்தனையின்பேரில் விட்டிருந்தால், அவனுடைய மரணத்திற்குள்ளாக எக்காலத்திலாவது அதைத்திருப்பி எடுத்துக்கொள்ளலாம். ஒருவன் தன் மரணத்துக்குப்பிறகு அமுலுக்கு வரவேண்டுமென்கிற நிபந்தனையின்பேரில் ஒரு சொத்தை வாக்வாகவிட்டால், அவன் மரணத்துக்குப்பிறகு அவனுடைய சந்ததிகள் அதை ஒத்துக்கொள்ளாமல் போனால் அவன் விட்டசொத்தில் மூன்றிலொன்றுதான் தர்மத்துக்குச் சேரும்.

236. தர்மகைங்கரியத்துக்கு சொத்தைவிட்டால் நிரந்தரமாய் விட்டுவிட்டதாக ஏற்படவேண்டும். விடும்போது எல்லாருக்

கும் தெரியும்படியாய் அதைச்சொல்லவேண்டும். ஆனால் யாதொரு சொத்து வாக்வ்வாக விடப்பட்டதென்றால் நிரந்தரமாக விட்டதாகவே அர்த்தங்கொள்ள வேண்டும். எந்த தர்மகைங்கரியத்தை உத்தேசித்து வாக்வ்விடப்பட்டதோ அந்த தர்மம் நசித்துப்போனால், விடப்பட்டசொத்து அனாதியான ஏழைகளுக்கு உதவும்.

237. ஒருவன் யாதொருசொத்தை வாக்வாக விடப்போகிறேனென்றுவது, விட்டேனென்றுவது சொல்வதே விட்டதாக சட்டப்படி பாவிக்கப்படும். யாதொரு தர்மகர்த்தாவிடத்தில் ஒப்புவிக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. (புல்டன்ஸ். ரி. பக். 345)

ஸ்தாவர சொத்துக்களைப் போல், ஜங்கம சொத்துக்களையும், நிலமில்லாத வீடுகளையும், ரொக்கப்பணங்களையும், கவர்ன்மெண்டு செகியூரிடிகளையும் வாக்வாகவிடலாம். பாக்யோக்கியமான சொத்தில் தனக்கு வரவேண்டிய பாசத்தை ஒருவன் வாக்வாக விடலாம்.

(2) வாக்வ்களின் பிரிவுகள்.

238. வாகிவ்கள் மூன்றுவிதங்கள். அவைகளாவன:—

(1) முதலில் தனவந்தர்களுக்காகவும், பிறகு ஏழைகளுக்காகவும் விடப்பட்டவைகள்.

(2) தனவந்தர்கள், ஏழைகள் என்கிற வித்தியாசமின்றி இருவர் உபயோகத்துக் காகவும்,

(3) ஏழைகளுக்குமட்டும் உபயோகப்படும் படியாயும், விடப்பட்டவைகளாம்.

முதல் வகுப்பு வாக்வ்களில் ஒருவர்பேருக்கு விடப்பட்ட வாக்வ்களும் அடங்கும்,

(1) வாக்வ்களை பிறக்காத குழந்தைகளை உத்தேசித்தும், விடலாம். இந்தவிதி தானத்திற்காகஏற்பட்ட சட்டத்துக்குவிரோதப்படுகிறது. A என்பவனுடைய குழந்தைகளுக்காக ஒருவன் வாக்வ் விடுகிறான்; A என்பவனுக்குக் குழந்தைகள் பிறக்கிறவரையில் அந்த வாக்வ்களின் பலன்கள் ஏழைகளுக்கு பிரயோசனப்படுத்தப்படும்.

வாக்வ் அடியில்கண்டவர்களுக்குவிடலாம். அவர்களாவன:—

(1) முஸல்மான் அல்லது ஜிம்மி அன்னியமதத்தான் (ஹார்பி-விரோதி நீங்கலாக.)

(2) ஸ்திரி புருஷர்கள்.

(3) வயது வந்தவர்கள், மைனர்கள்.

(4) தன் சொந்தபிள்ளைகள், பந்துக்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள்.

(5) அன்னியர்கள்.

(6) ஹனுவிகள் சட்டப்படி வாக்வ்வின் முதல்நன்மை பெறுகிறவன் அதை விடுகிறவன்.

ஷியாக்கள் சட்டப்படி, ஒருவன் தான்விட்ட வாக்வின் பரிபாலனத்தை தானேவைத்துக்கொண் டிருந்தால், மட்வாலி (Mutwalli) க்கு என்ன ஏற்படுத்தியிருக்கிருனே அவ்வளவுதான் அவனும்எடுத்துக் கொள்ளவேண்டும். வாக்விலிருந்து அதிகமாக வேருென்றும் எடுத்துக்கொள்ளக்கூடாது.

239. யாதொருவகுப்பு ஜனங்களுக்காகமட்டும் வாக்வ்விடப்பட்டிருந்து அந்த ஜனங்கள் நசித்துப்போய்விட்டால் அந்த வாக்வ் ஏழைகளின் உபயோகத்திற்காகச் சேர்ந்துவிடும். ஆகையால் எதை உத்தேசித்து வாக்வ்கள் விடப்பட்டதோ அது நசித்துப்போனுலும் வாக்வ்களை விலக்கமுடியாது.

மகமதிய சட்டப்படி ஒரு குடும்பத்தை யிரட்சிக்க ஏற்பாடு செய்வது தெய்வகைங்கரியமான செய்கையாகிறது; ஒருவன் தன் சொந்த குடும்பத்துக்காவது, சந்ததிகளுக்காவது வாக்வ்களை விட்டால் அது அதிக புண்ணியமானதென்றும், சட்டசம்மதமானதென்றும் சொல்லப்படுகிறது. அப்படி விடப்பட்டவர்களுடைய குடும்பம் நசித்துப்போனுல் அந்த வாக்வ்கள் ஏழைகளுக்குப் பிரயோசனப் படுத்தப்படும்.

240. ஆபு-ஹனிவா, இமாம்-மகமத் இவர்களுடைய அபிப்பிராயப்படி, ஒருவன் யாதொருகுடும்பம், வம்சம் முதலியனபோல்

நசித்துப்போகக் கூடியதுபோலுள்ள விஷயங்களுக்கு வாக்வ்களை விட்டால், கடைசியாய் நிற்கக்கூடிய அழிவில்லாத விஷயத்தைச் செவ்வையாய்ச் சொல்லவேண்டும்.

இமாம் ஆபுயூஸுஃவ் என்பவருடைய அபிப்பிராயப்படி வாக்வ் என்றுசொல்லி தர்மத்துக்கு சொத்தைவிட்டால், கடைசியில் நிலைத்திருக்கிறவஸ்துவைக் குறிக்கவேண்டியதில்லையென்று ஏற்படுகிறது. ஏனென்றால், சட்டப்படி, வாக்வ் எதற்கு விடப்பட்டதோ அது நசித்துப்போனால் அப்படிப்பட்ட வாக்வ் ஏழைகளுக்குச் சேர்ந்துவிடுமென்று ஏற்பட்டிருக்கிறது. ஹனவிகளுக்குள் எல்லாரும் ஆபுயூஸுஃவ் என்பவருடைய அபிப்பிராயத்தை அனுஷ்டிக்கிறார்கள். இதற்கு விரோதமான இமாம் மகமதுவினுடைய அபிப்பிராயத்தையொத்து பெம்பாய் ஹைகோர்ட்டார் தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். (இ. ல. 13. பெம்ப. ப. 264.)

கல்கத்தா ஹைகோர்ட்டார், பழையகாலத்துகேசுகளில் ஆபுயூஸுஃவ் என்பவருடைய அபிப்பிராயத்தை ஒத்திருந்தாலும், தற்காலம் இன்னும் சில விரிவான அபிப்பிராயத்தைக்கொண்டிருக்கிறார்கள்.

பிரிவிகவுன்ஸில் ஜட்ஜிகள் ஒருகேசில், மகமதியசட்டப்படி ஒரு குடும்பத்தின் ஸ்திரமான ஆஸ்தியை வாக்வ்வாகவிட்டால் அது சட்டப்பிசகென்றும், ஏனென்றால் கடைசியில் ஏழைகளுக்குச் சேருகிறதென்பது பொய்யானசங்கதியென்றும் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். (லா. ரி. 22. இ. அப். ப. 76.)

இதினால் ஒருவன் தன்னுடைய சொந்தசந்ததிகளுக்கு வாக்வ் விடக்கூடாதென்று ஏற்படுகிறது. அந்த அபிப்பிராயம் மகமதிய சட்டத்துக்கும் அனுஷ்டானத்துக்கும் விரோதப்படுகிறது. (இ.லா. ரி. 19. கல். ப. 412), (இ. லா. 20. கல். ப. 116.)

பிரிவி கவுன்ஸில்ஜட்ஜிகள் அபிப்பிராயப்படியேயிருந்தபோதிலும், அந்த வாக்வ்களின் வரும்படியில் அதிகபாகத்தை மகமதியர்களின் சட்டம், வழக்கம், கோட்பாடு இவைகளையனுசரித்து தெய்வீகமாயும், புண்ணியமாயுமுள்ள சத்காரியங்களுக்கும், சடங்குகள் செய்வதற்கும், புண்ணியதினங்களில் பிச்சைகொடுப்பதிலும் செலவுசெய்தால் அந்தவாக்வ்கள் செல்லும். (இ.லா.19.அலகா.ப.211.)

241. வாக்வ்விட்டவனே அந்த சொத்தின்வரும்படியின் பெரும்பாகத்தை தன்னுடைய குடும்பத்தைச்சேர்ந்தவர்களையும், பந்துக்கள், ஊழியக்காரர் இவர்களையும் மகமதியவழக்கப்படி காப்பாற்றுவதற்காகச் செலவுசெய்தாலும் அந்தவாக்வ் செல்லும்.

ஒருகேசில் வாக்வ்விட்டவுடனே அர்ப்பணம்பண்ணினசொத்தில் மூன்றில் ஒருபாகத்தை தன்குடும்பத்தார், பந்துக்கள், வேலைக்காரர் இவர்களைக் காப்பாற்றுவதற்காகவும், மறுபடி மூன்றிலொரு பாகத்தை சொத்தை பத்திரஞ்செய்து காப்பதற்கும், பாக்கி மூன்றிலொருபாகத்தை, மேல்விசாரணைக்காரனுக்கும் செலவுசெய்திருக்கிறதை கல்கத்தா ஹைகோர்ட்டார் ஒத்துக்கொண்டு தீர்ப்புச்செய்திருக்கிறார்கள். (இ. லா. ரி. 19. கல். 512.)

242. இரண்டாவதுவகுப்பு வாக்வ்கள் தனவந்தர்கள், ஏழைகள் எல்லாருக்கும் சமமாய் உபயோகப்படக்கூடிய தர்மங்கள். அவைகளாவன :—மசூதிகள், பாட்டைசாரிகள் தங்கி தர்மசத்திரங்கள், கிணறுகள் முதலியவைகள்.

243. மூன்றுவதுவகுப்பு வாக்வ்கள் ஏழைகளுக்குமட்டும் உபயோகப்படப்பட்டவைகள். அவைகளாவன :—ஏழைகளுக்குக் கஞ்சிவார்க்குமிடங்கள், லங்கர்கானு (Langarkhanas) முதலியவைகள்.

ஒருவன் தன்கட்டிடம் அல்லது வேறிடத்தைத் தொழுமிடமாக (மாஸ்ஜீது) விடப்போகிறதாகச்சொன்னாலும் அல்லது அந்தவிடத்தில் தொழுதாலும் அந்தக்கட்டிடம் அல்லது இடத்தின்பாத்தியம் அந்தமனிதனுக்குப் போய்விடும். ஒருமனிதன் அந்தவிடத்தில் தொழுதாலும் போதுமானது. யாதொருநிலத்தின் சொந்தக்காரனுடைய வாய்மூலமான அல்லது வேறுவிதமான அனுமதியன்னியில் அவனுடையநிலத்தில் மசூதியைக் கட்டக்கூடாது.

அதுபோலவே ஒருபிணத்தை யொருவிடத்தில்புதைத்தால் அந்தவிடம் மயானமாகப் பாவிக்கப்பட்டு, அந்தநிலத்தின்பாத்தியம் அதன் சொந்தக்காரனைவிட்டு விலகிப்போய்விடும். சொந்தக்காரனே விட உத்தேசித்திருந்தால் நல்லதுதான். யாதொருநிலத்தை சொந்தக்காரன் வெளிப்படையாய் சவக்காட்டுக்காக விடாமலிருந்தபோ

திலும் அந்தவிடம் கல்லறைகளால் நிறைந்திருந்தால் அது மயான மாக அர்ப்பணஞ்செய்யப்பட்டதாகவே எண்ணப்படும். அதை சொந்தக்காரன் தானவிக்கிரயமுதலிய பராதீனஞ் செய்யவுங்கூடாது; வார்சு பாத்தியமாக அவன்சந்ததிகள் அதை அடையமுடியாது.

244. தர்காஸ் (Darghas) என்பது மகாத்மாக்களுடைய கல்லறைகளிருக்குமிடங்கள். அவைகள் புண்ணியபூமியாகவே பாவிக்கப்படும். தர்காஸ் (Darghas), காங்கா (Khankah) அல்லது இமாம்பரா (Imambarah) இவைகளுக்காகவிட்ட வாக்வ்கள் செல்லும். காங்கா (Khankah) என்பது, வேதங்கள் அல்லது ஆத்மார்த்தமான கிரந்தங்கள் படிப்பதற்காக மகமதியபக்தர்கள் வசிக்கிற அல்லது கூடுகிற பொதுமடம்.

மகமதிய சட்டப்படி ஒருவன்விட்ட வாக்வ் ஒருபொழுதும் பிரயோசன மில்லாமற்போகாது. எதைஉத்தேசித்து வாக்வ்விடப்பட்டதோ அது நசித்துப்போனால் அதற்குச்சமீபத்திலுள்ள அதே மாதிரியான வேறொருதர்மத்துக்கு அந்த வாக்வ் செல்லும். உதாரணமாக:—ஒரு மசூதிக்காக முதலில் ஒரு வாக்வ் விடப்படுகிறது. அந்த மசூதி ஜீர்ணமாகி இருந்தவிடந் தெரியாமல் போய்விட்டால் அதற்குச்சமீபத்திலுள்ள வேறொருமசூதிக்கு அப்படிப்பட்டவாக்வ் சேர்ந்துவிடும். அதுபோலவே சத்திரம், வழிப்போக்கர்கள் தங்குமிடம், கிணர் இவைகளுக்காக விட்டவாக்வ்கள், இவைகள் அழிந்துபோன பிறகு இதைப்போன்ற வேறுசத்திரம் முதலியவைகளுக்கும், யாதொரு மனிதனுக்காவது, அல்லது தன் சந்ததிக்காவது ஏற்படுத்திய வாக்வ்கள் அந்த மனிதன் அல்லது சந்ததிகள் வம்சக்ஷயமாய்ப்போனால், அந்த வாக்வ் ஏழைகளுக்குச் சேர்ந்துவிடும்.

(3) மட்வாலி (The mutwalli.)

245. வாக்வை விடுகிறவன் அதன் தோலத்தை (Towliat- தர்மபரிபாலனத்தை) தானே நடத்தலாம். வாக்வ்விட்ட ஒருவன் அதை பரிபாலனஞ்செய்யயாதொரு மட்வாலியை (தர்மகர்த்தாவை) நேமிக்காதிருந்தாலும், சுவயமாகவே அதன் தௌலத்தை தான் வைத்துக்கொண்டிருப்பதாக வெளிப்படையாய்த் தெரிவிக்காம

யிருந்தாலும், அதன் பரிபாலனம் அவனையேசேரும். அவன் ஜீவ காலத்தில் எப்போதாவது யாதொரு தர்மகர்த்தாவை அதற்கு நேமிக்க அவனுக் கதிகாரமுண்டு.

யாதொரு தர்மகர்த்தாவை நேமகஞ்செய்வதற்குள் வாக்வ்விட்டவன் இறந்துபோனால், அவனால் நேமிக்கப்பட்ட காரிய நிர்வாகிகள் அதற்கொரு மட்வாலியை நேமிக்க அதிகாரமுண்டு. இறந்தவனால் நேமிக்கப்பட்ட காரிய நிர்வாகியுமில்லா விட்டால் காஜி ஒரு மட்வாலியை நேமிக்கலாம்.

ஒரு மசூதியிலுள்ள பக்தர்கள் அல்லது கூட்டத்தார்கூட ஒரு மட்வாலியை சட்டப்படி நேமிக்கலாம். நிச்சயமாய் கணக்கிடக்கூடிய சிலஜனங்களுக்காகமட்டும் விட்டவாக்வ் விஷயத்தில், அதன் பலனை யனுபவிக்கிறவர்கள் அதற்கொரு தர்மகர்த்தாவை நேமிக்கலாம்.

246. மட்வாலி (தர்மகர்த்தா) வாக நேமிக்கப் படுகிறவன் மேஜராகவும் சுவபுத்தியோடு பகுத்தறியுஞ் சக்தியுள்ளவனுயுமிருக்க வேண்டும். இஸ்லாம்மதத்தைச் சேர்ந்தவனுயும், சுவதந்திரமுள்ளவனுயிருக்கவேண்டிய அவசியமில்லை.

ஸ்திரிகளையும் தர்மகர்த்தாக்களாக நேமிக்கலாம். ஆனால் புருஷன் செய்யக்கூடிய வைதிகசடங்குகளைச் செய்யவேண்டிய வேலையாயிருந்தால் அதற்கு ஸ்திரீகளை நேமிக்கக்கூடாது. உதாரணமாக:—ஒரு தர்கா அல்லது காங்காவின் தர்மகர்த்தாவுக்கு ஸஜ்ஜாதா நாஷின் (Sajjada nashin) என்று பெயர். அவன் ஆத்மார்த்தமான விஷயங்களை உபதேசிப்பதுடன் மடத்தின் தர்மகர்த்தாவாகவுமிருக்கவேண்டும். இந்த தர்மத்தின் பரிபாலனத்திற்கு ஸ்திரீகளை நேமிக்கக்கூடாது. ஆனால் ஸ்திரிகளை மட்வாலியாக நேமிக்கலாம்.

247. வாக்வ்விட்டவன், தான்நேமிக்கிற மட்வாலியைவேண்டும்போது நீக்கலாமென்கிற அதிகாரத்தை தர்மத்துக்காக சொத்தை விடும்போதே தனக்குவைத்துக்கொண் டிருந்தாலொழிய, தன்னிஷ்டப்படி நினைத்தபோது மட்வாலியை நீக்கக்கூடாது.

யாதொரு தர்மகர்த்தா தர்மசொத்தை யபகரித்தால், அவனை காஜிநீக்கிவிடலாம். அப்படிநீக்கும்அதிகாரம் காஜிக்கில்லையென்று முதலிலேயே ஏற்பாடு செய்திருந்தாலும் பாதகமில்லை.

248. மேன்பார்வைக் காரணகவாவது, அல்லது யாதொரு பிரதிபலனில்லாமலாவது மட்வாலியாக நேமிக்கப்பட்டவர்கள் தவிற, மற்றவர்கள் தங்கள் மட்வாலி அதிகாரத்தை நடத்தச் சக்தியுள்ளவர்களாயும், நோயற்றவர்களாயு மிருக்கும்போது அதைவேறொருவன் பேருக்கு ஒப்படைக்கவாவது மாற்றவாவது, வேறொருவனை நேமிக்கவாவது கூடாது.

யாதொரு மட்வாலி விருத்தாப்பியத்தினல் தன் வேலையைப் பார்க்கச் சக்தியற்றவன யிருந்தாலும், அல்லது மரணவஸ்தையாயிருந்தாலும் அப்போது தன் வேலைக்கு ஒரு மட்வாலியை நேமிக்கலாம்.

249. தர்மத்துக்கு சொத்து விட்டவனே இன்னவம்சத்திலுள்ள ஆண்வார்சுகள் தான் அதற்குமட்வாலியாக வேண்டுமென்று ஏற்படுத்திப்போயிருந்தால் அந்த வம்சஸ்தர்கள்தான் அதற்கு மட்வாலியாக வருவார்கள். அதை ஒருவரும் மாற்ற முடியாது. உதாரணம்:—

A என்பவன் தான்கொடுத்த தர்மசொத்துக்குமுதலில் B என்பவனும், பிறகு C என்பவனும் மட்வாலியாக வேண்டுமென்று சொல்லிப்போ யிருந்தால், B என்பவன் தனக்குப்பிறகு D என்பவனை மட்வாலியாக நேமிக்கமுடியாது. இது விஷயத்தில் காஜி வாக்வ்கொடுத்தவனுடைய அபிப்பிராயத்துக்கு விரோதமாய் வார்சுபாத்தியதையை மாற்றக்கூடாது.

மட்வாலி வேலையைப்பார்க்க யோக்கியமுள்ளவராக வாக்வ் விட்டவனுடைய பந்துக்களிருக்கும்போது, அதை அன்னியர்களுக்குக் கொடுக்கக்கூடாது.

சொத்துவிட்டவனல ஏதாவது கட்டளை கொடுக்கப்பட்டிருந்தாலொழிய, எந்த மட்வாலியும். வாக்வ் சொத்தின்பேரில் கடன் வாங்கக்கூடாது. பிரத்தியேகமாய் தர்மஞ்செய்தவன் அதிகாரங் கொடுத்திருந்தாலொழிய மட்வாலிகள் வாக்வ்களின்பேரில் எவ்விதச்செலவையும் போடக்கூடாது.

250. ஒருவன்தன் அவ்லாத் (Awlad) குழந்தைகளுக்கு வாக்வ்விட்டிருந்தால் அவனுடைய ஆண்பிள்ளை பெண்பிள்ளை இவர்களும் சமமாக அதன்பலனை யனுபவிக்கலாம்.

ஒருவன் தன் சந்ததிகளுக்கு மொத்தமாக இன்னார் இன்னார் இவ்வளவெடுத்துக் கொள்ளுகிறதென்று குறிக்காமல் வாக்வ்விட்டால் அவர்களெல்லோரும் வித்தியாசமின்றி சமமாகவே பிரித்துக் கொள்ளவேண்டும்.

மகமதிய சட்டப்படி, முன்னடியே நியாயாதிபதியினுடைய அனுமதியைப் பெருமல் வாக்வின்சொத்தை கொஞ்சகாலத்திற்காவது சாசுவதமாகவாவது விற்பனை, ஒத்திமுதலிய பராதீனஞ்செய்வது செல்லாது. அந்தப்பராதீனம் தர்மசொத்தின் நன்மையையுத்தேசித்துச்செய்ததா யிருந்தாலும் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

(4) தாவாசெய்ய சுதந்தரம்.

251. யாதொரு வாக்வ் (தர்மசொத்து) சர்வஜனப்பிரயோசனமுள்ளதாயிருந்தால், சகஜமாக ஒவ்வொரு மகமதியனும் அதை ஸ்தாபிக்க தாவாகொண்டுவரலாம்.

யாதொரு தர்மசொத்துக்கு அனேக மட்வாலிகளிருந்தால் அவர்களெல்லாரும் வாதியாக தாவாசெய்யவேண்டும். வாதியாகச் சேர மறுக்கிற மட்வாலியை எதிரியாகச் சேர்க்கவேண்டும்.

யாதொரு உடன் தர்மகர்த்தா, தர்மசொத்து அபகரிக்கப்பட்டாவது, நாசஞ்செய்யப்பட்டாவதிருந்தால், காஜியினனுமதி யில்லாமல் அவைகளைத் திருப்பியடைய தாவாகொண்டுவர முடியாது. ஆனல் அந்த சொத்தின் தௌலத் அவன் வசமிருந்தால் தாவாசெய்யலாம். ஆனல் அவன், மட்வாலிசொத்தை யபகரித்திருந்தாலும், தனக்கு தர்மசொத்தின் வரும்படியில் கிடைக்கவேண்டிய பாகத்தை ஸ்தாபிக்கிற தற்காகவும் அவன்பேரில் தர்வாசெய்யலாம்.

252. மட்வாலியின் உத்தியோகம் யாதொரு காரியதரிசி (Executor) யினுடைய அலுவலுக்குச் சமானமானது. ஒன்று அல்லது இரண்டு மட்வாலிகள் ஒருகாரியத்தை எக்சிக்யூட்டர்களைப் போலவே ஏகோபித்துச் செய்யவேண்டும். ஆனல் வாகிவ்விட்டவன் தானே தர்மகர்த்தாவாகவிருந்து தனக்கு ஒத்தாசையாகவே ஒருவனை நியமித்தால் அவன் அவனுடைய ஒத்துமையில்லாமல் எதையும் சுவேச்சையாய்ச் செய்யலாம்.

13

(5) தர்மஞ்செய்தவனுடைய கட்டளைகள்.

253. வாக்வ் விட்டவன் நியாயமான எவைகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறனோ அவைகளை சட்டத்திலுள்ளவைகளைப்போலப்பாவித்துச் செய்யவேண்டும். ஆனல் சிலவிஷயங்களில் காஜி அவனுடைய கட்டளையை மாற்றுவதற்கும், வேருகச் செய்வதற்கும் அதிகாரமுள்ளவரா யிருக்கிறர். உதாரணம்:—தர்மத்துக்குச் சொத்துவிட்டவன், இன்னருக்கு இன்னவிதமாய் உபயோகப்பட வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு சொத்தை விட்டால், அது நசித்துப்போகிறவனாயில் அந்த தர்மத்துக்கு உபயோகப்பட்டுப் பிறகு ஏழைகளுக்குச் சேர்ந்துவிடுகிறது. யாதொரு மட்வாலிசொத்தை யபகரித்தாலும் அவனை நீக்கக்கூடாதென்று தர்மஞ்செய்தவன் அபிப்பிராயப் பட்டாலும், காஜி அவனை நீக்கிவிடலாம்; சாமானகப்பிச்சைகொடுக்க வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டால் அதைமாற்றி பணமாக காஜிகொடுக்கலாம்.

தர்மஞ்செய்தவனுடைய அபிப்பிராயப்படி நடப்பதுகூடாமையாயிருந்தால், தர்மசொத்தின் நன்மையை உத்தேசித்து அவன் அபிப்பிராயத்தை காஜிமாற்றலாம். வாக்வ்விட்டவன் தான்கொடுத்தசொத்தை ஒருவருஷத்திற் கதிகமாக குத்தகைக்கு விடக்கூடாதென்று சொல்லியிருந்தாலும், அதன்படி விடுவது கஷ்டமாயிருந்தால், ஒருவருஷத்திற் கதிகமான காலத்திற்குக் குத்தகைக்கு விடலாமென்று மட்வாலிக்கு காஜி அதிகாரங்கொடுக்கலாம்.

(c) உயில்கள்.

(1) பொதுவிஷயங்கள்.

254. வாசியத் (Wasiat) என்பது, ஒருவனிறந்த பிறகு அவன் சொத்து அல்லது சொத்தின் வரும்படி இன்னரைச் சேர வேண்டுமென்று அவனுயிரோடிருக்கும்போது எழுதிவைப்பது.

மரணசாதன மெழுதிவைக்கிறவனுடைய அபிப்பிராயத்தைப் போதுமானபடி தெரிவிக்கக்கூடிய வார்த்தைகளை அவன் உபயோகிப்பதிலிருந்து வாசியத்தை ஸ்திரப்படுத்தலாம். மரணசாஸன மெழுதிவைக்கிறவனுடைய எண்ணம் தானிறந்தபிறகு அமுலுக்கு வரவேண்டுமென்று சொத்தை யெழுதிவைத்தால், அது வாசியத்

துக்குச் சமானமாகும். உயிலில்கண்ட சொத்தை ஒருவனுக்கு பாத்தியப்படுத்தியாவது அல்லது அதற்கு தர்மகர்த்தாவாக நேமித்தாவது உயில் எழுதலாம்.

255. ஊமைகளும், பேசுவதற்குச் சக்தியற்று மரணவஸ்தையிலிருக்கிறவர்களும் ஜாடைகளினால் உயில் ஏற்படுத்தலாம். அது உயிலைப்போன்ற தன்மையுள்ளதா, வாயினால்சொன்னதைப் போன்ற தன்மையுள்ளதா, உடனே அமுலுக்கு வரவேண்டியதா அல்லது வாசியத்தைப்போல உயிலெழுதிவைத்தவனிறந்தபிறகு அமுலுக்கு வரவேண்டியதா என்று நிச்சயஞ்செய்வது மரணசாதன மெழுதிவைத்தவனுடைய எண்ணத்தைப் பொருத்ததாயிருக்கிறது.

சொற்ப காரியங்களுக் காகவும், ராஜீகந் தெய்வீகமான காரியங்களுக்காகவும் மரணசாதன மெழுதிவைக்கலாம். ராஜீகந் தெய்வீகம் நேர்ந்தால், அமுலுக்கு வரவேண்டுமென்று உயில் எழுதிவைத்தால், அவைகள் நேராமற்போனால் அந்த உயில் அமுலுக்கு வராது.

(2) மரணசாதன மெழுதிவைக்கிறவனுடைய ஹோதா.

256. உயில் எழுதிவைக்கிறவர்கள் சுவதந்திர முள்ளவர்களாயும், நிச்சயமான தெளிந்த புத்தியுள்ளவர்களாயு மிருக்கவேண்டுமென்பது முக்கியமான நிபந்தனைகள்.

மரணவியாதி யென்பது, ஒருவன் ஒருவித வியாதியாயிருந்து அதனால் உடனே அவன் மரணத்துக்கு அது ஏதுவாயிருப்பது தான். ஒருவன் வெகுகாலம் வியாதியாயிருந்தால் அந்தவியாதி மரணவியாதியாக மாட்டாது. வியாதி கண்டதுமுதல் வெகுசீக்கிறத்தில் மரண முண்டாகவேண்டும்.

வெகுகாலம் ஒருவன் வியாதியாயிருந்து அந்த வியாதி சிறுகச் சிறுகவிருத்தியடைந்து கடைசியில் அதனால் மரணம் நேரிட்டாலும் அது மரணவியாதியாகமாட்டாது.

257. பருவமடையாத மைனர்கள் எழுதிவைக்கிற உயில்கள் செல்லமாட்டாது. அதனால் ஏற்பட்ட வினியோகமும் செல்லாது. ஆனால் யாதொரு மைனரால் எழுதிவைக்கப்பட்ட வாசியத், அவன்

மேஜரான பிறகு அதை ஸ்திரப்படுத்தவாவது உறுதிப்படுத்தவா வது வேண்டும்.

எவன்பேருக்கு வாசியத் எழுதிவைக்கப் பட்டதோ அவன் அதை யெழுதியவனுக்கு மரணத்தை யுண்டுபண்ணினுல் அந்த வாசி யத் அவன் விஷயத்தில் செல்லாது.

258. ஒருவன் தன்னுடைய வார்சுகளில் ஒருவருக்குமட்டும் தன்னுஸ்திகளை யெல்லாம் மரணசாதனமாகக் கொடுத்தால், அதற்கு மற்றவார்சுகளெல்லாம் சம்மதப்படாவிடில் செல்லமாட்டாது. வார் சல்லாத வேறுமனிதருக் கெழுதிக்கொடுத்தால், அவன் வார்சுகள் சம்மதப்படுகிற பட்சத்தில் அவன் எழுதிவைத்த சொத்துமுழுவ தும் அந்த வேறுமனிதனுக்குச் சேர்ந்துவிடும். அவர்கள் சம்மதப் படாவிட்டால் இறந்தவன்சொத்தில் மூன்றிலொரு பாகந்தான் அவ னுக்குச்சேரும். வார்சுக்காவது, மறுவேறு யாருக்காவது மரண சாதன மெழுதிவைத்தால், அதை எழுதிவைத்தவ னிறந்துபோவ தற்கு முன்பாவது இறந்தபிறகாவது அவன் வார்சுகள், ஷியாக்கள் சட்டப்படி அதை ஒத்துக்கொள்ளலாம்; ஹனுவிகள் சட்டப்படி அவனிறந்த பிறகு அவர்கள் ஒத்துக்கொண்டால் போதுமானது.

259. ஒருவன் தன்சொத்தின் சிலபாகத்தை இரண்டு மனி தர்களுக்கு உயில் மூலமாய் கொடுத்திருந்தால், அப்படிக் கொடுத் தது அவன்சொத்தில் மூன்றிலொரு பாகத்திற்குமேலிருந்து அவன் வார்சுகள் அதற்கு ஒத்துக்கொள்ளாவிட்டால் அந்த பாகத்துக்குச் சரியாய்க்குறைக்க வேண்டியது. ஆனால் அப்படிப்பட்ட சொத்து யாதொரு வார்சுக்காவது அல்லது அயலாருக்காவது கொடுக்கப் பட்டு அது அவன் சொத்தில் மூன்றிலொரு பாகத்துக்கு மேலிரு ந்து சிலவார்சுகள் ஒத்துக்கொண்டு சிலவார்சுகள் ஒத்துக்கொள்ளா விட்டால், ஒத்துக்கொண்டவர்கள்மட்டும் கொஞ்சம் சொத்தைக் கொடுக்கும்படி நேரிடும்.

260. உயிலெழுதிவைத்தவ னிறந்தால், அவன்சொத்திலிரு ந்து முதலில் அவனுடைய கர்மாந்திரச்செலவைக் கொடுக்கவேண் டும். அதன்பிறகு அவன் எழுதிவைத்த உயிலுக்கும் கடன்களுக் கும் கொடுக்கவேண்டும். கடைசியில் அவன் வார்சுகள் மீதிசொத் தைப் பங்கிட்டுக்கொள்ளவேண்டும். உயிலின்படி சொத்தைக்

கொடாமலும், கடனையிறுக்காமலும் பாகஞ்செய்துகொண்டாலும் செல்லும். ஆனால் பாகஞ்செய்து கொண்டவர்கள் அவர்களின் பாகவீதப்படி உயிலுக்கும் கடனுக்கும் பாத்தியப்படவேண்டும்.

குழந்தைகள் பேருக்கெழுதிக் கொடுக்கிற உயில்களும் செல்லுமென்று எல்லாரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

261. மேற்சொன்னவைகளுடன் இதனடியில்கண்ட விஷயங்களுக்குங் கொடுக்கிற வாசியத்கள் சட்டசம்மதமானவைகள். அவைகளாவன:—

(1) குறித்த ஒருவகுப்பு அல்லது பொதுவாய் எல்லா ஏழைகளுக்கும்,

(2) காபா (Kaaba)விலுள்ள புண்ணிய வாலயத்திற்காவது, மற்ற மசூதிகளுக்காவது,

(3) ஆண்டவனுக்கும், ஆண்டவன்விஷயமாய் செலவுசெய்வதற்கும்,

(4) பொதுவாய் தர்மவிஷயங்களுக்காகவும், நல்ல செய்கைகளுக்கும்,

(5) ஆண்டவன் விஷயமாய் மதசம்பந்தமான யுத்தங்களுக்காகவும்,

(6) ஒருவனுடையவார்சுகள், பந்துக்கள், பக்கத்திலுள்ளவர்கள் இவர்களுக்கும்,

(7) அடிமைகளைச் சிறைநீக்குவதற்கும்,

(8) ஒருவனுடையகடனைத் தீர்ப்பதற்காகவும்,

(9) ஆடுமாடுமுதலிய கால்நடைகளுக்குத் தீனிபோடுவதற்காகவும், உயில்மூலியமாய் சொத்துக்களை விடலாம்.

262. சாதாரணமாய் மரணசாதனத்தை நிறைவேற்றாமல் அதை யெழுதிவைத்தவன் தானேதிருப்பி எடுத்துக்கொள்ளலாம். சாகும்சமயத்தில்கூட தன் உயில்சொத்தைத் திருப்பி எடுத்துக்கொள்ளலாம். மரணசாதனமெழுதியவன் வெளிப்படையாய் வாயினாலாவது, அவனுடைய நடத்தையினாலாவது, குணத்தினாலாவது

தான் கொடுத்தசொத்தை திருப்பி எடுத்துக்கொண்டதாகக் காட்டலாம்.

(3) மரணசாதனப்பொருளைத் திருப்பி எடுத்துக்கொள்வது.

263. உயிலின்படி கொடுத்தசொத்தை திருப்பி எடுத்துக் கொள்ளுகிறவிதமும் தகுதியும் நான்குவிதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன; முதலாவது, வெளிப்படையான வார்த்தைகளாலும் அல்லது அர்த்தங்கொள்ளத்தக்க நடத்தையினாலும், இரண்டாவது, வாயினால் வெளிப்படையாய் சொல்லுவதினாலும், மூன்றாவது, நடக்கையினால்மாத்திரமும், திருப்பி எடுத்துக்கொள்ளலாம். நான்காவது, ஒருக்காலும் திருப்பி எடுத்துக்கொள்ளமுடியாதவிதம்.

முதலாவது, மரணசாதனப்பொருளை மரணசாதனமெழுதி வைத்தவன் வெளிப்படையாய் வாயினாற்சொல்லியாவது, அல்லது சொத்தை விற்பதுமுதலிய பராதீனஞ்செய்வதினாலாவது திருப்பியடைவது.

இரண்டாவது, உயிலெழுதிக்கொடுத்தவன் தன்சொத்தில் மூன்றிலொன்று அல்லது நான்கிலொன்றை ஒருவனுக்குக்கொடுத்து, அதைத்திருப்பி யெடுத்துக்கொள்வதாக வெளிப்படையாய்ச்சொன்னாலொழிய, உயிலெழுதியவனிறந்தபிறகு, உயில்பெற்றவன் அதில் கண்டபாகத்தை அடைய பாத்தியமுள்ளவனாவான்.

மூன்றாவது, சிறைநீக்குவதாக உயிலெழுதிவைத்துப் பிறகு அதை ரத்துசெய்வது.

நான்காவது, நிச்சயமாய் சிறைநீக்குவதாகக் கொடுக்கிற வாசியத். அதை ஒருபோதும் ரத்துசெய்யமுடியாது.

264. ஷியாக்களுடைய சட்டப்படி உயில்மூலமாய் கொடுத்த சொத்தை, ஒருவன், மரணசாதனமெழுதிக்கொடுத்தவனிறப்பதற்குள் ஒத்துக்கொள்ளவேண்டும்.

ஹனவிகளுடைய சட்டப்படி அப்படி அவனிறந்துபோவதற்குள் ஒத்துக்கொள்வது செல்லாது.

உயில்மூலமாய்க்கொடுத்த சொத்தை வார்த்தையினாலாவது செய்கையினாலாவது ஒத்துக்கொள்ளலாம். ஒருவன் தனக்கு உயில்

மூலமாய் கொடுத்தசொத்தை ஒப்புக்கொள்ளாமலாவது, வேண்டா மென்று மறுக்காமலாவதிறந்துபோனால் அவன் ஒப்புக்கொண்ட தாகவே எண்ணப்பட்டு அவனுடைய வார்சுகள் அந்த உயில்சொத் தையடைய பாத்தியப்பட்டிருக்கிறார்கள்.

(4) எக்ஸிகியூட்டர்கள் (Cxecutors.) மரணசாதன காரியநிர்வாகிகள்.

265. உயிலெழுதிவைக்கிறவன் அதன்படி காரியங்களை நடத் தத் தனக்கிஷ்டமான எக்ஸிக்யூட்டர்களை, சில நிபந்தனைகளுக்குட் பட்டு, நேமிக்கலாம். ஆண் அல்லது பெண், பந்து அல்லது அய லான் இவர்களில் யாரையாவது நேமிக்கலாம்.

உயில்மூலமாய் சொத்தை பராதீனஞ்செய்வது சட்டப்பிசகா யிருந்தபோதிலும், அந்த உயிலின்படி மைனரான குழந்தைக ளுடைய கார்டியனாகவும், அவர்களுடைய படிப்புமுதலிய விஷயங் களைப்பார்த்துவர எக்ஸிக்யூட்டரை நேமித்தால் அதுசெல்லும்.

உயிலின்படி நேமிக்கிற எக்ஸிக்யூட்டர்களுடைய அதிகாரம் குறித்த ஒருவிஷயத்திற்காவது, பொதுவாகவாவதிருக்கலாம்.

பருவமடையாதகுழந்தையையாவது, நிரந்தரமான அல்லது அடிக்கடி வரக்கூடிய பைத்தியகுணமுள்ளவரையாவது எக்ஸிக் யூட்டராக நேமிக்கக்கூடாது. ஆனால், யாதொருபெண், அந்தகன், அவதூறுக்காக தண்டனையடைந்தவன் இவர்களையும் நேமிக்கலாம்.

266. எல்லாச்சட்டங்களின்படியும், ஒரு மகமதியன் ஒரு ஹார்பி (Harbi) விரோதியை எக்ஸிக்யூட்டராக நேமிக்கக்கூடாது. அந்தவிரோதி முஸ்தாமீன் (Mustamin) மகமதிய ராச்சியத்தில் அடைக்கலம் புகுந்தவனாயிருந்தாலு மிராவிட்டாலும் கூடாது. அதவா அவன் நேமிக்கப்பட்டிருந்தாலும் காஜி அவனை நீக்கிவிட லாம். ஆனால் ஒரு ஸிம்மியை (Zimmi) மகமதியருடன் வசிக்கிற வேறு மதத்தானை நேமித்தால் செல்லும். ஆனால் காஜிக்கு அவனை வைக்கவாவது எடுக்கவாவது அதிகாரமுண்டு.

ஒரு கேசில் ஒருஸ்திரி தன்னாஸ்தி முழுவதையும் அயலானொரு வனுக்கு உயில் மூலமாய்கொடுத்து அதற்கு ஒரு ஹிந்துவை எக்ஸ் க்யூட்டராக நேமித்தாள். இதை சதர்கோர்ட்டு ஜட்ஜிகள் காஜிக்

கும் (Kazi) முப்திக்கும் (Mufti) தெரிவித்ததில் அவர்கள் அடியில் கண்ட அபிப்பிராயங் கொடுத்தார்கள்.

(1) அந்த ஸ்திரிக்கு வேறுவார்சுகளொருவரு மில்லாமலிருந்தால் அவள் சொத்துமுழுவதையும் அவளுக்கிஷ்டமான வருக்குக் கொடுக்கலாம்.

(2) அவளுக்கு வார்சுகளிருந்தால் அவளுடைய சொத்தில் மூன்றிலொரு பாகத்தைமட்டும் உயில் மூலமாய்க்கொடுக்கலாம். வார்சுகள் சம்மதப்பட்டால் அதற்கு மேற்பட்டும் கொடுக்கலாம். (3) மகம்தியரல்லாத மற்றமதத்தாரை (ஹார்பி விரோதிதவிர) ஒரு மகமதியன் தன் உயிலின் எக்ஸிக்யூட்டராக நேமிக்கலாம். ஆனால் அவனை நீக்க காஜிக்கு அதிகாரமுண்டு. அதுவரையில் அவன் நியாயமாய்ச்செய்த சகல நடவடிக்கைகளும் செல்லக்கூடியது. (4. செல். ரி. பக்கம். 49)

267. இறந்தவன் தனக்குப்பிறகு தன் ஆஸ்திகளை காப்பாற்றவும், விருத்திசெய்யவும், மேற்பரிசோதனை செய்யவும், அவனுடைய குழந்தைகளைப் பாதுகார்க்கவும், எக்ஸிக்யூட்டர்களை நேமிக்கிறுன். அவர்கள் இறந்தவனுடைய பிரதிநிதியாகவிருந்து சகல அலுவல்களையும் சரிவரப்பார்க்கவேண்டும்.

268. அடியில்கண்ட விஷயங்களில்மட்டும் ஒரேஒரு எக்ஸிக்யூடர் தனியாயிருந்து காரியங்களைநடத்தலாம். அவைகளாவன:— (1) இறந்துபோன உயிலெழுதி வைத்தவனுடைய பிண்மூடிவாங்குவதற்கும், (2) அவனுடையகருமாந்திரச் செலவைச்செய்யவும், (3) அவனுடையபாத்தியதையை கைப்பற்ற தாவாசெய்யவும், (4) அவன் குழந்தைகளுக்கு வேண்டிய முக்கியமான சாமான்களை வாங்கவும், (5) இறந்தவனுக்குக் கொடுத்த தானங்களை வரப்பற்றவும், (6) முக்கியமான அடிமைகளை சிறைநீக்கவும், (7) அவனிடத்தில் அடைக்கலமாக வைத்திருந்த பொருள்களை திருப்பிக்கொடுக்கவும், (8) உயிலின்படி முக்கியமாய்க் கொடுக்கவேண்டியவைகளை கொடுக்கவும் எக்ஸிக்யூட்டர் தனியாய் செலவு செய்யலாம். சில விஷயங்களில் பலகாரிய நிர்வாகிகளிருந்தால் குத்தகை அல்லது வரியை வசூல்செய்வதில் யாராவதொருவரிருந்து காரியங்களைப்

பார்க்கலாம்; செலவுவிஷயத்தில் எல்லாரும் ஏகோபித்துச் செய்ய வேண்டும்.

(5) எக்ஸ்க்யூட்டர்களின் அதிகாரங்கள்.

269. உயில் எழுதிவைத்தவனுடைய பிள்ளைகள் மைனராயிருந்தால் எக்ஸ்க்யூட்டர்கள், நியாயமான காரியங்களை தங்களிஷ்டப்படி நடத்தலாம். அவசரமான சமயங்களில் சொத்துக்களை விற்கவும், அப்படி விற்றுவந்த தொகையை இலாபகரமான வேறு சொத்துக்களை வாங்கவும், உயில் எழுதிவைத்தவனால் பட்டகடன்களையும், மைனர்களுடைய போஷணைக்காக வாங்கின கடன்களையும் அப்படி விற்றபணத்தால் தீர்க்கவும், அதிகாரமுண்டு. நியாயமான விஷயங்களுக்கு மட்டுந்தான் சொத்தை விற்கலாம்; எக்ஸிக்யூட்டர்கள் தங்களுக்காவது, தங்களுடைய உறவினர்களுக்காவது மைனர் சொத்துக்களைவிற்றுக் கொள்ளக்கூடாது; உயிலெழுதி வைத்தவனுடைய பாகஸ்தர்களிடத்திலிருந்து பொதுவான சொத்துக்களை மைனருக்காக பாகம்பிரித்துக்கொள்ளலாம். பாகத்தில் உலகறிந்த குறைவுகளேற்பட்டால் அந்தபாகம் செல்லாது.

270. பாகஸ்தர்களெல்லாரும் மைனராயிருந்தால், யாதொரு எக்ஸ்க்யூட்டர், மரணசாதனப்படி ஆஸ்தியை யடைந்த மைனருடைய பாகத்தை வைத்திருப்பதுபோல், மற்றமைனருடைய பாகங்களையும் தன்வசத்தில் வைத்திருக்கலாம். அவனால் மனப்பூர்த்தியாகவாவது, அஜாக்கிரதையினாலாவதல்லாமல் வேறு விதமாய் அப்படிப்பட்ட மைனர்களுடைய பாகத்திற்கேதாவது கெடுதல் நேர்ந்தால், அந்த மைனர்கள் எக்ஸிக்யூட்டரையாவது, அல்லது உயிலின்படி சொத்தையடைந்த மைனரையாவது அந்தபாகத்தைக் கேட்க நியாயமில்லை.

அப்படிப்பட்ட பாகஸ்தர்களில் சிலர் வயதுவந்தவர்களாயிருந்தும் தேசாந்திரம்போயிருந்தால், அவர்களுக்காக, யாதொரு எக்ஸிக்யூட்டர் உயிலின்படி சொத்தையடைந்தவனுடன் ஜங்கமசொத்துக்களைமட்டும் பாகஞ்செய்துகொண்டு, அவைகளைத் தன்வசத்தில் வைத்துக்கொள்ளலாம்.

வார்சுகளெல்லாரும் வயதுவந்தவர்களாகவாவது, அல்லது வயதுவந்தவர்களாகச் சிலரிருந்து அவர்கள்கூடவிருந்தால், அப்படி

வயதுவந்தவர்களுடன் ஸ்தாவரஜங்கம சொத்துகளெல்லாவற்றை யும் மைனருக்காக எக்சிக்யூட்டர்பாகஞ் செய்துக்கொள்ளலாம்.

வார்சுகள் மேஜராயிருந்தால் அவர்கள் இல்லாதசமயத்தில் எக்ஸ்க்யூட்டரால் செய்தபாகம் ஸ்தாவரசொத்துவிஷயத்தில் செல் லாது. ஆனால் ஜங்கமசொத்துக்களை அவர்களில்லாதசமயத்தில் உயிலின் மைனருக்காக பாகஞ்செய்துக்கொள்ளலாம்.

271. உயிலெழுதிவைத்தவன் இரண்டு எக்ஸிக்யூட்டர்களை நேமித்திருந்து, அதில் ஒருவன் தனக்குப்பதிலாக வேறொருவனை நேமித்து இறந்துபோனால், மற்றொருவன் தனியாகவேயிருந்து முதலில் மரணசாதனமெழுதிவைத்தவனுடைய காரியங்களை நடத் தலாம்.

D. கிரயத்திற்குவாங்க முதல்பாத்தியம்.

(1) பொதுவிஷயம்.

272. மகமதிய மதக்கோட்பாட்டில், அயல்மதத்தான் மக மதியரோடு பக்கத்து நிலக்காரனாகவாவது, பக்கத்து வீட்டுக்கார னாகவாவதிராதபடிக்கு நீக்குவதற்காகவும், மற்ற சௌகரியங்களுக் காகவும், ஒருவன்நிலம் அல்லது வீட்டைவிற்றால் அதை இன்னார் தான் வாங்க பாத்தியப்பட்டவர்களென்றும், இன்னாருக்குமுன் இன்னார் வாங்கக்கூடாதென்றும் ஏற்பட்டிருக்கிறது. இதை முத லில் மகமதியர்கள்மட்டும் அனுஷ்டித்துவந்தார்கள். தற்காலம் பேஹார், வடமேற்குமாஹாணம் முதலானவிடங்களிலுள்ள ஹிந்துக் களும் கிறிஸ்தவர்களும் மகமதியரைப்போல கிரயத்துக்குவாங்க முதல்பாத்தியதையைக் கொண்டாடுகிறார்கள்.

273. யாதொரு பிரதிப்பிரயோசனத்துக்காகக் கொடுக்கிற சொத்துவிஷயத்தில் மட்டுந்தான் கிரயத்துக்கு வாங்குகிற முன்பாத் தியங்கொண்டாடப்படுகிறது. ஒருவன் வார்சுபாத்தியமாகவாவது, தானமாகவாவது, உயில் மூலமாகவாவது சொத்தை வேறொருவ ருக்குக் கொடுத்தால், இந்தவிஷயத்தில் அந்தபாத்தியம்செல்லாது. யாதொரு உடன்படிக்கையின் பேரில் ஒருவன் செய்யவேண்டிய வேதோவொரு வுபகாரத்துக்குப் பதிலாக சொத்தை தானமாகக் கொடுத்தால் அப்போது அந்த பாத்தியம் செல்லும்.

ஒருவன் தன்சொத்தை அறுதியாய் பராதீனஞ்செய்தால் தான் முன்பாத்தியதையைக் கொண்டாடலாம். அப்படிப் பராதீனஞ் செய்வதாக உடன்படிக்கை செய்தால் போதுமானதல்ல.

மேற்சொன்ன முதல்பாத்தியம் நிலம் வீடுபோன்ற ஸ்தாவர சொத்து விஷயத்தில்மட்டும் செல்லும்; ஜங்கமசொத்து விஷயத்தில் செல்லாது. பெரிய ஜமீன்தாரி விஷயங்களிலும் சட்டத்திலேற் பட்ட சில கற்பனை விஷயங்களிலும், அந்த பாத்தியம் செலாவணி யாகமாட்டாது.

(2) முதற்பாத்தியங் கோண்டாட யோக்கியதை யுள்ளவர்கள்.

274. ஸூனிகளுடைய சட்டப்படி அடியில்கண்டவர்கள்மட் டுந்தான் முதற்பாத்தியங்கொண்டாடலாம். அவர்களாவன :—

(1) எவர்கள் பராதீனஞ்செய்யவேண்டிய சொத்துக்கு பா கஸ்தர்களாயிருக்கிறார்களோ அவர்கள். அவர்களுக்கு ஷாவி - இ- ஷாரிக் (Shafi-i-sharik) என்றுபெயர்.

(2) ஷாவி. இ. காலித் (Shafi-i-khalit) என்றவர்கள், பரா தீனஞ்செய்யவேண்டிய சொத்துவிஷயமாய்க் கிடைத்த சௌக்கியத் துக்கு பாகஸ்தர்களாயிருப்பவர்கள்.

(3) ஷாவி. இ. ஜார் (Shafi-i-jar) அதாவது, பராதீனஞ் செய்யவேண்டியசொத்துக்கு பக்கபாத்தியங்கொண்டாடுகிறவர்கள்.

ஷியாக்கள்சட்டப்படி ஷாவி. இ. ஷாரிக் (பாகஸ்தர்கள்) கள் மட்டுந்தான் விலைக்குவாங்க முதற்பாத்தியங்கொண்டாடலாம்; ஸூ னிகள் சட்டத்தில்சொன்ன மற்ற விரண்டுபாத்தியஸ்தர்களும் வழக் கத்தில் ஏற்பட்டவர்கள்; ஷியாக்களும் ஸூனிகளைப்போல பக்க பாத்தியதையையும், சௌக்கியத்துக்காக ஏற்பட்ட பாத்தியதையை யும் கொண்டாடுகிறார்கள்.

(3) முதற்பாத்தியத்தின் நிபந்தனைகள்.

275. முன்பாத்தியங்கொண்டாடுவதற்கு இரண்டுநிபந்தனை களிருக்கின்றன. அவைகளைச் செய்தால்தான் பிறகு பாத்தியங் கொண்டாடுவதாகச்செல்லும்.

முதலாவது ஒருவன் தனக்குமுன்பாத்தியமுள்ளசொத்து வேறொருவருக்கு விற்கப்பட்டால் அது அவனுக்குத்தெரிந்தவுடன்,

தான் அதை விலைக்குவாங்கிக்கொள்வதாக அதிகாரத்தோடுகேட்க வேண்டும். தான்கொண்டாடுகிறபாத்தியம் தனக்குச் சங்கதிதெரிந்தவுடன் தாமதிக்காமல் செய்திருக்கவேண்டும். தாமதித்தால் முன்பாத்தியத்திற்குப் பாதகமுண்டாகும். முன்பாத்தியப்படி சொத்தை வாங்கிக்கொள்வதாகக் கேட்டதற்கு சாட்சிகள் ஆவசியமில்லை. (2. பெ. லா. ரி, A. C. 12). (4. பெ. லா. ரி. 171).

இரண்டாவது, சொத்து விற்கப்பட்டதாகக் கேள்விப்பட்டவுடன் தாமதிக்காமல் நிலமிருக்கப்பட்டவிடத்திலாவது, வாங்கினவன் அல்லது விற்றவனுக்கு முன்பாகவாவது சாட்சிகளைவைத்துக்கொண்டு முன்பாத்தியக்காரன் அதை விலைக்கு வாங்கிக்கொள்வதாகச் சொல்லவேண்டும்.

மேற்கண்ட விஷயங்களைச் செய்யாமலிருந்தால் முன்பாத்தியம் போய்விடும்.

276. முன்பாத்தியங்கொண்டாடுகிறவன் சொத்தை முதலில் வாங்கியவன் என்னவிலைகொடுத்தானோ அந்தவிலையைக் கொடுக்க வேண்டும்.

முன்பாத்தியக்காரனுடைய பாத்தியதையைக்கெடுப்பதற்கு வழிஎன்னவென்றால், அப்படிப்பட்டவன் நிலத்துக்குச்சமீபமாக சொல்பநிலத்தை ஒதுக்கிவிட்டு மீதிநிலத்தை விற்பதுதான். முதல் விலைக்குவாங்கியவன் அந்தநிலத்தின் நன்மைக்காக ஏதாவது செலவு செய்திருந்தால் அந்தச்செலவை பின்னால்விலைக்கு வாங்கினவன் கொடுக்கவேண்டும். அப்படிப்பட்டவன் நிலத்துக்குக் கெடுதிசெய்திருந்தால்அதையும் பின்னால்வாங்கியவனுக்கு அவன் ஒத்துக்கொடுக்க வேண்டும். அப்படிப்பட்ட கெடுதல் முதலில் விலைக்கு வாங்கினவனுடைய அஜாக்கிரதையினாலாவது மனப்பூர்வமாகவாவதுசெய்யப்படாமல் தற்செயலாய் நேரிட்டிருந்தால் முழுவிலையையும் இரண்டாந்தரம் வாங்குகிற முன்பாத்தியஸ்தன் கொடுக்க வேண்டும்.

E. விற்பனை.

(1) பொதுவிஷயங்கள்.

277. விற்பனை யென்பது ஒருவன் சுவேச்சையாய் தன் சொத்தை வேறொருவனுக்கு பிரதிப்பிரயோசனத்துக்காகக்

கொடுப்பது. தனக்குக் கிடைக்கவேண்டியிருக்கிறசொத்தையும் ஒருவன் விற்பனைசெய்தால் செல்லும். பணத்திற்குப் பதிலாக எதாவது சாமான்களுக்காவது, வேறொன்றின் மாற்றலுக்காவது சொத்தை விற்கலாம்.

278. விற்பனை வுடன்படிக்கை செய்தவுடனாவது அல்லது பிற்காலத்திலாவது, ஒருவருக்கொருவர் சொத்தின் சுவாதீனத்தை மாற்றிக்கொள்வதினாலாவது, அல்லது பிரதி பிரயோசனத்தை யடைவதினாலாவது சொத்தை விற்கலாம்.

விலைக்குப்பதிலாக ஒரு சாமானுக்கு மற்றொருசாமான்களை மாற்றிக்கொள்வது, அந்தசாமான்கள் விலைக்குப்பிரதிநிதியாக விருக்கிறது. இந்தவிஷயத்தில் ஒருவர்சாமானை மற்றொருவர் கைவசமாக மாற்றிக் கொள்ளவேண்டும்.

பிரதிபிரயோசனத்துக்காக சொத்தை விற்றால் விலையை மட்டுமுடனே பெற்றுக்கொண்டு சாமான்களைத் தாமதித்துக் கொடுக்கிறதென்கிற வேறொருவிற்பனையுண்டு.

278. விற்பனைகள் நான்குவிதம்.

(1) விற்றவுடன் அமுலுக்கு வரவேண்டும்.

(2) யாதொரு ஏஜண்டு தன்னுடைய எஜமானனுக்கு ஏற்படுத்துகிற விற்பனை. இதை அந்த எஜமானன் உறுதிப்படுத்த வேண்டும். எஜமானன் மைனராயிருந்தால் அந்த மைனரின் கார்டியனுடைய அனுமதி அவசியம் வாங்க வேண்டும்.

(3) விற்பனை யுடன்படிக்கையானபிறகு, எப்போது சொத்துக்கு விலைகொடுக்கப்படுகிறதோ அப்போது விற்பனை ஸ்திரப்படுத்தப்படும்.

(4) சட்டப்படி யேற்பட்ட பிரதி பிரயோசனமின்றி வேறு விதமாய் விற்பனைசெய்யலாம்.

பிரதி பிரயோசனத்துக்காகச் செய்கிறவிற்பனையில் அது சட்டப்படி யேற்பட்ட (விலை) பொருளாயிருக்கவேண்டும். அந்த விலை மதிப்பை விற்பனைக்காலத்தில் நிச்சயஞ்செய்ய வேண்டும்.

279. விற்பனையை வாயினாலாவது, எழுத்துமூலமாயாவது, தந்திமூலமாயாவது தெரிவிக்கலாம்.

விலேகொடுத்து வாங்குகிறவனும் விற்கிறவனும் தீர்மானமாய் விலேயை நிச்சஞ்செய்து ஒத்துக்கொண்டால் அதன்படியே நடக்க வேண்டும். அவர்கள் செய்ததீர்மானம் நியாயமானகாலத்திற்குள் ஒத்துக்கொள்ளப்படாவிட்டால் அந்தத்தீர்மானம் போய்விடும்.

விலேக்கு வாங்கவேண்டியசாமான்களே மாறுபாடாகத் தெரிவித்தால் அதற்காகக்கொடுத்த விலேயைத் திருப்பியடைடலாம்.

வாங்குகிறவனும் விற்கிறவனும் தாங்கள் செய்கிற நடவடிக்கைகளின்னதென்று தெரிந்துகொள்ளுகிறவர்களாயிருக்கவேண்டும். யாதொருபைத்தியம்பிடித்தவன் பைத்தியந்தெளிந்த சமயத்தில் விற்பனேசெய்யலாம். அதுபோலவே யாதொருமைனர் தன்னுடைய கார்டியனுடைய அனுமதியின்பேரில் விற்பனேசெய்யலாம்.

வாங்குகிறவனும் விற்பவனும் தங்கள் ஏஜெண்டு மூலமாக விற்பனேயை நடத்தலாம்.

பிரதிபிரயோசனத்தைப்போல விற்கவேண்டிய சொத்தின் விஷயங்களேயும் விவரமாய் நிச்சயஞ்செய்து உடன்படிக்கையில் எவ்விதசந்தேகமாவது, அநிச்சயமாவதில்லாதிருக்கும்படி செய்யவேண்டும்.

(2) விற்பனேயில் பார்டிகளின் இஷ்டம்.

280. விற்பனேஉடன் படிக்கையின்பேரில் வாங்குகிறவனுவது விற்கிறவனுவது மூன்றுநாள்களுக்குள்ளாக தாங்கள் செய்த உடன்படிக்கையைத் தள்ளிவிடலாம். அவர்கள் சும்மாவிருந்தால் விற்பனே உடன்படிக்கையை ஸ்திரப்படுத்தியதாகிறது. மூன்றுநாள்களுக்குள்ளாக வாங்கினவன் விலேயைக்கொடாதிருந்தால் அந்த உடன்படிக்கை ரத்தாய்விடும்.

281. ஒருவன் தான்வாங்கியசொத்தை பரீட்சைசெய்து, சரியாயில்லாவிட்டால் தள்ளிவிடலாம்.

யாதொருசொத்தை விலேக்கு வாங்கினவன் அந்த சொத்தில் ஏதாவது பிசகுகள் காணப்பட்டால் அந்தசொத்தை வாங்கினவனிடத்தில் திருப்பிக்கொடுத்து விடலாம்.

சொத்தின்விலையை பின்னுடிக்கொடுக்கலாமென்று அது நிறுத்திவைக்கப்பட்டால், அது இன்னகாலத்தில் கொடுக்கவேண்டுமென்று நிச்சயமாய் குறிப்பிடவேண்டும்.

விலைக்குவாங்கிய ஜங்கமசொத்துக்களைத் திருப்பிவிற்கிற விஷயத்தில் அந்த சொத்துக்கள் கைக்குவந்தபிறகுதான் விற்கவேண்டும். ஸ்தாவரமான நிலவிஷயத்தில் அது தன்சுவாதீனத்துக்கு வருவதற்குமுன்னமே விற்றுவிடலாம்.

சொத்துவிஷயத்தில் கெடுதலாவது குறைவாவது அல்லது வேறேவில்லங்கமாவதுஇல்லையென்று காட்டக்கூடிய அதிகாரச்சீட்டொன்றை ஒவ்வொரு விற்பனையிலு மேற்படுத்தவேண்டும்.

விற்பனைசெய்த சொத்து முதலிற்சொன்னபடியில்லாமல் குணத்திலும், அளவிலும் குறைந்தால் வாங்குகிறவன் விற்பனை உடன்படிக்கையிலிருந்து விலகிவிடலாம்.

நிலத்தை யொருவனுக்கு விற்ருல் அதிலிருந்து பிரிக்கக்கூடியவைகள் விற்றவனைச்சேரும், அதாவது நிலத்திலுள்ள மரங்கள் வாங்கினவனையும், அதன் பழங்கள் விற்றவனையும் சேருமென்று எழுதியிருக்கிறது.

குறிப்பு:—எந்தமூடனும் நிலத்தைமட்டும் விலைக்குவாங்கிக் கொண்டு அதிலுள்ளமரங்களின் பலங்களைதான் அனுபவியாமல், விற்றவனே கொண்டுபோகும்படி விடமாட்டானென்று எண்ணுகிறோம்.

வாங்கவேண்டிய சொத்தை முதலில் பாராமலே வாங்குவதாக ஒப்புக்கொண்டாலும் அந்தசொத்து பார்த்தபோது கெடுதலாயிருந்தால் வாங்குவதாகச்சென்ன உடன்படிக்கையை ரத்துசெய்யலாம். வாங்கியிருந்தாலும் அந்தசொத்தைத் திருப்பிக்கொடுத்து விடலாம். வாங்கினவனிடத்தில் சொத்துவந்தபிறகு இன்னும் கெட்டுப்போயிருந்தால் அதற்கவன் ஒத்துக்கொடுக்கவேண்டும். அப்படி சொத்தை வாங்கியவன் அதைவேறொருவனுக்கு விற்றுவிட்டால் அவன் முதலில் எவனிடத்தில் சொத்தை வாங்கினுனே அவனிடத்தில் எவ்வித நஷ்டமும் வாங்கமுடியாது.

விற்றசொத்து பரீட்சையின்பேரில் கெடுதலாக காணப்பட்டால், அந்தக்கெடுதல் பரீட்சைசெய்யும்போதுவுண்டானுலும் அந்த

சொத்தினால் வாங்கினவன் எவ்விதநன்மையையுமடையாதிருந்தால், அந்தசொத்தின் விலைமுழுவதையும் விற்றவன் திருப்பிக்கொடுக்க வேண்டும். அப்படிக் கெடுதலாயிருந்த சொத்தையும் வாங்கியவன் நன்மையான விஷயங்களுக்கு உபயோகித்திருந்தால் அதற்குத்தகுந்தபடி அவன் ஒத்துக்கொடுக்க வேண்டும்.

A என்பவன் B என்பவனுக்கு ஒரு சொத்தை விற்கிறான். அதை B என்பவன் C க்கு விற்றான். அந்தசொத்து கெடுதலாயிருந்ததால் B என்பவன் அதன்கிரயத்தை C என்பவனுக்குத்திருப்பிக்கொடுக்க நெரிட்டது; B தன்நஷ்டத்துக்காக A என்பவன் பேரில் தாவாசெய்யலாம்.

விலைக்குவாங்கிய சொத்து பிரிக்கப்படவேண்டியதா யிருந்தால் அதற்குக் கெடுதலில்லாமல் பிரிக்கமுடியாமற் போனாலும், அந்த சொத்தின் யாதொருபாகம் கெடுதலாயிருப்பதாகப்பின்னாடித்தெரியவந்தாலும், அல்லது அந்த சொத்தின் யாதொருபாகம் வேறொருவனுக்குச் சொந்தமானதென்று தெரியவந்தாலும், வாங்கினவன் சொத்து முழுவதையும் வைத்துக்கொண்டு எந்தபாகம் கெட்டுப்போய் அல்லது வேறொருவனுக்கு சொந்தமாயிருக்கிறதோ அந்த பாகத்துக்குள்ள விலையைப்பெற்றுக்கொள்ளவேண்டும். அல்லது சொத்தை வாங்கினவனிடத்தில் திருப்பிக்கொடுத்து விட்டு அதற்குத் தான் கொடுத்தவிலையை வாங்கிக்கொள்ளவேண்டும். கெடுதலான பாகத்தைமட்டும்விட்டுவிட்டு மீதியைவைத்துக்கொள்ளவாவது, கெட்டுப்போன பாகத்திற்குமட்டும் விலையைவாங்கிக்கொண்டு மீதியை வைத்துக்கொள்ளவாவது கூடாது.

அநுபந்தம் (APPENDIX)

1. ஒருவன் ஒருபிள்ளையை தன் சொந்தபிள்ளையென்று ஒத்துக்கொண்டால், அவனுடையசொத்துக்கு அந்தப்பிள்ளை வார்சாவதுடன் அந்தபிள்ளையின் தாய்கூட அவன்சொத்துக்கு வார்சாகிருள். அப்படி அவன் ஒப்புக்கொள்ளுவதினுல் ஸ்திரியும் புருஷனும் ஒத்திருந்தார்களென்று நம்பப்படுகிறது. உதாரணமாக:—A என்பவனும் B என்பவளும் புருஷன் பெண்சாதியாக வசித்து அவர்களுக்குக் குழந்தைபிறந்தது; ஆனுல் அவர்களுடைய விவாகத்தை ருசுச்செய்ய சாட்சியில்லை; அவர்கள் விவாகஞ்செய்து கொள்ளாமலிருக்க எவ்வித தடையும் நேர்ந்ததில்லை. A என்பவன் அந்தக் குழந்தையை தன்குழந்தை யென்று ஒப்புக்கொள்ளுகிருன். அந்த ஒப்புக்கொள்ளுதல் அந்தக் குழந்தைக்கும் அதன் தாய்க்கும்அவன் சொத்தையடைய பாத்தியமுண்டாகிறது. (10-கல். லா-ரி-ப-293) வார்த்தையினுலாவது செய்கையினுலாவது அவன் அந்தக்குழந்தை தன்னுடைய தென்று சொன்னுல் போதுமானது. அந்தக்குழந்தை விபசாரத்தினுல் தனக்குபிறக்கவில்லை யென்று சொல்லவேண்டிய அவசியமில்லை.

2. பழைய காலத்தில் புருஷன் தன்னிஷ்டப்படி விவாகபந்தத்தை நீக்கிவிடலாம். அவன் தனக்கிருக்கும் தாலக் (Talak) அதிகாரத்தைத் தனக்கிஷ்டமானவருக்காவது, தன்பெண்சாதிக்காவது கொடுத்து செய்யச்சொல்லலாம். விவாககாலத்தில் புருஷன்செய்த உடன்படிக்கைக்கு விரோதமாய் நடந்தாலும், அல்லது வேருெரு பெண்சாதியை விவாகஞ் செய்துகொண்டாலும், முதல் பெண்சாதி அந்தப்புருஷனைப் பரித்தியாகஞ் செய்யலாமென்று உடன்படிக்கையிலேயே காணுகிறதுண்டு.

3. எவர் பரமாத்மாவான கடவுளுண்டென்றும், கிடாப் (Kitab) வெதத்தையும், தாவீதின்கீதங்களையும் (Psalm of David) நம்புகிருர்களோ அவர்களுடன் ஒருமகமதியர் விவாகசம்பந்தஞ் செய்யலாம்; அவர்கள் கொன்ற ஜந்துக்களின் மாம்சத்தை புசிக்கலாம். அவர்களுக்கு கிடாபிகள் (Kitabis) என்று பெயர்.

வடாவா அலங்கிரி (Fatawa Alangiri) என்பவர் மாஜிய தேசத்து ஸ்திரீகளை விக்கிரகாராதனை செய்பவருக்குச் சமானமாக அபிப்பிராயப்பட்டிருக்கிறார். ஷியாக்கள் அவர்களை கிரிஸ்தவர், யூதர் இவர்களுக்குச் சமமென்கிறார்கள்.

4. ஒருவன் ஒருஸ்திரீயின் புருஷனிறந்து போனானென்றாவது, அல்லது அவள்புருஷனால் பரித்தியாகஞ் செய்யப்பட்டவளென்றாவது மனப்பூர்த்தியாய்நம்பி அவளைவிவாகஞ்செய்து கொண்டபிறகு, அவளுக்குப்புருஷன் உயிருடனிருப்பதாகவும், அவள் பரித்தியாகஞ் செய்யப்படவில்லை யென்றாவது தெரியவந்தால் அந்த இரண்டாவது விவாகம் ரத்தாய்விடும். ஆனால் இரண்டாவது விவாகஞ் செய்துகொண்டவன் விபசாரத்துக்காக தண்டனையடைய மாட்டான்; அவனுக்கு அவளிடத்தில் ஏதாவது பிள்ளைபிறந்தாலும் அதுநியாயமான பிள்ளையென்று ஒப்புக்கொள்ளப்படும்.

5. விவாகத்திற்குப்பிறகு ஆறுமாதத்திலாவது அதற்குப்பின்னிட்டாவது பிள்ளைபிறந்தால் அந்தப்பிள்ளை அந்த விவாகஞ்செய்துகொண்டவனுக்குப்பிறந்ததாக எண்ணப்படும். அவனதை ஒக்கொண்டாலும், பேசாமலிருந்தாலும் அவசியமில்லை.

6. ஒருவன் தன் விவாகம்பூர்த்தியாவதற்குள் பெண்சாதியைப்பரித்தியாகஞ்செய்தால், அப்படிப்பரித்தியாகஞ் செய்த ஆறுமாதத்திற்குள் அவள் பிள்ளையைப் பெற்றால் அந்தப்பிள்ளை அவனுக்குப்பிறந்ததாக எண்ணப்படும். ஆனால் ஆறுமாதமுடிவிலாவது அதற்கு மேற்பட்ட காலத்திலாவது பிள்ளைபிறந்தால் அது அவனுக்குப்பிறக்கவில்லை யென்று எண்ணப்படும்.

7. விவாகப்பூர்த்தியானவுடன் ஒருவன் தன் பெண்சாதியை தாலக் (பரித்தியாகம்) செய்தால், அந்தப்பரித்தியாகத்திற்குப்பிறகு பத்துமாதகாலம்வரையில் அந்த ஸ்திரீக்குப் பிறக்கிறகுழந்தைகள் அவனுக்கு அப்படிப்பரிதியாகஞ் செய்தவனுக்குப் பிறந்ததாகவே எண்ணப்படும். பழையகாலத்து வழக்கம் 20 மாதங்களாயிருந்தது; இப்போது அது தள்ளிவிடப்பட்டிருக்கிறது.

தாலக் அல்லது பரித்தியாகஞ்செய்யப்பட்ட ஸ்திரீயாவது, அல்லது யாதொருவிதவையாவது மறுவிவாகஞ் செய்துகொண்டால், அப்படி பரித்தியாகஞ்செய்யப்பட்ட அல்லது புருஷனிறந்த

பத்துமாதத்திற்குள் குழந்தையைப் பெற்றால் அந்தக்குழந்தை இரண்டாந்தரம் விவாகஞ்செய்து கொண்டபுருஷனுக்குப் பிறந்த தாக பாவிக்கப்படும்; ஆனால் ஆறுமாதத்திற்குள் பெற்றிருந்தால் முதல் புருஷனைச் சேர்ந்ததாகும்.

8. ஹனுவிகளுடைய சட்டப்படி இவ்வளவுகாலம்வரையில் விவாகபந்தமுள்ளவர்களா யிருக்கவேண்டுமென்றும் அதன்பிறகு நீங்கலாமென்று விவாகத்தில் உடன்படிக்கைசெய்வது செல்லா தென்றும், ஸ்திரீபுருஷர்கள் ஒத்து வாழ்வதே ஸ்திரமான விவாகத் திற்குச் சமானமென்றும் ஏற்பட்டிருக்கிறது. சட்டவிரோதமான நிபந்தனைகளை விவாக உடன்படிக்கையில் சேர்த்தால் அதன்படி நட வாததற்காக விவாகத்தை ரத்துசெய்யமுடியாது. ஆனால் அந்த சட்டவிரோதமான நிபந்தனையை ரத்துசெய்து விடலாம்.

9. ஒருவன் கல்யாணமாகாத அல்லது கல்யாணத்திற்குப் பிறகு பரித்தியாகஞ்செய்யப்பட்டு இதத் (Iddat) அனுஷ்டான மிருந்து முடிந்த வொருஸ்திரியை பெண்சாதியாக அவனேற்றுக் கொண்டால், அவன் தான் ஏற்றுக்கொண்ட பெண்சாதியின் சகோ தரியை முன்விவாகஞ் செய்யாதவனுயும், ஏற்கனவே இதற்குமுன் நான்கு பெண்சாதிகள் அவனுக்கில்லாமலு மிருக்கவேண்டும். அப் படிஏற்றுக்கொண்ட ஸ்திரீயும் புருஷனை பர்த்தாவாக ஏற்றுக் கொள்ளவேண்டும். அதின்பிறகு அது நியாயமான விவாகமாக எண்ணப்பட்டு அவர்களுக்கு வார்சு பாத்திய உரிமை ஏற்படுகிறது.

10. ஒருவன் தனக்கு அடியில்கண்ட இரக்தசம்பந்தமுள்ள ஸ்திரிகளை விவாகஞ்செய்துகொள்ளக்கூடாது. அவர்களாவன:— (1) தாய்கள், (2) பெண்கள், (3) சகோதரிகள், (4) அத்தைகள், (5) தாயுடன்பிறந்த சகோதரிகள், (6) சகோதரி சகோதரர்களுடைய பெண்கள்.

மேற்கண்ட உறவினர்களை விவாகஞ்செய்யவாவது, சம்போ கஞ்செய்யவாவது, சம்போகஞ்செய்ய அழைக்கவாவது எக்கா லத்திலும் எந்த ஸ்திதியிலும் கூடாதென்று ஏற்பட்டிருக்கிறது.

(1) "தாய்கள் என்பது" சொந்தத் தாயென்றும், தகப்பன் பாட்டன், தாய் இவர்களுடைய தாய்களென்றும் அடங்கும்.

(2) "பெண்கள் என்பது" தன் சொந்தப்பெண்ணென்றும், தன்பிள்ளை, பெண் இவர்களுடையபெண்களென்றும் அர்த்தமாகும்.

(3) "சகோதரிகளென்பது" தன்னுடைய சொந்த சகோதரிகள் தாய்வழிதகப்பன் வழியைச்சேர்ந்த சகோதரிகள், சகோதரர் சகோதரிகளுக்குப் பிறந்த பெண்கள் இவர்களென்று அர்த்தமாகும்.

(4) "அத்தையென்பது" தகப்பனுடைய சொந்தசகோதரியென்றும், தகப்பனுடைய தகப்பன்வழிதாய்வழியைச் சேர்ந்த சகோதரிகளென்றும். தகப்பனுடைய அத்தை, பாட்டனுடைய அத்தை, தகப்பனுடைய சகோதரிகள், பாட்டனுடைய தாயின் சகோதரிகளென்றும் அர்த்தமாகும்.

"தாயின் சகோதரி" என்பது, தாயின் சொந்த சகோதரிகள், தாயின் தகப்பன் அல்லது தாய் இவர்களைச் சேர்ந்த ஒன்றுவிட்ட சகோதரிகள், தகப்பனின் அல்லது தாயின் தாயாருடைய சகோதரிகளென்றும் அர்த்தமாகும்.

இதனடியில்கண்ட பாத்தியமுள்ள ஸ்திரிகளையும் ஒருவன் விவாகஞ்செய்து கொள்ளக்கூடாது. அவர்களாவன:—(1) பெண்டாட்டியின்தாய்கள், (2) பெண்டாட்டியின் தகப்பனைப்பெற்றதாய், (3) பெண்டாட்டியின் தாயைபெற்றதாய், (4) வேறுபுருஷனால் பெண்டாட்டிக்குப் பிறந்த பெண்கள், அவர்கள் சந்ததிகள். பெண்டாட்டியைவிட்டு விலகியிருந்தால் அவளுக்கு வேறொருவனால் பிறந்தபெண்ணை விவாகஞ்செய்யலாமென்று ஹனுவிகள் அபிப்பிராயப்படுகிறார்கள். (5) பிள்ளையினுடைய பெண்சாதி, (6) பிள்ளைவயிற்று பேரன் அல்லது பெண்வயிற்றுப்பேரனுடைய பெண்சாதிகள். அந்தப்பிள்ளை அல்லது பேரன்கள் தங்கள் பெண்சாதியோடு கூடிவாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் கூடாது. (7) தகப்பன், தகப்பனைப்பெற்ற பாட்டன், தாயைப்பெற்ற பாட்டன் இவர்களுடைய பெண்சாதிகள். மேலேசொன்ன ஸ்திரீகளுடன் சம்போகஞ்செய்வது கூடாததால் அவர்களை விவாகஞ்செய்து கொள்ளக்கூடாது.

மேற்சொன்ன பந்துத்வமெல்லாம் நியாயமான விவாகத்தினால் ஏற்பட்டால்தான் அந்தபந்துத்வமுள்ள ஸ்திரிகளை விவாகஞ்செய்து கொள்ளக்கூடாது; A என்பவன் B என்பவளை சட்டவிரோதமான மாதிரியாய் விவாகஞ்செய்துகொண்டால், அந்த விவாகம் செல்லாமல், B என்பவளின் தாயை அவன் விவாகஞ்செய்யலாம்; ஆனால்

அந்த B என்பவளுடன் சம்போகஞ் செய்துவிட்டால், விவாகம் சட்டசம்மதமானதா அல்லது சட்டவிரோதமானதா என்பதைப் பாராமலே, அந்த B என்பவளுடையதாய், பாட்டி, பெண், பேத்தி இவர்களையும் இவர்கள் சந்ததிகளையும் A என்பவன் விவாகஞ்செய்துகொள்ளக் கூடாது; A என்பவனுடைய தகப்பன், பாட்டன், பிள்ளை, பேரன்முதலியவர்களும் B என்பவளை விவாகஞ் செய்துகொள்ளவுங்கூடாது.

11. பழைய காலத்தில் ஸ்திரி புருஷர்கள் இதுவரையில் சொன்ன மாதிரியைக்காட்டிலும் வேறு இரண்டுவித மாதிரியாக விவாகபந்தத்திலிருந்து நீங்குகிற வழக்கமிருந்தன. அவைகளுக்கு இலா (Ila) ஜிஹார் (Zihar) என்று பெயர்கள். இலாவென்பது, புருஷன் தன் பெண்சாதியோடு நான்குமாத காலமாக எவ்வித உறவுங் கொண்டாடவில்லை யென்று சத்தியஞ்செய்து, அந்த நான்கு மாதகாலம் முடிந்தபின்பு பெண்டாட்டியைவிட்டு நீங்கியிருப்பது; ஜிஹார் என்பது, விவாகஞ்செய்துகொள்ளக் கூடாதென்று தடுக்கப்பட்டிருக்கிற பந்துத்வமுள்ள ஸ்திரியை விவாகஞ்செய்துவிட்டால், அதற்குக் காரணகவாவது, நியாயாதிபதியின் தீர்ப்பின்பேரிலாவது விரதமிருந்து பெண்டாட்டியைவிட்டு நீங்குவது. இந்த வழக்கங்கள் இக்காலத்தில் கிடையாது.

12. ஹனுவிகளுடைய சட்டப்படி கடன்காரனுக்குக் கடனையிறுக்கிறவரையில் கடன்பட்டவன் கட்டுக்குள்ளகப்பட்டவனைதால், அக்கட்டை விட்டுவிலக கடனைக்கொடுக்க வேண்டும். வாங்கின கடனை, கடன்காரனிடத்திலாவது அவனுடைய குமாரனிடத்திலாவது கொடுக்கலாம். யாதொரு சொத்தை கடன்காரனுக்கு விட்டு அதன் வரும்படியைக்கொண்டு கடனை அடைக்கலாம். கடன் தீர்ந்தபிறகு சொத்தைதிருப்பி எடுத்துக்கொள்ளலாம்.

13. ஒருவன்பட்ட கடனைத்தீர்க்க அவனுடைய ஆஸ்திமுழுவதுங்கட்டுப்படுமேயொழிய, அதில் மூன்றிலொருபாகமட்டுமல்ல.

14. ஈடுவைத்தாவது, குத்தகை அல்லது வாடகைக்குவிட்டாவதிருக்கிற சொத்தை வாக்வ் (தானமாக) கொடுத்தால் செல்லும். அப்படி வாக்வ்வாகக் கொடுத்தசொத்தின் வரும்படியைக் கொண்டு அதன்மேபரிலிருக்கிற கடனையடைத்த பிறகு தான், அந்த வாக்வ் எந்த தர்மத்துக்குக் கொடுக்கப்பட்டதோ அதற்குப்பிரயோ

சனப்படும். யாதொரு சொத்தின்வரும்படி தன்னுடைய நன்மைக்காவது தான்பட்ட கடனுக்காவது செல்லாகவேண்டுமென்கிற நிபந்தனையின்பேரில் அந்தசொத்தை வாக்வ்வாக விடலாம்.

15. ஒருவருடைய குழந்தைக்கும் அ[illegible]ன்சந்ததிகளுக்குமென்று விட்ட வாக்வ்களுக்கு அந்தகுலத்தி[illegible]க ளெல்லாரும் ஏககாலத்தில் சமமான பாத்தியதையுள்ளவ[illegible]ர்கள். ஒருவருக்குப் பின்னொருவர் வரிசைக்கிரமமாய் [illegible]படைய வேண்டுமென்றிருந்தால் வாக்வ்விட்டவனே முத[illegible]துதைப்பற்றி நிபந்தனை யேற்படுத்தி யிருக்கவேண்டும்.

16. அஸாபாக்களில் (Asabat) முதல் வ[illegible]ந்தியஸ்தன் பிள்ளை, பிறகு பேரன் (பிள்ளையின்பிள்ளை), அ[illegible]ந்ததிகள், அதன்பிறகு தகப்பன், அதற்கடுத்தவர் பாட்டனும் [illegible]க்கு முந்தின முன்னோர்களும், பிறகு சொந்தசகோதரன், பிற[illegible]னுக்கு வேறு தாயால் பிறந்த சகோதரன், பிறகு சொந்தசகோ[illegible]மகன், பிறகு தகப்பனுக்கு வேறு தாயால் பிறந்த சகோதரன்[illegible] பிறகு சொந்ததகப்பனின் சகோதரன், பிறகு தகப்பனுடைய [illegible]க்கு வேறொருத்தியால் பிறந்த தகப்பனின் சகோதரன், தக[illegible]டைய சொந்தசகோதரனின் மகன், பிறகு தகப்பனுடைய த[illegible]க்கு வேறொரு ஸ்திரியால் பிறந்த தகப்பனின் சகோதரனுடை[illegible]ன், பிறகு பாட்டனுடைய சொந்தச்கோதரன், பிறகு பாட்ட[illegible] தகப்பனுக்கு வேறொருத்தியால் பிறந்த பாட்டன் சகோ[illegible] பிறகு பாட்டனுடைய சொந்த சகோதரன்மகன், பிறகு பா[illegible]டையதகப்பனுக்கு வேறொருத்தியால் பிறந்த பாட்டனின் [illegible]கோதரன் மகன் கொள்பாட்டனின் சொந்த சகோதரன், பிறகு கொள்பாட்டனுக்கு தகப்பனைச் சேர்ந்த வேறுசகோதரன், இந்தவரிசையாக சொத்தை யடைவார்கள்.

குறிப்பு—பிள்ளை பேரன் என்றுசொன்னால், பிள்ளை பேரன்களென்றும் அவர்களுக்குப்பிறந்த ஆண் சந்ததி முதலிய பின்வம்சஸ்தர்களென்று அர்த்தங் கொள்ளவேண்டும். பின்சந்ததி யில்லாதிருந்தால் முன்னோர்களுக்கு சொத்துசேரும்.

முற்றிற்று.

கவனியுங்கள். உ கவனியுங்கள்.

விவஹார போதினி.

பிரதிமாதம் முதலில் பிரசுரஞ்செய்கிற தமிழ்சஞ்சிகை.

இதில் கிராமக்கர்ணம் மணியக்காரர் சால்ட் அப்காரி பாரஸ்டு இலாகா உத்தியோகஸ்தர்களுக்கும், ஜமீன்தார், சுரோத்திரியதார் இனும்தார் மிராசுதார் முதலானவர்களுக்கும், சீவில் கிரிமினல் ரெவினியூபோலீஸ் சம்பந்தமான விஷயங்கள்தெரியும் பொருட்டு அந்தந்தசட்டங்களை ஹைகோர்ட்டு, ரெவினியூபோர்ட் முதலான கோர்ட்டுகளுடைய அபிப்பிராயங்களோடும் விவரமான உதாரணங்களோடும் ஒருபிரிவுகூட விடாமல் சகலசட்டங்களையும் அச்சிட்டுப் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகிறது ...

இதை அச்சிடுவர் வெகுகாலம் போலீஸ் உத்தியோகத்திலிருந்து அவர்கள் செய்யும் அக்கிரமங்களையும் மற்ற இரகசியமான காரியங்களையும் நேரில் தெரிந்துகொண்டவரானதால்; அந்தப்போலீஸ் உத்தியோகஸ்தர்கள் சட்டப்படி இன்னகுற்றங்களைப் பிடிக்கலாம், இன்னகுற்றங்களைப்பிடிக்க அதிகாரமில்லையென்பது, ஆளைப்பிடித்த விடத்திலேயே ஜாமீன் வாங்கவேண்டுமேயொழிய ஸ்டேஷனுக்கு யாரையும் அழைத்துக்கொண்டு போகக்கூடாதென்பது, விலங்கை அற்பக்குற்றங்களுக்கும் மானஸ்தர்களுக்கும் உபயோகப்படுத்தக்கூடாதென்பது, அபராதப்பணத்தை வசூல்செய்யப் பிரிவினையாகாத குடும்பபொதுசொத்தை ஜப்திசெய்து விற்கக்கூடாதென்பது, போலீசார் கேசை ஒளிக்கக்கூடாதென்பது, பிடித்தவர்களை அடித்துத் தொந்திரவு செய்யாமல் பிடித்த 24-மணி நேரத்திற்குள் மாஜிஸ்திரேட்டாரிடம்கொண்டுபோக வேண்டுமென்பது, முதலான போலீஸ்சம்பந்தமான அனேக இரகசியங்களும், போலீசாரை வேலைவாங்கும்படி நாம்செய்யவேண்டிய உபாயங்களும், போலீஸ், சால்ட் அப்காரிரெவினியூ உத்தியோகஸ்தர்களுடைய அக்கிரமச் செய்கைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளும் வழிகளும், இதில் பிரசுரமாகும். இதைப்படிப்பவ போலீஸ் சால்ட் முதலான உத்தியோகஸ்தர்களை ஏவல் கொள்ளலாம்; கோர்ட்டுகளில் வக்கீல், உதவியில்லாமல் தானேவாதாடலாம்; அசெசர் ஜூரர்களுக்கு அதிகஉபயோகமுள்ளது.

முன்பணம்	வருஷம்	1-க்கு	சந்தா	ரூ.	2—4—0
	6-மா	த்துக்கு	,,	,,	1—8—0

ஒரேசமயத்தில் மூன்று சந்தாதாரரைச்சேர்த்து முன்பணமனுப்புகிறவர்களுக்கு ஒருசஞ்சிகை இனாமாய் அனுப்பப்படும்.

மேற்கண்டபடி மூன்றுசந்தாதாரரைசேர்த்து முன்பணமனுப்புகிறவர்களுக்கு ஒருசஞ்சிகை இனாமாய் அனுப்புவதுடன் ரூ. 2—4—0 விலையுள்ள சீவில் லாஒன்று இனாமாய் அனுப்பப்படும்.

நியூஸ் பேப்பரைப்போல பார்த்தவுடன் எறிந்துவிடக்கூடியதல்ல, ஒவ்வொருவருஷமும் சேர்ந்த சஞ்சிகைகளை புஸ்தகமாகச் சேர்த்து வைத்துக்கொண்டு அடிக்கடி தகவலுக்குப் பார்த்துக்கொள்ளலாம்,

மானேஜர்

விவகாரபோதினி ஆபீஸ்,

நெ. 1, இராமசாமி பிள்ளைதெருவு, புரசைவாக்கம்—சென்னை.

புது கவர்ன்மெண்ட் உத்திரவுப்படி கிராம

முன்சீப்புகளுக்கு வேண்டிய

			ரூ. அ. பை.
கிரிமினல் ரிஜிஸ்டர் (40-பக்கமுள்ளது)		1-க்கு	0—5—0
சீவில் ரிஜிஸ்டர் ...	ஷெ ...	1-க்கு	0—5—0
கியாலண்டர் (பாரம்)	... ...	50-க்கு	0—6—0
சீவில் பிரதிவாதிசம்மன்	... ...	100-க்கு	0—5—0
சீவில் சாட்சிசம்மன்	... ...	100-க்கு	0—5—0
கிரிமினல் சாட்சி சம்மன்	... ...	100-க்கு	0—5—0
குற்றவாளி சம்மன்	... ...	100-க்கு	0—5—0
போலீஸ் ஸ்டேஷனுக்கு யாதாஸ்து புக்		1-க்கு	0—6—0
மாஜிஸ்ட்ரேட்டுக்கு ரிப்போர்ட்டு புக்		1-க்கு	0—6—0
பிரஸ்பட்டு மனுபாரம்	... ...	50-க்கு	0—6—0
ஜப்திக்கட்டளை பாரம்	... ...	100-க்கு	0—6—0
(பிராது) பிளெயிண்டு பாரம்	...	50-க்கு	0—6—0
வக்காலத்து நாமா	...	50-க்கு	0—6—0

☞ அனேகம் கம்பெனிக்காரர்கள் எங்களிடத்தில் வாங்கி அதிகவிலைக்கு விற்கிறபடியால் அவர்களிடத்தில் அதிகவிலைகொடுத்துவாங்கி ஏமாரவேண்டாம்.

மதுகரவேணி விலாசம் புக்டிபோ,

மதராஸ் வேப்பேரி-போஸ்டு.